"உ
ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஆடி-ஆவணி-புரட்டாதி 1994

லண்டன்
ஸ்ரீ முருகன்
தேர்த்திருவிழாச்
சிறப்பிதழ்



லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆத்மீகக் காலாண்டிதழ்

50p

உ

தென்னவன் சிவனின்
திருவருட்டிறன் சொல்லும்
தெய்வீக எழுத்துக்கள்
எத்தனையோ அத்தனைக்கும்
எங்களது ஆத்மீக வணக்கங்கள்

ஆசிரியர் குழுவும் வாசகர்களும்




93ம் ஆண்டு தேர் உற்சவத்தின் போது இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தினர் பக்தர்களுக்கு தாக சாந்தி அளிக்கின்றனர்

# கலசம்

ஆடி-ஆவணி-புரட்டாதி 1994

மணி 2 ஒலி 7

ஆசிரியர்
மு. நற்குணதயாளன்

துணை ஆசிரியர்
க. ஜெகதீஸ்வரன்
நிர்வாகத் தொடர்பு
வ.இ.இராமநாதன்
பொருளாதாரத் தொடர்பு
சிவ. அசோகன்
பொதுமக்கள் தொடர்பு
மாணிக்கம் சுரேஷ்
விற்பனை விநியோகம்
இ.முருகதாசன்
மகளிர் பகுதி
திருமதி உமா ஜெயக்குமார்
வெளியீடு
சைவ முன்னேற்றச் சங்கம்
அச்சமைப்பும் வடிவமைப்பும்
சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகம்
அச்சுப்பதிவு
செல்வம் அச்சகம்

கலசம் தொடர்பு முகவரி
**42 STONELEIGH ROAD**
**CLAYHALL, ILFORD IG5 0JD**

எமது வெளிநாட்டுத் தொடர்பாளர்கள்
திரு ரஞ்சன் செல்லையா
4/214 Beach Road,Modialloc-3195
Victoria,Australia
Tel : (03) 587 75047

திரு சு. விபுலானந்தன்
Meinertz Str-44,4400 Muenster, Germany
Tel: (49) 251 215356

திரு. க. பாலசுப்பிரமணியம்
131,Sangamitha Mawatha, Kotahena,Colombo 13
Srilanka
Tel: (941) 333411

Mr. S. Krishnan
BLK 134 Vishun St 11
# 12-157
Singapore 2776
Tel : 65 7553163

Mr. P.S. Patkunarajah
1 Rue Robert Ayle
Q 2600 Asnieres, France
Tel : 33 47914322

01-08-94

வணக்கம்.

இந்தக் கலசம் உங்கள் கைகளில் தவழும்போது லண்டன் ஸ்ரீ முருகன் வீதிவலம் வந்து கொண்டிருக்கும் அற்புதக் காட்சி உங்கள் கண்முன்னே நிகழ்ந்து கொண்டிருக்கும். ஒரு காலத்தில் உலகே வியக்குமளவுக்குத் தேரோடிய நம் சொந்த மண்ணில், இன்று துவிச்சக்கர வண்டிகள்கூட நகரத் தயங்குகின்ற துயரமான நிலைமை எமது கண்களினூடாக நெஞ்சுக்குள் புகுந்து கொண்டிருக்கின்றன.

சரி பிழைகளைத் தூக்கி ஒரு மூலையில் வைத்து விட்டுப் பார்த்தால் ஒரு துயரமான யுத்தம் சமூகத்தின் நன்மை கருதி நம் மண்ணில் நடந்து கொண்டிருப்பதை நாம் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். இந்த வரலாற்று மாற்றத்துக்கான சமூக உந்துதலில் சைவ சமயத் தத்துவங்களை மக்களுக்கு வழங்க முன்வந்துள்ள எங்களின் பங்கு என்ன என்ற நியாயமான வினா பரவலாக எழுப்பப்பட்டு வருகிறது.

எமது மண்ணிலே இளமையும் வேகமும் கைகளில் துப்பாக்கிகளாக பரிணாமம் பெற்றுள்ளன.!

ஒரு இலக்கியவாதியின் கைகளில் அவனது பேனா துப்பாக்கியாகப் பரிணாமம் பெறுகிறது.!

இந்த வகையில் சமயவாதிகளான எங்கள் பரம்பொருளை நோக்கிய பக்தி துப்பாக்கியாக பரிணாமம் பெறுவது தவிர்க்க முடியாததாகிறது!


ஆலயத்தில் நாள்தோறும் மிகுந்த பணச் செலவில் பிள்ளை, மனைவி, அப்பா, அம்மா ஆகியோரின் சேமம் குறித்து ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்கிறோம். ஆனால் என்றாவது ஒரு நாள் நம் நாட்டில் உயிரை இழந்து கொண்டிருக்கும் மக்களின் ஆத்ம சாந்திக்காக அபிஷேகம் செய்திருக்கிறோமா என நெஞ்சைத் தொட்டுக் கேட்டுப்பாருங்கள்.

இல்லை என்ற பதில்தான் கிடைக்கும்.

ஆத்மீக வாதிகளான நாம் எமது சமூகத்துக்குச் செய்யக் கூடிய ஆகக் குறைந்த பணி இதுவாகத்தான் இருக்க முடியும்! இனிமேலாவது இதனைச் செய்வோம்


நன்றி.

மு. நற்குணதயாளன்




# செல்வோம் கயிலை மலை பெறுவோம் சிவன் அருளை

-சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள்-



எங்கு பார்க்கினும் பனியினால் மூடப்பட்ட வெள்ளைநிறப்பிரதேசம். ஆள்நடமாட்டமில்லாத ஒழுங்கற்ற சாலை. உடலைக் குத்துகின்ற கடும் குளிர். கடந்த ஏப்பிரல் மாதம் 23ஆம் திகதி சனி பிரதோஷதினம்.



மாலை 6 மணி. மனதிலே இனம் புரியாத படபடப்பு. வாய் பஞ்சாட்சர மந்திரத்தை இடைவிடாது முணுமுணுக்கிறது. கண்களிலே ஏதோ ஒரு பெரிய எதிர்பார்ப்பு. அடிக்கடி சுயநினைவு வந்து நடப்பது நிஜம் தானா என்ற சந்தேகம். நிஜமானால் உடனே இறையருளை எண்ணி வியப்பு. 'வேன்' ஓடிக்கொண்டிருக்கிறது. ஓட்டுனர் அருகே அமர்ந்திருந்த திபேத்திய வழிகாட்டி திடீரென்று கூவுகிறான். ஆங்கிலத்தில் அதோ கயிலை மலை பாருங்கள் என்று. எங்கே?, எங்கே? எங்கே? என்று வழிகாட்டி கைநீட்டிய இடத்தை உற்று நோக்குகின்றோம். பனி படர்ந்த பெரிய மலைகளுக்கு நடுவே நடுநாயகமாகத் தெரிந்தது கயிலை மலை. மனம் ஆனந்தத்தில் கூத்தாடுகிறது. அனைவரும் ஒரே குரலில் கூவுகின்றோம். கண்டோம்! கயிலையைக் கண்டோம்!

கயிலையைக் கண்டோம்! கண்களில் தாரை தாரையாக கண்ணீர் வழிகின்றது. இது தான் ஆனந்தக் கண்ணீரோ!! தேவர்களும் ரிஷிகளும் நாயன்மார்களும் பெரியோர்களும் இப்படித்தான் அனுபவித்தனரோ! மனதெல்லாம் மகிழ்ச்சி நமது முன்னோர் செய்த புண்ணியத்தின் பலன் தான் இதுவோ! என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே என்று தடுமாற்றத்தோடு பாடுகின்றோம். போதும் போதும் இந்த காட்சியே போதும். இந்த ஜன்மம் கடைத்தேறுவது நிச்சயமா கிவிட்ட நிலையில் வேறென்ன வேண்டும். இறைவா எதுவும் வேண்டாம். இதுவே போதும் என் ஐயனே.ஆகாயத்திலே நிலையில்லாது ஒரே சீராகச் சுற்றிக்கொண்டிருக்கின்ற இந்தப் பூமிக்கு சுழலுவதற்கு ஆதாரமாக அச்சு ஒன்று நிச்சயம் இருக்கவேண்டும். ஆன்மாக்களின் பதியாகிய பரமசிவன் உறைகின்ற திருக்கைலாயபதியே இந்த அச்சு போன்ற இடமாகும். உலகத்தின் கூரை என்று அழைக்கப்படும் திபேத்திய நாட்டின் மேற்குப் பகுதியில், உலகத்தின் மையமான இடத்தில் சுற்றிலும் மலைகளால் சூழப்பட்ட புனிதமான இடமே திருக்கயிலாயமாகும். வேதகாலத்திற்கு முன்னரே போற்றப்பட்ட இடம். தேவர்களும் ரிஷிகளும் எப்போதும் வாசம் செய்யும் ஸ்தலம். நாயன்மார்களும் பெரியோர்களும் என்றைக்காவது ஒரு நாளாவது இந்த இடத்திற்கு வந்து வழிபடமாட்டோமா என்று நினைந்து நினைந்து உருகிய ஷேத்திரமாக இது விளங்குகின்றது.

இதே ஏக்கத்தோடு தான் லண்டனிலிருந்து நானும் லண்டன் ஸ்ரீமுருகன் கோயில் தர்மகர்த்தாக்களில் ஒருவரான திரு ரத்னசபாபதி அவர்களும் யாழ்ப்பாணம் சுழிபுரத்தைச் சேர்ந்தவரும் லண்டனில் நகர நிர்வாக சபையில் பணியாற்றுபவருமான திரு சக்திவேல் அவர்களும், முதலில் நேபாள நாட்டிற்குச் சென்று பசுபதி நாதரைத் தரிசனம் செய்துவிட்டு, பின்பு விமான மார்க்கமாக நேபல்கஞ்சி வழியாக சிமிக்கோட் வரை சென்று



அங்கிருந்து நடைப்பயணமாகவும், குதிரைச் சவாரி செய்தும் 23ஆம் திகதி மாலை 4 மணிக்கு மானஸஸரோவரமத் என்ற தீர்த்தக் கரையை அடைந்தோம். எந்த இடத்தில் கயிலையை நினைக் கிறோமோ உடனே தானாகவே மானஸஸரோவர் நினைவிற்கு வரும். ஏனெனில் கயிலை சிவனின் வடிவம். மானஸ்ஸரோவம் சக்தியின் வடிவம். கயிலையோ கருங்கல்லாலானது. மானஸஸ ரோவரோ இளகிய நீர் வடிவானது. இதுவும் கூட தந்தையின் கண்டிப்பையும் தாயின் இரக்க குணத்தையும் உணர்த் துகிறதோ!

நாங்கள் சென்ற போது கடுங்குளிர் சம யமானதால் மானஸ ஸரோவர் பனிக்க ட்டியால் மூடப்பட்டிருந்தது. பனிக்க ட்டியைக் கையால் ஒதுக்கி கீழேயுள்ள அமிர்தமயமான அந்த நீரில் ஸ்நானம் செய்த போது ஏற்பட்ட அந்த உணர்ச்சி வர்ணிக்க முடியாது. இந்த நீரின் மேல் தங்க நிறமான சிறு சிறு அன்னப் பட்சிகள் நீந்தி விளையாடுகின்றன. அன்று இரவே கயிலை அடிவாரத்திலுள்ள தர்சன் என்ற இடத்தை அடைந்து தங்கினோம். அடுத்து கயிலையின் சுற்று வழியில் தெற்குப்பக்கத்தில் கயிலையின் சிகரத்தை மிக அருகே தரிசனம் செய்கின்ற இடத்தில் கலசங்கள் வைத்து சிவசக்தியை ஆலாபரணம் செய்து, வேதாகமங்கள் ஓதி, தேவாரத்திருமுறைப் பாராயணம் செய்து சிறப்பு வழிபாடுகள் செய்தோம். அத்தோடு நமக்குத் தெரிந்தவர்கள் அனைவரையும் நினைந்து எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டி இறைவனை வணங்கினோம். இதுபோன்று பல இடங்களில் பூசைகள் நடத்தி வழி பட்டோம்.

கயிலையைச் சுற்றி வரும் வழியில் சில இடங்களில் பெரிய திருக்கோயிலினுடைய மதிற்சுவர்கள் போன்ற அமைப்புக்கள் காணப்படுகின்றன. ஆழ்ந்து யோசித்த எனக்கு இங்கு பல்லாயிரம் ஆண்டு களுக்கு முன்பு உலகத்திற்கே மிகப்பெருங் கோயிலாக திருக்கயிலாயம் இருந்திரு க்க வேண்டும். காலப்போக்கில் இயற் கையின் மாறுதலினால் கயிலாயப் பெருங் கோயில் கயிலைமலையாக வடிவெடுத்தி ருக்க வேண்டும். இதனுள்ளே புதைந்தி ருக்கும் அருட்புதையலை யாரறிவார். கயிலையிலே பௌத்தர்களால் கட்டப்பட்ட சிறு சிறு மானஸ்ரீ (விஹாரர்) க்களைத் தவிர நமது சம்பிரதாய கோயில்கள் எதுவுமில்லை. அங்கே எதுவுமில்லை என்பது தான் விஷேஷம். உலகத்திலுள்ள எல்லாமே மாயை தான். இறையுணர்வால் ஏற்படக்கூடிய மனச்சாந்தியைத் தவிர வேறொன்றுமே நமக்குப் பயன்தராது என்பதை அறிவுறுத்தவே இறை ஒன்று மில்லாத நிலையில் அமர்ந்து ஆட்கொள் ளுகின்றான். சூரியோதய சமயத்தில் பொன் னிறமாகவும் பகல் உச்சி நேரத்தில் தகதகக்கும் வெள்ளி நிறமாகவும் சூரிய அஸ்தமன மாலைவேளையில் மனங்கவர் செம்மை நிறமாகவும் ஒளி வீசி அருள் செய்யும் இறைவனை, அந்த கயிலை மலை நாதனை பிறவிப்பெருங் கடலில் நீந்தித் தவிக்கும் நம்மைக் கரைசேர்க்க வல்லானை, உமையொரு பாகனை விடையேறும் வேந்தனை சித்திரப் பௌர்ணமி அன்று கண்டு நின்றோம். பிறவிப்பயனை அடைந்து நின்றோம். அந்த அனுபவங்களை உங்களுக்குச் சொல்லி நின்றோம். கயிலைமலையானின் நல்லாசிகள் நம் எல்லோர்க்கும் கிடைக்க வேண்டி அவன் கழலடிகளைப் பணிந்து போற்றி நின்றோம்.

## இரு முடிகட்டின் தத்துவம்

சபரிமலைக்குச் செல்பவர்கள் 41 நாள் விரதமிருந்து இருமுடிக்கட்டு கட்டிக்கொண்டு மலைக்குச் செல்கிறார்கள்.

அந்த இருமுடிக்கட்டின் அர்த்தம் பின்வருமாறு.

தேங்காய் : நார்கள், ஓடு, மூன்று கண்கள், தூயவெள்ளை, பருப்பு இளநீர்,ஆகியவைகளைக் கொண்டது. வழுவழுப்பான மேல் பாகம் நார்களால் போர்த்தப்பட்ட ஓட்டினைக் கொண்டது.ஓட்டின் உச்சியில் மூன்று கண்கள். ஓட்டினால் மூடப்பட்ட வெள்ளை பருப்பு.

தூயஉள்ளம் - தேங்காய் பருப்பு
மும்மலம்- மூன்றுகண்கள்
மும்மலக்கோட்டை- ஓடு
குற்றங்கள்- நார்

ஐயப்ப அன்பர்கள் வெள்ளை உள்ளம் படைத்தவர்கள்.களங்கத்தால் புரிகின்ற குற்றங்களை ஒரே நாளில் அகற்ற முடியாது.படிப்படியாக அகற்றவே விரதத்தை மேற் கொள்ளுகின்றனர்.

## குறித்து வைக்கவேண்டிய விரத தினங்கள்

| | |
|---|---|
| 7-8-1994 | ஆடி அமாவாசை விரதம் |
| 9-8-1994 | ஆடிப் பூரம் |
| 10-8-1994 | நாக சதுர்த்தி விரதம் |
| 12-8-1994 | சஷ்டி விரதம் |
| 17-8-1994 | ஏகாதசி விரதம் |
| 18-8-1994 | பிரதோஷ விரதம் |
| 19-8-1994 | நடேசர் அபிஷேகம் |
| | வரலக்ஷ்மி விரதம் |
| 20-8-1994 | பூரணை விரதம் |
| | ஆவணி ஓணம் |
| 25-8-1994 | சங்கடகர கணபதி விரதம் |
| 28-8-1994 | கார்த்திகை விரதம் |
| 29-8-1994 | ஜன்மாஷ்டமி, ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி |
| 1-9-1994 | ஏகாதசி விரதம் |
| 3-9-1994 | சனிபிரதோஷம் |
| 5-9-1994 | அமாவாசை விரதம் |
| 9-9-1994 | விநாயக சதுர்த்தி விரதம் |
| 10-9-1994 | சஷ்டிவிரதம் |
| 13-9-1994 | ஆவணி மூலம் |
| 15-9-1994 | பரிவர்த்தன ஏகாதசி விரதம் |
| 16-9-1994 | வாமண ஜயந்தி |
| 17-9-1994 | சனிப்பிரதோஷ விரதம் |
| | புரட்டாசி சனி 1ஆம் கிழமை |
| 18-9-1994 | நடேசர் அபிஷேகம் |
| | அனந்த விரதம் |
| 19-9-1994 | பூரணை விரதம் |
| | உமாமகேஸ்வர விரதம் |
| 20-9-1994 | மாகாலய பட்ஷ ஆரம்பம் |
| 23-9-1994 | மகாபரணி |
| 24-9-1994 | கார்த்திகை விரதம் |
| | புரட்டாசி சனி 2ஆம் கிழமை. |
| 25-9-1994 | கபில சஷ்டி |
| 1-10-1994 | ஏகாதசி விரதம் |
| | புரட்டாசி சனி 3ஆம் கிழமை |
| 2-10-1994 | பிரதோஷ விரதம் |
| 3-10-1994 | கேதாரேஸ்வர விரதம் |
| 4-10-1994 | அமாவாசை விரதம் |
| | மகாலய பட்ஷ முடிவு. |
| 5-10-1994 | நவராத்திரி விரத ஆரம்பம் |
| 8-10-1994 | சதுர்த்தி விரதம் |
| | புரட்டாதி சனி 4ஆம் கிழமை |
| 10-10-1994 | சஷ்டி விரதம் |
| 11-10-1994 | சரஸ்வதிப் பூசை ஆரம்பம் |
| 13-10-1994 | மகாநவமி சரஸ்வதி பூசை |
| 14-10-1994 | விஜயதசமி சமி விருட்ஷ பூசை, கேதாரகௌரி விரதஆரம்பம் |
| 15-10-1994 | ஏகாதசி விரதம் |
| | புரட்டாசி சனி கடைசிக்கிழமை. |
| 16-10-1994 | பிரதோஷ விரதம் |
| 19-10-1994 | பூரணை விரதம் |
| 21-10-1994 | ஐப்பசி வெள்ளி 1ஆம் கிழமை. |
| 22-10-1994 | கார்த்திகை விரதம் |
| 28-10-1994 | ஐப்பசி வெள்ளி 2ஆம் கிழமை |
| 30-10-1994 | ஏகாதசி விரதம் |

தொகுப்பு : அமுதா

தொடர் கட்டுரை

# ஆடல் காணீரோ!

## வெள்ளையானையின் சாபம் தீர்த்த திருவிளையாடல்

வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன்



முத்தித் தலங்கள் ஏழினுள் முதன்மை இடத்தைப் பெற்ற காசியில் எழுந்தருளும் விசுவநாதப் பெருமான் துருவாச முனிவரின் பக்திக்கு மெச்சி தனது திருமுடியினின்றும் பொன்மலரான தாமரை மலரை அவருக்கு அளித்தார். முனிவர் கோனும் இறைவனுடைய அளப்பரிய கருணைக்கு வியந்து மலரைப் பெறற்கரும் பேறாகக் கருதிப் பெற்று விண்ணுலகை அடைந்தார். அப்போது கற்பக நாட்டுக் காவலனான தேவேந்திரன் ஐராவ தத்தின் மீது அமர்ந்து பவனி வந்து கொண்டிருந்தான். துருவாச முனிவர் சிவப்பிரசாதமாகிய மலரைத் தனது அன்பு க்குரிய அமரர்கோனுக்கு அளித்தார்.

செல்வச் செருக்கினாலே மமதையுற்ற இந்திரன் மலரை ஒருகையால் வாங்கி யானையின் மீது வைக்க அறிவற்ற அந்த யானையும் மலரைக் கீழே தள்ளி காலினால் மிதித்துத் தேய்த்தது. சினங்கொண்ட துருவாசர் அமராபதிக் காவலனே "கிடைத்தற் கரிய சிவப்பிரசாதத்தை அவமதித்து விட்டாயே! அளவற்ற உனது செல்வம் உனது அறிவுக்கண்ணை மூடிவிட்டதே! நீ பெற்ற இச்செல்வமும் பெருவாழ்வும் பிறைமௌலிப் பெருமான் இட்ட பிச்சையல்லவா?

**வண்டுளருந் தண்துழாய் மாயோன் இறுமாப்பும்**
**புண்டரிகப் போதுறையும் புத்தேள் இறுமாப்பும்**
**அண்டர்தொழ வாழ்உன் இறுமாப்பும் ஆலாலம்**
**உண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால்**

தேவேந்திரா! உனது முடி பாண்டியர் வழிவந்த ஒரு வீரனுடைய வளை(திகிரி)யினாலே சிதறட்டும். நான்கு கொம்புகளைக்கொண்ட இந்த ஐராவதமும் காட்டானையாகட்டும்" என்று சபித்தார்.

இதனைக் கேட்ட தேவர்கள் நடு நடுங்கி "ஐயனே! எம் அரசனும் வெள்ளை யானையும் செய்த இக்குற்றத்தைப் பொறுத்துச் சாபத்தை நீக்கியருள வேண்டும்" என்று இறைஞ்ச மனமிரங்கிய முனிவரும் "தேவர்கோனின் தலைக்கு வந்த வினை மகுடத்துடன் போகட்டும் . வெள்ளை யானையும் காட்டானையாக நூறு ஆண்டுகள் திரிந்த பின்பு பழைய உருவினைப் பெறட்டும்" என அருளினார்.

வெள்ளிப் பனிவரையென ஒளி வண்ணங்களைக் கொண்ட ஐராவதமும் செருக்கழிந்து அழகழிந்து அறிவழிந்து கருநிறமுடைய காட்டானையாகி நூறு ஆண்டுகாலம் நிலவுலகில் உழன்றது. சாபம் நீங்கும் நேரம் வர அந்த யானை கடம்ப வனத்துள் புகுந்தது. அங்கு மரகத வண்ணமான இலைகள் தழைத்துப் பொன்னிறமான தாமரைகள் மலர்ந்த தடாகத்தைக் கண்டது. அதனுள் இறங்கி நீராடினது. என்ன ஆச்சரியம்! காட்டானை வடிவு நீங்கிக் கண்டவர் வியக்கும் தன் முந்தைய வடிவம் பெற்றது. தன் துதிக்கையால் நீரை முகந்து சொக்கலிங்கப் பெருமானை திருமுழுக்காட்டியது.

ஐராவதத்தின் அன்புக்கு மகிழ்ந்த சோமசுந்தரப் பெருமானும் அதற்குக் காட்சி கொடுத்து வேண்டும் வரங்களைக் கேட்பாயாக எனப் பணித்தார். யானைக்கு அருள் செய்த இந்த அற்புதத்தை, "முக்திக்குழன்று முனிவர் குழாம் நனிவாட அத்திக்கு அருளி அடியேனை ஆண்டு கொண்டு" என்னும் திருத்தெள்ளேண வரிகளால் உணரலாம். மாதங்கமும் மங்கையொரு பாகனை நோக்கி, "ஐயனே! உனது விமானத்தைத் தாங்கும் எட்டு யானை களோடு அடியேனையும் ஒன்பதாவது யானையாகச் சேர்த்துக்கொண்டு உனது திருமேனியைச் சுமக்கும் பேற்றை அருள வேண்டும்" என்று பிரார்த்திக்க, இறைவனும் நம்மிடத்து மெய்யன்பு பூண்டவனாகிய தேவேந்திரனை நீ சுமப்பதே எமக்குப் பெருமகிழ்வளிக்கும் என்று திருவாய் மலர்ந்து ஆசியருளினார்.

பின்பு வெள்ளையானையும் சோமசுந்தரப் பெருமானை வணங்கி விடைகொண்டு மேற்குத் திசையிலே ஐராவதத் தீர்த்தத்தை ஏற்படுத்தி ஐராவதேச்சுரரையும் ஐராவத கணேசரையும் பிரதிட்டை செய்து வழிபட்டு வந்தது. தேவேந்திரனின் ஏவலால் ஏவலாளர் வெள்ளையானையை அழைத்துக்கொண்டு அமரருலகம் செல்ல, கிழக்குத் திசையிலே தன் பெயரால் 'ஐராவதபுரம்' என்னும் நகரையுண்டாக்கித் தனது தலைவனாகிய இந்திரன் பெயரால் 'இந்திரேசுரர்' என்னும் இலிங்கத்தையும் தாபித்து விண்ணாடு அடைந்தது.

---

**வீட்டிலுள்ள இரு தெய்வங்கள்**

ஒவ்வொரு குடும்பத்திலும் இரண்டு வடிவங்களில் இறைவனை நாம் காணமுடியும். நம்மை வளர்த்து ஆளாக்கி நமக்காக எல்லாத் தியாகங்களையும் செய்த தாய் முதல் தெய்வம் ! நம்மை காத்து வளர்த்து எல்லா வசதிகளையும் அளித்து உருவாக்கிய தந்தை இரண்டாவது தெய்வம் !!

# நமச்சிவாய மந்திரம்

~ மு. சிவராசா ~



சிவபெருமானுக்குரிய மந்திரங்களுள் தலையாயது நமச்சிவாய என்ற ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரம். இது திருவைந்தெழுத்து எனப்படும். இதுவே சிவமூல மந்திரம் என போற்றப்படுவது. மன்- நினைத்தல் , திரம்- காப்பது. நினைப்பவரைக் காப்பது மந்திரம். எந்த மந்திரத்தையேனும் உளமார ஒருவர் செபித்தால் அது தவறாமல் அவரைக் காக்கும்.

மந்திரங்கள் ஏழுகோடி என்பர். இங்கே கோடி என்பது நூறு லட்சம் என்ற எண்ணிக்கையைக் குறிப்பதல்ல. கோடி என்பது ஓர் அந்தலை. - ஒரு தொடக்கம் அல்லது முடிவு ஆகும். அவன் வீடு தெருக்கோடியிலே இருக்கின்றது என்று சொல்லும் போது தெருவின் முடிவிலே அது இருக்கின்றது என்று விளக்குகின்றது. அவ்வாறே மந்திரத்தின் கோடி என்பதும் குறித்த நாமத்தின் முதலில் அல்லது முடிவில் உள்ள பதம் என்று பொருள். நமச்சிவாய என்பதன் முதல் *நம*. சிவாயநம என்பதன் முடிவு *நம*. ஆக *நம* என்பது முதலில் அல்லது முடிவில் வருவது தெளிவு மந்திரங்களின் ஒரு கோடி *நம*. ஏழு கோடி மந்திரங்களின் ஏனைய ஆறு கோடிகளும் வருமாறு: சுவாஹ, ஸ்வதா, வசட், வௌசட், ஹூம், பட் . எனவே ஏழு கோடி மந்திரங்கள் என்றால் இறைவன் நாமத்தோடு இந்த ஏழு அந்தலைகளில் ஒன்றைச் சேர்ப்பதால் ஆவது என்பது புலப்படும். இவ்வேழுகோடிகளுள் ஒன்றையேனும் கொண்டிராத சொல் மந்திரமாகாது என்பதை அருத்தா பக்தியால் அறியலாம். நமச்சிவாய தூலபஞ்சாட்சரம் எனவும் சிவாயநம சூக்கும பஞ்சாட்சரம் எனவும்படும். இந்த மந்திரத்தின் பொருள் என்ன என்று பார்க்கலாம். சிவாயநம என்ற திருவைந்தெழுத்தில் ஒவ்வோர் எழுத்தும் ஒவ்வொரு பொருளைக் குறிக்கும் என்று சைவ சித்தாந்த நூல்களில் கூறப்படுகின்றது. சி -சிவம்.வ- அருட்சக்தி, ய - ஆன்மா, ந-திரோதான சக்தி, ம-மலம், உயிர் செய்த நல்வினை தீவினைகளின் பயனை அது அனுபவிக்கும்படி கூட்டுவது திரோதான சக்தி.

மலம் என்பது ஆன்மாவைப் பாதித்துள்ள ஆணவம். கன்மம், மாயை என்பன.ஆன்மா-பசு, பசுவாகிய ஆன்மாவின் இரு வினைகளும் ஒத்த நிலையில் அருட்சக்தியின் தொழில் தொடங்கும். பசுவை பதியோடு சேர்ப்பதே அதன் தொழில். எனவே 'ம' வும் 'ந' வும் விலகிப் போக 'ய' வை 'சி' யோடு சேர்க்கின்றது 'வ'. இதன் பின் பதியோடு பசு இரண்டறக் கலக்கின்றது. இதுவே முக்தியாகும். சிவாயநம மந்திரத்தை முறையாகச் செபிப்பவர் முத்தியடைவர்.

எழுத்துப் பொருள் இவ்வாறாக

சொற் பொருளை இனிக் காணுவோம். சிவாய நம என்ற சொற்றொடர் சிவாய -நம என இரண்டாகவும் சிவாய - ந-ம என மூன்றாகவும் பிரிக்கப்படலாம். இரண்டாகப் பிரிக்கும் போது சிவாய என்பது சிவனுக்கு *நம* என்பது வணக்கம் எனவும் பொருள்படும். சிவாயநம மூன்று சொற்களைக் கொண்ட சொற்தொடராகும் போது சிவாய என்பது சிவனுக்கு ந என்பது இல்லை என்றும் ம என்பது மக் என்பதன் குறுக்கம் என்பதையும் அறிவோம். இப்போது மூன்று சொற்களின் கருத்தையும் ஒன்று சேர்த்துப் பார்த்தால் எனது இல்லை சிவனுக்கு எனவாகும். எப்பொருளுக்கும் உரிமை கோரக்கூடியன பதி பசு இரண்டுமே. பசு யாதாயினும் ஒரு பொருளை எனது இல்லை என சொன்னால் அதை உடைமையாகக் கொண்டுள்ளது பதி என்பது தெளிவு.எனவே எனதில்லை எனும் போது உனது ஆகின்றது. சிவனுடைய பொருளை சிவனுக்கே அர்ப்பணம் செய்கின்றது பசு. சிவபெருமான் திருவடியில் ஒரு மலரை சிவாயநம என்று சொல்லியிடும் போது சிவனுடைய மலர் அவனுக்கே தருகின்றேன் எனப் பொருள்படுகின்றது. இந்த உணர்வு கைவரப் பெற்றால் உலகில் உள்ளன யாவுமே சிவனுடையன எனவும் அவை எல்லாவற்றையுமே அவனுக்கு அர்ப்பணிக்கின்றேன் எனவும் கொள்ளும் மெஞ்ஞானம் ஆத்மாவுக்கு உதயமாகின்றது.எனது என்கின்ற நிலை விலகிவிடுகின்றது அதே போல ஆன்மா தன்னையே இறைவனுக்கு அர்ப்பணிக்கும் போது அகங்காரம் நீங்குகின்றது. அப்போது யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் என்ற திருவள்ளுவர் வாக்கு சித்திக்கும்.

**நாஸ்திகர் என்பவரும் ஏதோ ஓர் உயர்தன்மையில் நம்பிக்கை வைப்பவர்தாம். அந்த உயர் தன்மையே அவர்களால் வணங்கப்படும் இறைமை ஆகும்.**

# YOU KNOW WE CAN HELP YOU WITH


Abbey Life Assurance Co. Ltd. is a member of LAUTRO and ABI.

Abbey Life

**LIFE ASSURANCE**

**AND PENSIONS**

**MAY WE NOW SUGGEST SOME IMPORTANT ADDITIONS**



**Mortgages, Savings Plans, Investments, Private Health Care and advice on Inheritance Tax.**
Just some of the ways our financial services expertise can help you.
For free, strictly confidential advice, contact me now.
And as you would be under no obligation Whatsoever it all adds up to a sound move.
For full details contact:

Mr E (Selva) Selvadurai BA(Econ)Hons
Member of the Life Insurance Association
Company Representative Senior Sales Manager
Whitgift Branch
Abbey Life House
51 Wandle Road Croydon
Surrey CR9 1RT
Tel: 081 401 0000/Home 081 684 8509

# TAKE A POSITIVE STEP


## TAKE 30 MINUTES TO TALK TO US

We're looking for confident, ambitious men and women to forge new business opportunities.
The positive qualities of highly excellent career prospects and genuine social enhancement.
We would need to meet first. But show us that you've got what it takes to be a successful self employed financial adviser and we'll provide you with a thorough training programme.
Let your optimistic nature and selling talents work for you.
Be really positive. Get in touch with me now.

* Full training programme
* Previous experience not necessary
* Candidates preferably between 25 and 60.

For details contact:

Mr E (Selva) Selvadurai BA(Econ)Hons
Member of the Life Insurance Association
Company Representative Senior Sales Manager
Whitgift Branch
Abbey Life House
51 Wandle Road Croydon
Surrey CR9 1RT
Tel: 081 401 0000/Home 081 684 8509
Fax : 081 686 6268



Abbey Life Assurance Co. Ltd. is a member of LAUTRO and ABI.

Abbey Life

# மனைவி எனும் அருளமுதம்



இசை மேதைகளால் கர்நாடக சங்கீதத்திற்கு ஆதி குரு என்றும், சங்கீத பிதாமகர் என்றும் புகழப்படுபவர் புரந்தரதாசர். இவர் 1484ஆம் வருடம் ஹம்பி நகரத்திற்கு அருகில் உள்ள புரந்தர கட என்ற ஊரில் பிறந்தார். தாயார் கமலாம்பாளும் கோடீஸ்வரரான தந்தை வரதப்ப நாயக்கரும் இவருக்கு ஸ்ரீநிவாஸன் என்று பெயரிட்டனர். இவர் சிறுவயதிலேயே கன்னடம் சமஸ்கிருதம் முதலிய மொழி களையும் சங்கீதத்தையும் கற்றுத்தேர்ந்தார். பெற்றோர்கள் இவரது பதினாறாவது வயதில் சரஸ்வதிபாய் என்ற பெண்ணை இவருக்கு மணம் செய்து வைத்தார்கள். பெயருக்கு ஏற்ப அவளும் குணத்திலும், அறிவிலும், அழகிலும் சரஸ்வதியாகவே விளங்கினாள். அவள் அறிவிற் சிறந்த குடும்பத்திற் பிறந்ததால் பணத்தை விட அறிவுள்ள பெரியோரைப் போற்றி வந்தாள். ஏழைகட்காக இரங்கினாள்.

புரந்தரதாசர் அவரது இருபதாவது வயதில் பெற்றோர்களை இழந்தார். அதனால் தந்தையின் வைரவியாபாரத்தை அவரே தொடர்ந்து செய்துவந்தார். நவரத்தின வியாபாரியாகவும் கோடீஸ்வரராகவும் இருந்ததால் 'நவகோடிநாராயணன்' என்ற பெயரும் அவருக்கு ஏற்பட்டது. இப்படி பணத்தில் மிதந்தும், நகையடகு வியா பாரத்தில் சிறிதும் மனிதாபிமானமில்லாமல் வட்டி வசூலித்தும் வந்தார். அத்துடன் ஒன்றும் ஈயாத கஞ்சனாகவும் இருந்தார். இவரின் இக்குணக்கேடுகளைக் கண்ட மனைவி சரஸ்வதிபாய் மனம் நொந்து அழுதாள். சொல்லியும் பார்த்தாள். அவர் திருந்தவேயில்லை. அவள் சொல்லச் சொல்ல அதனைப் பொருட்படுத்தாமல் கோடி கோடியாகப் பணம் சேர்ப்பதே வாழ்வாகக் கொண்டார்.

இதனால் பண்டரிநாதரே சரண் என வணங்கி வரலானாள். பண்டரிநாதரும் அவள் துன்பத்தை நீக்கத் திருவுளம் கொண்டார். ஒருநாள் ஓர் அந்தணர் புரந்தரதாசரின் நகைக்கடைக்கு வந்து தன் மகனின் உபநயனத்திற்காக பணம் கேட்டார். தாசரும் நாளைக்குத் தருவேன் எனக்கூறி அந்தணரைப் பலநாள் ஏமாற்றினார். இதனால் வெறுப்படைந்த அந்தணர் புரந்தரதாசர் வீட்டிற்குச் சென்று சரஸ்வதிபாயைக் கேட்டார். அவளும் தான் பிறந்த வீட்டிலிருந்து சீர்தனமாக அணிந்து வந்த வைரமூக்குத்தியைக் கழற்றிக்கொடுத்தாள். நாடகமாட அந்தணராக வந்த பண்டரிநாதரும் அவ்வைர மூக்குத்தியை விற்கத் தாசரிடமே சென்றார். அம் மூக்குத்தியை அடையாளம் கண்ட தாசர் அந்தணனை ஓர் அறையில் வைத்துப் பூட்டினார். பின் வீட்டிற்குச் சென்று மனைவியிடம் "மூக்குத்தி எங்கே?" என்று அதட்டிக் கேட்டார்.

அவர் கோபத்துடன் நரசிம்ம அவதாரமாய் நிற்கும் நிலைகண்டு சரஸ்வதிபாய் பயந்தாள். கஞ்சமகாபிரபுவான கணவரிடம் வைரமூக்குத்தியை அந்தணருக்குக் கொடுத்தேன் என்று சொல்வதைவிட இறப்பதே நன்று என்ற முடிவுக்கு வந்தாள். ஒரு கிண்ணத்தில் விஷத்தை எடுத்து குடிக்கப்போனாள். அந்தக் கிண்ணத்தினுள் மூக்குத்தி ஒன்று பளிச்சிட்டது. அதனை எடுத்து தாசரிடம் கொடுத்தாள். இரு மூக்குத்திகளும் அமைப்பிலும் மதிப்பிலும் ஒன்றாகவே இருப்பதைக் கண்டு அவர் திகைத்தார். 'இது எப்படி வந்தது?" என்றார். "பண்டரிநாதர் அருள்" என்றாள் அந்த அருள் மாது. சிறிது நேரத்தில் மூக்குத்தியும் மறைந்தது. பூட்டிவைத்திருந்த அந்தணரும் மறைந்தார். பெண்தானே என தன்னால் புறக்கணிக் கப்பட்ட தன் மனைவிக்காக பண்டரிநாதரே அந்தணராக வந்ததை எண்ணி எண்ணி நெஞ்சம் நெகிழ்ந்தார். இதனால் அறிவுத் தெளிவு பெற்ற புரந்தரதாசர் தன் மனைவி ஓர் அருளமுதம் என்பதை நன்கு உணர்ந்தார். மனைவியைப் பற்றி ராகமாலிகையில் அமைந்த அனுகாவவு சிந்தெ என்னும் கீர்த்தனையின் முதலாவது சரணத்தில்

ஸதிஇத்தரு சிந்தெ ஸதியில்லத சிந்தெ
மதிகீன ஸதியாதரு சிந்தெயு
பிருதிவி யொளகெ ஸதிகடு செல்வெயாதரெ
மதிமேரே இல்லித மோகத சிந்தெ

என மிக அழகாக அவரே பாடுகின்றார். மனைவியின் விருப்பப்படி செல்வத்தை எல்லாம் ஏழைகட்கு வாரிவழங்கினார். பின்னர் மனைவியுடன் திருக்கோவில்களுக்குச் சென்று வழிபட்டார். எளிய நடையில் அமைந்த தத்துவங்கள் நிறைந்த பாடல்களை இயற்றினார். சரஸ்வதிபாய் என்ற அருளமுதத்தைச் சுவைத்ததால், மணந்ததால் நான்குஇலட்சத்து எழுபத்து ஐயாயிரம் கன்னட மொழிப்பாடல்களை புரந்தரதாசரால் பாடமுடிந்தது.

பொருளாசையால் மகா கஞ்சனாக இருந்த ஒருவரை மாபெரும் இசை மேதையாக இன்றைய கர்நாடக இசையுலகின் தந்தையாக உலகிற்கு உவந்தளித்த பெருமை புரந்தரதாசரின் மனைவியெனும் அருளமுதமாம் சரஸ்வதிபாயையே சாரும்

சாலினி

**இறைவன் திருநாமம் பிறவியை அறுக்குமா?**


ஆம். இறைவன் திருநாமத்தை காதலாகி கசிந்து உருகி ஓதுவதால் ஒருவர் எல்லாவிதமான பாவங்களிலிருந்தும், தீவினைகளிலிருந்தும் விடுபடமுடியும். பிறவிப் பிணியும் கூட ஒழிந்து போகும்.

" பகவானின் திருநாமத்திற்கு எத்தனை பாவங்களைப் போக்கக்கூடிய சக்தி உண்டோ, அத்தனை பாவங்களை நம்மால் செய்ய முடியவில்லை " என்று பிரகலாதன் குறிப்பிட்டான். இறைவன் எவ்விதம் எல்லை அற்றவனோ, அது போல் இறைவன் நாம மகிமையும் எல்லையற்றது.

" எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு" என்றார் திருவள்ளுவர். அந்த மெய்ப் பொருள் எது?

வேத நான்கினும் மெய்ப் பொருளாக விளங்குவது எது ? இறைவன் திருநாமந்தான். நாதன் நாமம் நமச்சிவாயவே. அந்த நலம் தரும் சொல்லை வாயாரச் சொல்பவர்கள் நிலமிசை நீடு வாழ்வார்.

# ஆன்மீகம்



அறம்,பொருள், இன்பம், வீடு என்கின்ற நான்கு பேறுகளைப் பெறுவதற்கு வழிவகுப்பதே சனாதன தர்மம் என்கின்ற நமது இந்து மதத்தின் நோக்கமாகும்.

வாழ்க்கையில் மனிதன் பெற்றுய்ய வேண்டிய இந்த நான்கு பெருநிலைகளைப் 'புருஷார்த்தம்' என்று வட மொழியில் பகர்வார்கள். ("அர்த்தம்" என்கின்ற சொல்லுக்கு "வேண்டுமென்று நினைத்தல்" என்று பொருள்)மனிதர்களாகப் பிறந்தவர்கள் தமக்கு வேண்டுமென்று எதை நினைக்கின்றார்களோ அவைகள் தாம் 'புருஷார்த்தம்' எனப் படும். மனப்பாகுபாடு குறைந்த நிலையிலுள்ள மனிதர்கள் பணமும், பொருளும் வேண்டு மென்று நினைப்பதால் இதற்கே 'பொருள்' என்று பெயர் வந்துவிட்டது. இந்த சாதாரண பொருளில் உள்ள ஈடுபாடு தற்காலிகமான நிறைவைக் கொடுத்து நிரந்தரமான நிறைவைப் பறித்துவிடும்.

என்றும் குறைவில்லாத சந்தோஷம் வேண்டும் என்றுதான் மனிதன் நினைக்கி ன்றான். இருப்பினும் காலத்தின் கோலத்தால் உலகமாயையின் வசப்பட்டுச் சிற்றின்பத்திலே உழன்ற பிறகு காலம் கடந்துவிடுகின்றது. மறுபடியும் இன்பம் வேண்டும் என்கின்ற தவிப்பு ஏற்படுகின்றது.

இதற்கு மேல் ஒன்று வேண்டும் என்று தோன்றச் செய்யாத நிலைத்த பேரின்பமே 'மோட்சம்' அது தான் நிலையான வீடுபேறு. நாம் வேலை நிமித்தமாக ஊரெல்லாம்

## தாயுமான சிவம்

சுற்றுகின்றோம். அலைந்து திரிந்து உழைத்துச் சிரமப்படுகின்றோம். நமது வீட்டை அடைந்த பிறகுதான் மனதிற்கு நிம்மதி ஏற்படுகின்றது.

'வீடு' என்பதற்கு விடுதலை என்று பொருள். சிறைவாசத்தில் இருந்து விடுபட்டவன் ஆனந்தமாக வீட்டைச் சென்று அடைகின்றான்.

இப்பொழுது நாம் உடல் என்கின்ற சிறைக்குள் அடைக்கப்பட்டு இருக்கின்றோம். இந்த உடம்புதான் நாம் என்று எண்ணி இருக்கின்றோம். அந்தக் கருத்து ஏற்கத்தக்க ஒன்றல்ல. நமது உண்மையான வீடு ஆனந்தமயமான மோட்சம்தான். அறநெறியில் இருந்து தவறியதற்குத் தண்டனையாகத்தான் நம்மை உடல் என்கின்ற சிறையில் அடைத்து உலக மாயையில் ஈடுபடச்செய்து அரும் பெரும் திருவிளையாடல்களைச் செய்து விடுகின்றான் அந்தப் பரம்பொருளான இறைவன். அறத் தொண்டில் நமது மனதை ஈடுபடுத்த நம் சிறைவாச காலத்தைக் குறைத்து தனக்குள் ஐக்கியப்படுத்திக் கொள்ளும் அந்தப் பரம்பொருள். அந்த ஆன்மீகமயமான வீடுதான் எல்லையற்ற இன்பம். உலகிலே காலம், தேசம், வஸ்து இந்த மூன்றிலும் குறைவின்றி நிறைந்து நிற்பதே பேரின்பமாகும்.

## ஆயிரம் தெய்வங்கள் ஏன்?

தெய்வம் ஒன்று என்று சொல்லிக்கொண்டு ஆயிரம் உருவங்களை இந்துக்கள் எதற்காக வணங்குகின்றார்கள். ஒரு வீட்டில் குழந்தை பிறக்கின்றது. அதற்கு ஒரு பெயரும் இல்லை. வீட்டுக்காரர்களைப் பார்த்து "நடராஜன்" என்று அவனுக்கு பெயர் சூட்டினார்கள். தாய் கண்ணப்பா என்று அழைக்கின்றாள்.தந்தை ராஜப்பா என்று அழைக்கிறார். தமையன் தம்பி என்றும் தம்பி அண்ணா என்றும் மனைவி அத்தான் என்றும் மகன் பிறந்தால் அப்பா என்றும் உயிர் பிரிந்தால் பிணம் என்றும் பலர் பலவாறு ஒருவரையே அழைக்கின்றார்கள். இது கண்கூடு. ஒரு மனிதன் தன்னை யார் எப்படி அழைத்தாலும் ஏன்,ஏன் என்று கூறுகின்றான். அதுபோலப் பரம்பொருளை, முருகா என்றாலும் ,ஏன்? என்கிறார்."சிவனே"என்று துதித்தாலும் "திருமாலே என்று துதிசெய்தாலும் ,"கணபதியே"என்று அழைத்தாலும் "ஏன்" என்கிறார்.

திருமுருக கிருபானந்தவாரியார்

## எமது கவிதை

### நீ

பூவினுள் நாற்றமாகிப்
பொன்னினுள் ஒளியுமாகி
நாவினுள் சுவையுமாகி
நவின்றிடு பாவில் தங்கும்
நனி சுவைப் பண்ணுமாகி
ஓவிய அழகுமாகி
ஒளிர்ந்திடும் உனையே யானும்
தாவியே பற்ற வேண்டித்
தவிக்கிறேன் எமை நீ காப்பாய்

### வண்டும் வாசனையும்

குங்குமப் பொட்டினைப் பூவென
வண்டொன்று கொஞ்சிக் குலாவி வர
கோதையவள் தன் கைகளினால் அதைப்
போவெனத் தள்ளிவிட வண்டு கன்னியின்
கைவிரல்
கார்த்திகைப் பூவதோ எனக் களித்து
நெருங்கிடவே
காரிகை தன்னுடைய கோவை
இதழ்விரித்து
ஓ ஓ எனக் கூறி நின்றாள் அவளது
ஓரிரு வெண்பற்கள் ஒளியுடன் வெளி
வரவே ஓடிய வண்டது
சூடிடு முல்லையின் உவமை
புலப்படவே உவகையுடன்
வண்டு ஒன்றி நெருங்கிட ஓலமிட்டாள்
அவளும்
ஓடிடத் திட்டமிட்டாள் ஓர்பக்கம் தாவி
நின்றாள்
அவள் கூந்தலில் சூடிய மல்லிகைப்
பூச்சரம்
கூர்ந்து மணம் பரப்ப
உண்மை மலரை ஓர்ந்திட்ட வண்டது
ஓம் ஓம் எனச் சுற்றியதே
ஓம் ஓம் எனச் சுற்றியதே.

(மாயவாழ்க்கையே நிசமெனக் கொள்ளும் ஆன்மா ஆகிய வண்டு குங்குமப் பூவையும் கைவிரல்களையும் வெண் பற்களையும் பூவாக எண்ணி மயங்குகிறது. இறுதியில் உண்மை முல்லை மலரைச் சுற்றி வட்டமிடுகின்றது. உண்மையில் உண் மையாக உள்ள பரமாத்மா வசமாகிறது.)

திருமதி. V. சண்முகநாதன்

# மேன்மை கொள் சைவம்

~சுவாமியம்மா சி. விசாலாட்சி~

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்கக் குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம்
பொருளைக் கைவந்திடவே மன்றுள்
வெளிகாட்டும் இந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலும் சமயநெறி புகுதவேண்டாம்
முத்திதரும் தெய்வசபையைக் காண்பதற்குச்
சேரவாரும் செகத்தீரே
(தாயுமான சுவாமிகள்)

இன்றைய உலகில் பற்பல மதங்கள் நேற்றைய மழைக்குத் தோன்றிய புற்றீசல் போன்றும், முளைத்த காளான்கள் போன்றும் தோன்றி மக்களை வழிப்படுத்துவது போன்று உண்மையல்லாதவற்றை உண்மை என்று கூறி ஏமாற்றி வருவதை நாம் காண்கின்றோமல்லவா?

புறச் சமயங்கள் அத்தனையும் தமது சாதுரியத்தால் நொந்த பாரம்பரிய இந்துமக்களைத் தம்வசப்படுத்துவதையும் காண்கின்றோம். ஏழ்மையால் தமது இல்வாழ்க்கை நடத்த முடியாத இந்துமத மக்களும் கல்விகற்கும் திறமை இருந்தும் கல்வி கற்கப்பொருள் வசதியற்ற இந்துமத மக்களும் பருவவயது வந்த இந்துமதக் கன்னிப்பெண்களும் சைவசமயம் போதிக்கின்ற உண்மைகளைச் சரிவர உணராது புறச் சமயத்திற் சேர்ந்து விடுவதையும் காண முடிகின்றது.

எல்லாச் சமயங்களிலும் சைவசமயமே உண்மைச்சமயம். சைவம் ஆதியும் அந்தமும் இல்லாதது என்பதை ஆய்வாளர்களும் அருளாளர்களும் நிலைநாட்டியுள்ளார்கள். வேத ஆகமங்கள் , புராணங்கள்,உபநிடதங்கள்,திருமுறைகள், சித்தாந்த சாஸ்திரங்கள் இதிகாசங்கள்



சைவசமயத்தொன்மை பற்றியும் அற்புதங்கள் பற்றியும் எடுத்துக் கூறுகின்றன. இக்காலத்தில் விஞ்ஞானம் செய்கின்ற செயற்பாடுகள் அத்தனையும் வேதகாலமுனிவர்கள் சித்தர்கள் தமது சமயவழிபாட்டால் செயற்படுத்தினர். எனினும் விஞ்ஞானத்திற்கும் சைவம் அனுட்டிக்கும் மெஞ்ஞானத்திற்கும் அதிக வேறுபாடுகள் உண்டு. விஞ்ஞானச் செயல்களைச் செயற்படுத்தப் பொருட்செலவு வேண்டும். விஞ்ஞானம் மனிதனை அழிக்கும். நாட்டை அழிக்கும். மெஞ்ஞானமும் இத்தனையும் செய்தாலும் மீண்டும் நொடிப்பொழுதில் அழித்தவற்றை உண்டாக்கித் தரும் அற்புதம் நிறைந்ததாகும்.

எனவே இத்தகைய சைவசமயம் போதிக்கின்ற நீதிமொழிகள், அருள்மொழிகள், பொன்மொழிகள் என்பவற்றை அகில உலகமும் கடைப்பிடித்தும் அடியொற்றியும் அனுசரித்து வழிப்படுத்திருந்தால் நாடளாவிய அமைதி, அன்பு, தியாகம், பணிவிடை, தொண்டு முதலியன செய்தல் பெருகி நாடுகள் தோறும் அமைதி மேலோங்க நாட்டுப் பிரச்சனைகள், வீட்டுப்பிரச்சனைகள் மொழிப்பிரச்சனைகள் தோன்றுவதற்கு இடமேயில்லை.

மேன்மைகொள் சைவப்பண்புகள் ஒருயுக காலத்தில் உலகத்தில் மலிந்து காணப்பட்டன. உலகைக் காப்பாற்றுபவள் தரும தேவதை, தருமதேவதையைப் பசுவென்றும் கூறுவர். சைவமக்கள் காலத்தைக் கிரேதாயுகம் திரேதாயுகம், துவாரகாயுகம், கலியுகம்,என நான்காக வகுத்தனர். கிரேதாயுகத்தில் உலகம் எங்கும் சைவநீதிகள் பேணப்பட்டு வந்தது. ஒரு சிறு துளியேனும் பாவம் தலையெடுக்க முடியாது அக்கால மக்கள் வாழ்ந்தனர் அவர்கள் சைவநீதிகள் கூறியவற்றின்படி ஒழுகி வந்தனர். பெரியோர் இறையனுபவத்திற் கண்ட அருள் மொழிகளைப் பொன்னைப் போற் போற்றினர். இதன் காரணமாக அவர்களிடம் பொய்யில்லை. பொறாமை இல்லை. போட்டி இல்லை. ஒன்றே குலம் ஒருவனே தேவன். எல்லோரும் ஆண்டவனிடன் குழந்தைகள் அதனால் எம்மிடம் சாதி பேதம் ஏற்றத்தாழ்வு இல்லை, என்று பரஸ்பர ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

கிரேதாயுக காலத்தில் வாழ்ந்த குழந்தைகள் மாணவர்கள் அன்னையும் பிதாவும் முன்நெறி தெய்வம் எனப் பெற்றோரை என்றும் காலையில் வீழ்ந்து வணங்கினர். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என எப்போதும் ஆலய வழிபாடு செய்தனர். ஐம்பெரும் குரவர்களைப் போற்றினர். ஆசிரியர் சொற்படி பாடம் படித்து உலக மேதை களாயினர். அரசனும் செங்கோல் தவறாது அரசு நடத்தினான். இதனால் தர்மமாகிய பசுவும் நான்கு கால்களையும் நிலத்தில் ஊன்றிப் புல் மேய்ந்து, தண்ணீர் குடித்தது. தருமம் தலையெடுத்த காரணத்தால் வான்முகில் வழாது மாதம் மூன்று மழை பெய்தது. ஆலயங்கள் தோறும் வேதியர் வேதாகம விதிப்படி வேதம் ஓதி நித்திய நைமித்திய பூசைகளைச் செய்தனர். நாடு நீர் வளம் நில வளம் மிகுந்து காணப்பட்டது. இதனால் அக்கால மக்கள் பகைமை இன்றி நோய் நொடியின்றி மரணபயமின்றி வாழ்ந்து வந்தனர்.

திரேதயுகத்தில் சைவ உலகில் ஆங்காங்கு சிறிது சிறிதாக மக்களிடையே ஆசை உண்டாகவே பகைமை, களவு, பொய் முதலியன விதைக்கப்பட்டு முளைவிடத் தொடங்கியது. இதனால் தருமமாகிய பசு ஒரு காலை உயர்த்தி மூன்று கால்களை யூன்றி வேதனையுடன் புல் மேய்ந்து தண்ணீர் குடித்தது. காற்பங்கு தருமம் குறைந்தமையால் அடிக்கடி மக்கள் வேற்றுமை உணர்ச்சியுடன் வாழ்ந்தனர்.

துவாரகாயுகத்தில் சரிபாதி தருமம் குறையக்கூடிய முறையில் மக்களிடையே பேராசைத் தொற்று நோய் பரவத்தொடங்கியது. போட்டி பொறாமை இனப்பிரச்சனை என்பன தலைதூக்கவே தரும சிந்தனை அன்பு

ஜீவகாருண்யம் மக்களிடையே அருகத் தொடங்கியது.இதனால் தரும தேவதையாகிய பசு இரண்டு கால்களை உயர்த்தி இரண்டுகால்களை நிலத்தில் ஊன்றிப் புல் மேய்ந்தது. தண்ணீர் குடித்தது. மிக மிக வேதனைப்பட்டது.

கலியுகத்தில் அதாவது இக்காலத்தில் அகில உலக முழுவதும் தீய சக்திகள் காட்டுத்தீபோலப் பிரவாகம் கொள்ளத் தொடங்கின. நாட்டுக்கு நாடு பகை, வீட்டுக்கு வீடு பகை, இனப்பிரச்சனை,வருணக்கலப்படி, பிறர்மனை தீண்டுதல், பெரியோரைத் தூற்றுதல், புறங்கூறுதல், இவ்வாறு எண்ணில் அடங்காத அதர்மங்கள் மக்களிடையே பிரதிபலிக்கத்தொடங்க அதர்ம தேவதை தலைவிரி கோலமாக தாண்டவமாடத்தொடங்கினாள். இதனால் தர்மம், தர்ம சிந்தனை, தர்மச்செயல், அருகத்தொடங்கியது. இதனால் தர்மமாகிய பசுவும் மூன்று கால்களை உயர்த்தி ஒரு காலை ஊன்றிப் புல் மேய்ந்தது. தண்ணீர் குடித்து வேதனையுடன் வாழுகின்றது.

எனினும் இன்று வேரோடு சைவமதப் பண்புகள் இல்லை என்று கூறிவிட முடியாது. தெய்வீகத்தின் இரக்கமோ அருளோ இல்லை என்றும் கூறிவிட முடியாது. அதர்மங்கள் மித மிஞ்சித் தலை தூக்கும் போதெல்லாம் இறைவன் தன்னுடைய பிரதிநிதிகளாக அவதாரபுருஷர்களை அனுப்பி சைவசமய மக்களையும், பண்புகளையும் பாதுகாத்து வருவதினாலேயே சைவசமயம் சிறப்பாக இந்தியா, இலங்கையிலும்கடல்கடந்து சைவசமயத்தவர்கள் வாழும் நாடுகளிலும் சைவம் பேணப்பட்டு வருகின்றது. இதனாலேதான் இன்றும் இந்துமதம் வானளாவி இருக்கின்றது.

சைவம் சிவத்தைக் குறிக்கும் சமயம். சிவம் அநாதியானவர். சிவனைப் பக்குவம் அடைந்தவர்கள் மட்டுமே அடையலாம்." தில்லையில் உள்ள சிதம்பரத்தின் பொற் சபையில் நடராசப் பெருமான பேரின்பம் பயக்கும் திருநடனம் செய்வது இதை வெளிப்படுத்தப்படுகின்றது. இந்தப் பேரின்ப உண்மையை உணர்வதைக் கைவிட்டு பொய்யான வழிகளை உண்மையென்று கற்பிக்கின்ற புறச்சமய நெறிகளில் புகுதல் வேண்டாம். பேரின்ப வாழ்வையும் மன அமைதி , மன மகிழ்ச்சி, என்பவற்றை அளிக்கின்ற ஐந்து தொழில்களையும் இயற்ற ஆனந்தக்

திருநடம் செய்கின்ற கனக சபையைக் காண வாருங்கள் என்று தாயுமான சுவாமிகள் உலகத்தவரை வலிந்து அழைப்பது சுவாமிகள் மக்கள் மீது பெருங்கருணையும் சைவசமயத்தின் மீது கொண்ட அசையாத நம்பிக்கையுமாகும். தாயுமான சுாமிகள் உலக மக்களை

**காகம் உறவு கலந்துண்ணக்**
**கண்டீர் அகண்டா காரசிவ**
**போகமெனும்பே ரின்ப வெள்ளம்**
**பொங்கித் ததும்பி பூரணமாய்**
**ஏக உருவாய்க் கிடக்குது ஐயோ**
**இன்புற்றிட நாமினி எடுத்த**
**தேகம் விழுமுன் புசிப்பதற்குச்**
**சேரவாரும் செகத்தீரே**

என்று மிக உருக்கமாகஅழைப்பது சிந்திக்கக் கூடியதாகும்.

நன்றாக ஆழமாக ஆத்மீக உணர்ச்சியுடன் இந்த மானிட தேசம் பற்றிச் சிந்திக்கும் போது பேரானந்தமான அமுதகளஞ்சியக் கருத்துக்கள் தெவிட்டாத தேனாறாகச் சொரிவதைக் காணமுடிகின்றது ஏன் உலகில் பிறந்தோம் என்று ஏக்கம் நீங்கி மீண்டும் மீண்டும் மானிடப் பிறவி எடுத்து ஆண்டவனுக்கு ஆளாக வேண்டும் என்ற ஆவல் தோன்றுவதைக் காண முடிகின்றது.

(தொடரும்....)

## செயல்

சீவி முடிக்கப்பெறாத தலையும், செயலுக்கு வராத சிந்தனையும், கடவுள் எழுந்தருளாத திருக்கோலம், மகப்பேறில்லாத மனை வாழ்க்கையும் தொண்டின் துன்பம் தெரியாத துறவு வாழ்க்கையும் , பயனுடையவையல்ல. அது போல தொடங்கிய செயலைத் தொடர்ந்து செய்து முடிக்காத வாழ்க்கை வாழ்க்கையன்று. அந்த வாழ்க்கையை இன்றைய உலகமும் மதிக்காது. நாளைய உலகமும் பாராட்டாது. செயல் செய்திடுக! ஓயாது செய்திடுக! செயல் முடியும்வரை செய்திடுக! அதுவே இன்ப வாழ்க்கை!!

**–தவத்திரு குன்றக்குடி அடிகளார்–**

## அருள்வாக்கு



புகையிலையைப் பச்சையாய் உபயோகிப்பது " புகை" யிலை என்றே அதற்குப் பெயர் இருப்பதற்கேற்ப அதை நெருப்பில் புகைத்து இழுப்பது ஆகியனவும் அநாசாரம் என்று சாஸ் திரம் தள்ளியிருக்கிறது. உடம்புக்குக் கெடுதல் அதாவது அநாரோக்கியம் என்று வைத்ய சாஸ்திரப்படி தள்ளி னதையே சித்தத்துக்கு கெடுதலைச் செய்யும் என அநாசாரம் என்று தர்ம சாஸ்திரம் ஒதுக்கி வைக்கிறது. மாம் ஸத்தில் ஒருவிதமான கெடுதல் மதுவில் இன்னொருவிதமான கெடுதல் என்றால் புகை பிடிக்கிறதிலும் தனியாக ஒரு பெரிய கெடுதல் இருக்கிறது. அதாவது ஒருத்தன் இந்தக் கெட்ட காற்றை விடுகிறபோது பக்கத்திலி ருப்பவனுக்கு உள்ளேயும் போய் அது கெடுதல் பண்ணுகிறது." நான் எப்படி வேண்டுமானாலும் கெட்டுப் போவேன் என்னை யார் தடுக்கிறது? என்று ஒருத்தன் சொன்னாலும் சொல்லலாம். ஆனால் " பிறத்தியானைக் கெடுப்பேன் அவன் இழுக்கிற காற்றை விஷமாக் குவேன், என்னை யாரும் கேட்கப்ப டாது." என்று எவனும் சொல்ல முடி யாது. அதனால் சமூக நலனை உத்தே சித்து பீடி சிகரட்தான் பெரிய விரோதி யென்று அதைத் தடைசெய்ய வேண் டும்.

**–ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச் சாரிய சுவாமிகள்–**

தொடர் கட்டுரை

# இந்துசமயம்

க. குணரத்தினம்

கி.மு 500-கி.பி-500
இந்து சமயத்தின் பொற் காலம்

தர்மசூத்திரங்கள், தர்மசாத்திரங்கள் தோன்றின. உலக வாழ்க்கை சம்பந்தமாக இவை திட்டவட்டமான ஏற்பாடுகளை நிலை நிறுத்தின. இந்துக்கள் எவ்வாறு வாழ வேண்டும், சமுதாயம் எவ்வாறு அமைய வேண்டும் என்று கூறுகின்றன. தர்ம சூத்திரங்களின் அடிப்படையில் வருண தருமம் ஆசிரமதருமம் என்பன தோன்றின. வருண தருமம் மக்களை நான்கு வகுப்பினராகப் பிரித்து அவர்களுடைய கடமைகளைப் பற்றிக் கூறுகின்றது. ஆசிரமதருமம் யாவர்க்கும் பொதுவான கடமைகளைப் பற்றிக் கூறுகின்றது.



வர்ணம் என்பதற்கு நிறம் என்று பொருள். ஆரம்பத்தில் அது தோலின் நிறத்தைக் குறித்தே ஏற்பட்டது. வருண தருமத்தில் கூறப்பட்டுள்ள நான்கு வகுப்புக்கள் பிராமணன் சைத்திரியன் வைசியன் சூத்திரன் என்பன. அவர்களின் கடமைகள் பின்வருமாறு- பிராமணன் எல்லா இன மக்களினதும் ஆன்மிகப்பண்பாட்டிற்குப் பாதுகாவலன்.

ஆன்மிகக் கருத்துக்களை நன்கு பயின்று மக்களிடையே பரப்ப வேண்டும். லௌகிக விடயங்களில் ஈடுபடக்கூடாது. சமுதாயம் அவனது சகல தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

(சைத்திரியன் சமுதாயத்தைப் பாதுகாப்பது பராமரிப்பது இனத்தின் விடுதலைக்காகப் போராடுவது நாட்டின் அமைதியை நிலைநாட்டுதல் அயலாட்சியாளரில் இருந்து அரசியலமைப்பைப் பாதுகாத்தல் என்பன கடமைகள்.)

வைசியன் பொருளியலில் வல்லவன். பொருளை உற்பத்தி செய்து பங்கீடு செய்வது அவன் வேலை. வேளாண்மை, கால்நடை, பராமரிப்பு, வாணிகம், அவன் தொழில்கள். சூத்திரன் என்பவன் தொழிலாளி. உடலால் உழைப்பவன்,மற்றவரைப் போல் முக்கியமானவன், கௌரவமானவன், மற்றவர்கள் அவனுக்கு கட்டுப்பாடுடையவர்கள். சமுதாயவளர்ச்சி இவன் வளர்ச்சியைப் பொறுத்தது.

இருக்கு வேதத்தில் நான்கு பிரிவுகளும் தோன்றியது பற்றிய குறிப்பு இருக்கிறது. நான்கு வருணத்தாரையும் பிரமனுடைய உடலின் உறுப்புக்களாக ஒரு பாடல் வர்ணிக்கிறது. தலை - பிராமணனாகவும், கைகள்-சைத்திரியனாகவும் கால்கள்-சூத்திரனாகவும் கூறப்படுகின்றது. இவற்றுள் ஒரு உறுப்பு மற்றையதைவிட உயர்ந்தது என்றோ தனித்து இயங்க முடியுமென்றோ கூறமுடியாது.

சமய நூல்கள் கூறியவற்றையும் நாம் கருத்திலெடுத்தல் பொருந்தும். மனு கூறுகிறார், பிராமணன் வேதத்தைப் படிக்காமல் வேறு தொழில் செய்தால் அவன் சந்ததியோடு இந்த வாழ்க்கையிலே சூத்திரனாகி விடுகின்றான். அதேபோல் நடத்தையினாலும் ஒரு சூத்திரன் பிராமணன்

WELCOME CENTRE
C.D, AUDIO
கசேட்டுகள்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
தமிழ், ஆங்கிலம், இந்தி
ஆகிய மொழிப்
படங்கள்
வாடகைக்கும்
எம்மிடம் உண்டு.
194 A HIGH STREET NORTH
EAST HAM
TEL : 081 552 2727

திருமுருகன் வீதிவலம்
வருகின்றான்!
திருமுகத்தைக் கண்டு மனங்
குளிர்கின்றோம்!
STATION SUPER STORE
உங்களுக்குத் தேவையான
சகல விதமான மளிகைப்
பொருட்களுக்கும்
பத்திரிகைகளுக்கும்
சஞ்சிகைகளுக்கும்
6 STATION PARADE
EAST HAM
E6 1JD
TEL: 081 503 4711

ஆகிவிடுவதும் , பிராமணன் சூத்திரன் ஆகிவிடுவதும் உண்டு. இதே விதி சைத்திரியனாய்ப் பிறந்தவனுக்கும் வைசியனாகப் பிறந்தவனுக்கும் பொருந்தும். மகாபாரதத்தில் தருமன் கூறுகிறான் சத்தியம், தருமம், உள்ளத்தில் உறுதி, நல்ல நடத்தை, பெருந்தன்மை, தவம், இரக்கம் இவை போன்ற குணங்களையுடையவன் பிராமணன். இந்தக் குணங்கள் காணப்படாமல் சூத்திரனிடம் காணப்பட்டால் சூத்திரன் சூத்திரனுமல்லன். பிராமணன் பிராமணனுமல்லன். கீதை சொல்கின்றது தன் பிறப்பினாலோ குலத்தினாலோ அல்லாமல் ஒருவன் தன்செயல்களினாலேதான் பிராமணன் ஆகின்றான். ஒரு சண்டாளன் கூட தூய பண்பாளனாய் இருந்தால் அவன் பிராமணனே.

தொழிலால் ஏற்பட்ட இப்பிரிவுகள் நாளடைவில் பிறப்புரிமையால் நிலை நிறுத்தப்பட்டன. சாதிகள் என்னும் பெயர் புகுத்தப்பட்டது. கர்மம், மறுபிறப்பு, என்னும் கொள்கைகளை இணைத்து தாழ்ந்த சாதி என்று கருதப்பட்டவன் முற்பிறப்பில் செய்த கர்ம வினையினால் தான் அந்த சாதியில் பிறந்தான் என்று விளக்கம் கூறப்பட்டது. செல்வாக்கில் இருந்த பிராமணர் தமது உயர்ந்த நிலையை உறுதிப்படுத்துவதற்காக மேற்படி விளக்கங்களைக் கூறியதுடன் அக்கருத்துகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்களை சமயத்தையே எதிர்த்தவர்கள் என்றும் கூறி ஆட்சியாளர் உட்பட மற்றையோரை நம்பச் செய்தனர்.அதில் வெற்றியும் கண்டனர். காலப் போக்கில் இந்து சமயத்திற்கே சாபக் கேடான ஒரு சாதி முறை பரவியது.

ஆச்சிரம தருமத்தில் வாழ்க்கையின் நான்கு நிலைகள் பற்றிக் கூறப்படுகின்றது. அவையாவன பிரமச்சரியம், அல்லது மாணாக்க நிலை, கிருகஸ்தம், அல்லது குடும்பத்தலைவன் நிலை, வானப்பிரஸ்தம், அல்லது காட்டில் வாழும் முனிவன் நிலை, சந்நியாசம், அல்லது துறவு வாழ்க்கை நிலை. பிரமச்சரியம் என்னும் நிலையில் கல்வியும் ஒழுக்கமும் கற்க வேண்டும். அறிவியல்களையும் கலைகளையும் கற்க வேண்டும். சமய அறிவும் சமயச்சார்பற்ற அறிவும் அவற்றுள் அடங்கும். செல்வந்தர், ஏழை, சீமான், விவசாயி. என்ற பேதமில்லாமல் எல்லோருக்கும் கல்வி,காட்டிலுள்ள ஆச்சிரமங்களில் போதிக்கப்பட்டது. அவை பொதுவுடமைத்தத்துவம் நிலவும் இடங்களாகவும் இருந்தன.

இரண்டாவது நிலை கிரகஸ்தம். கல்வி கற்கும் காலம் முடிந்தவுடன் ஒருவன் திருமணம் செய்துகொள்ள வேண்டும். திருமணம் புனிதமாகவும் அறவாழ்வில் மனைவி கணவனுக்கு வாழ்க்கைத் துணையாகவும் எண்ணப்பட வேண்டும். காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபெற்ற இன்பவாழ்க்கையாக இருக்க வேண்டும். பொருளைத் தேட வேண்டும். நற்புத்திரரைப் பெற்று கல்வி கேள்விகளிற் சிறந்தோராயும், இறைபக்தி, பண்பு, ஒழுக்கம் மிக்கோராயும் வளர்க்க வேண்டும். விருந்தினரை உபசரித்தல், வீடற்றவர், அநாதைகள், ஆகியோருக்கு உணவளித்தல்,சமய நூல்களைப் படித்தல்,கடவுள் வழிபாடு மூதாதையருக்குக் கடமை செய்தல், மிருகங்களை நன்கு பராமரித்தல், என்பன கிரகஸ்தனின் ஏனைய கடமைகள்.


மூன்றாவது நிலை, வானப்பிரஸ்தம். இல்வாழ்க்கை நிலையைக் கடந்து சென்றபின் ஒருவன் வாழ்க்கையின் பொறுப்புக்களை விட்டுவிட்டு ஆன்மீக விடயங்களில் நாட்டம் செலுத்த வேண்டும். மனு கூறுகின்றார், குடும்பத்தலைவன் நெற்றியில் கோடுகள் விழ ஆரம்பித்தபின் தலையில் நரை தோன்றிய பின் தன் மகனுக்கு மகனைக் கண்டபின் காட்டுக்குச் செல்லலாம். ஆதி காலம் தொடக்கம் இன்று வரை ஒரு சிலரைத் தவிர குடும்பத்தலைவர்களும் அவரது மனைவியரும், காடு சென்றது கிடையாது. அறிஞர்கள் பலரின் கருத்துப்படி ஒரு குடும்பத்தலைவன் தனது பிள்ளைகளை நல்ல முறையில் வழிநடத்தி குடும்பப் பொறுப்புக்களை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அதன் பின்பு ஆன்மீக விடயங்களில் ஈடுபட வேண்டும். பொதுநலப்பணிகளில் ஈடுபட வேண்டும். ஒரு சமுதாயத்தொண்டனாக மாற வேண்டும். தனது இனம், தனது நாடு என்ற நிலையிற் செயற்பட வேண்டும்.

நான்காவது நிலை சந்நியாசம். சந்நியாசியே இலட்சிய மனிதன். வீடுபேறு அடைவதற்கு உலகியற் காரியங்களை ஒருவன் விட்டுவிடுதல் தியானத்திற் காலத்தைக் கழித்தல், இறை இன்பத்தில் திளைத்தல் என்று கூறப்படுகிறது.ஆதி காலம் தொடக்கம் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் சந்நியாசம் சென்ற வரலாறு இல்லை. அறிஞர் பலரின் கருத்துப்படி

318 HIGH STREET NORTH
MANOR PARK
LONDON E12 6SA
TEL: 081-471 7806
081-552 8053

வேல்முருகன் வருகின்றான்
வேதனைகள் போக்க!!

இலங்கையிலும் இந்தியாவிலுமிருந்து தருவிக்கப்பட்ட
அத்தியாவசியப் பொருட்கள் அன்பளிப்புப் பொருட்கள்
இலங்கை தமிழ் ஆங்கில வாரப் பத்திரிகைகள்
தமிழக வார மாத சஞ்சிகைகள்
பழைய புதிய வீடியோ படங்கள் ஓடியோக்கள்,சீடிக்கள்
அனைத்தும் மலிவு விலையில் மன நிறைவோடு
பெற்றுக் கொள்ள நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்




K.S.P.SUPER FOODS

நான்காவது நிலையில் ஒருவர் இனம் நாடு என்ற வட்டத்திலிருந்து விலகி உலகம், உலக சமுதாயம், மனிதாபிமானம் என்ற பரிமாணத்திற் செயற்படுதல் ஆகும். எல்லோரிடமும் அன்பு பாராட்டுதல், மனிதத் தன்மையைப் பேணுதல், உலக சமுதாயத்தின் உயர்வுக்கு தமது பங்கைச் செலுத்துதல், அவரது கடமைகள்: மனித சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழ்தல் அல்ல. தரும சாத்திரங்கள் இந்து வாழ்க்கை முறைக்கு அடிப்படையான பல விடயங்களையும் அநுட்டிக்க வேண்டியன பற்றியும் கூறுகின்றன. வீட்டில் செய்ய வேண்டிய கிரியைகள், பிறப்புச் சக்கரத்தின் போது செய்ய வேண்டிய கிரியைகள், பாவங்களும் அவற்றிற்கு செய்ய வேண்டிய நிவர்த்திகளும், தீட்டு புனிதப்படுத்தல் என்பன பற்றிய விவரங்களைக் கூறுகின்றன.

(தொடரும்.....)

# இறைவனை வணங்கும் முறை



கோயிலுக்குள் சென்றதும் இறைவனின் முன் வணங்கும்போது உடலை வளைத்து முழங்கால்களால் முட்டிபோட்டு, இரு முழங்கைகளையும் தரையில் ஊன்றி இரு கரங்களையும் தரையில் சாய்த்து கரங்களின் நடுவே தலையைத் தரையில்படும்படி விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வதோடல்லாமல் எழுந்து நின்று தலைக்குமேலே இரு கரங்களையும் உயர்த்திக் கூப்பி இறைவனை வணங்க வேண்டும்.

துச்சாதனன் திரௌபதியின் துகிலை உரிந்தபோது அவள் முதலில் தன் சக்தியால் ஆனமட்டும் போராடினாள். தன்னுடைய போராட்டங்களினால் வெற்றிபெற இயலவில்லை என்று உணர்ந்ததும் இரு கரங்களையும் சிரமேல் குவித்து கண்ணா காப்பாற்று என்றதும் கண்ணன் திரௌபதியின் மானத்தைக் காப்பாற்றினான்.

நம்மால் காரியங்களைச் சாதிக்க முடியும் என்றும் நம்மால் அரிய செயல்களையும் எளிதாகச் செய்யமுடியும் என்றும் எண்ணும் பொழுது இறைவன் நம் பணியில் குறுக்கிடுவதில்லை. நாம் அடையும் தோல்விகளையும் சுக துக்கங்களையும் கவனித்துக் கொண்டிருக்கிறான்.

எனவே இறைவனை வணங்கும் போது பிறவிப் பெருங்கடலில் இருந்து நீந்திக் கரைசேர இரு கரங்களையும் சிரம் மேல் உயர்த்தி கூப்பி வணங்கவேண்டும்.

- குன்றக்குடி அடிகளார்-


**SREE LAKSHMI ENTERPRISES**

**Importer & Exporter, Wholesaler & Retailer in general textile & gift items**

திருமண வைபவமா ! பூப்புநீராட்டு விழாவா!
தமிழர் பண்டிகைகளா! எதுவானாலும் உங்களுக்குத் தேவையான காஞ்சிபுரம், மணிப்புரி பனாரீஸ், மைசூர், காஷ்மீர், பட்டுச்சேலைகள், பட்டுவேட்டி, சால்வை, மேல்சட்டைகள் பட்டுப்பாவாடைகள், கோவில்பட்டுகள், பரத நாட்டிய உடைகள், அலங்கார நகைகள், சமய நூல்கள் சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்ட பல விதமான புடவைகள், கம்பளங்கள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள மிகச் சிறந்த ஒரே இடம்:

*Large Collection of Wedding Sarees*
*&*
*Baratha natya costumes*

ஸ்ரீலட்சுமி என்ரபிரைசஸ்
Unit 11, Broadway, Southhall
Middlesex, UB1 1QB
Tel : 081 843 9495/0831 662824

# ILFORD MINI MARKET

84 Ilford Lane, Ilford, Essex IG 1 2LA
Tel : 081-553 3757

மிகச் சிறந்த தரம்

குறைந்த விலை

அன்புடன் கூடிய சேவை

எம்மிடம்
இலங்கை, இந்தியா, மொரீசியஸ் நாடுகளில்
இருந்து இறக்குமதி செய்யப்பெற்ற
சகலவிதமான உணவுப் பொருட்கள்
குளிர்பானங்கள்,சமையல் பாத்திரங்கள்
மரக்கறிவகைகள், பழங்கள்
காரம் சுவை நிறைந்த சிற்றுண்டி வகைகள்
தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள்
வீடியோ~பழைய,புதிய தமிழ்ப் படங்கள்
சீடி,ஓடியோ தமிழ்~சிங்கள கசட்டுகள்
உண்டு.

# DJ SUREN

** Wedding Parties**
**Birthday Parties**
**House or Club Parties**
*Please Call*
SUREN On
081- 471 5578 / 081- 548 0748 / 0836 538 009
* Tamil * Bhangra * House*
*Ragga* Pop

# யாழ்ப்பாணம் சிறக்கவந்த யோகர் சுவாமிகள்

**யாழ்ப்பாணம் கொழும்புத்துறை யோகசுவாமிகளை இலங்கையில் பிறந்து வளர்ந்து தற்போது நடுத்தரவயது எய்தினவர்களிலோ அல்லது மூத்தோர்களிலோ அறியாதவர்கள் இல்லை என்று சொல்லலாம். பல்லாண்டு காலமாக மக்களின் பேரன்பிற்கும் வணக்கத்திற்கும் உரியவராக, பிறவிக்கடலில் இருந்து மனிதர் கரையேறுவதற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காகவு நடமாடும் தெய்வமாக இருந்து 1964ம் ஆண்டு மகாசமாதி அடைந்தார்.**

**மு. ஆறுமுகம்**


பலவகைப்பட்டோர், பட்டம் பதவியில் உள்ளவர்களும், பாமரரும், பல சாதி சமயத்தினரும், கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும்கூட இம் முனிவரைத் தரிசித்து ஆறுதல் தேடினர். வைத்தியர் ஒருவர் ஒவ்வொரு நோயாளிக்கு ஏற்ப மருந்து கொடுக்குமாப் போல் பக்தர்களுக்கு போதனைகளையும் ஆசிகளையும் வழங்கி வந்தார். மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய சிவபுராணத்தை பக்தர்களுடன் பாராயணம் செய்வார். பாராயண இறுதியிற் பக்தர்கள் தங்கள் பிரச்சனைகளுக்கு தத்தம் மனதிலே விடை கண்டு சுவாமிகளை வணங்கிச் செல்வர். ஓர் பிரபல இஸ்லாமிய நீதிஅரசர் தான் நீதிமன்றம் செல்லுமுன் தனது தீர்ப்புகள் சரியாக இருப்பதற்குப் பிரார்த்தனையாக சுவாமிகளை வணங்கி அவரது ஆசிகளைப் பெற்றுச் செல்வது அந்தக்காலத்திற் பலரும் அறிந்த விஷயம்.

காவி அணியாது உருத்திராக்கமும் தரியாது வெள்ளைத் தாடி வெள்ளை முடியுடன் முழங்காலுடன் மடித்துக் கட்டிய வேட்டியுடன் இம் முனிவர் மெல்ல மெல்லவாக நல்ல சூடான தார்ரோட்டில் நடந்து செல்வது ஓர் அற்புதக் காட்சி. பலர் தங்கள் மோட்டார் வாகனங்களை நிறுத்தி சுவாமிகளை வேண்டிய இடத்திற்குக் கொண்டு போய் விடுவதற்குக் கேட்டாலும் போகமாட்டார். சிலரைத் தானாகவே நிறுத்தி அவர்கள் வாகனத்தில் ஏறிச் செல்வார். இவர்கள் தாங்கள் பெற்ற அதிர்ஷ்டத்தை பெரும் பேறாக எண்ணி வணங்குவர். சில பக்தர்கள் வீட்டில் சில நேரம் தங்குவார். கஸ்தூரியார் வீதியில் உள்ள பிரபல முத்துக்குமாரசுவாமி வைத்தியர் இல்லமும் சுவாமி தங்கும் இடங்களில் ஒன்று. வைத்தியர் நோயாளிகளுக்கு மருந்துகள் சரக்கு வகைகள் எழுதிக் கொடுக்கும் போது தனது கையால் வாங்கிக் கொடுப்பார். இவர்கள் வருத்தங்கள் குணப்பட்டது பற்றிச் சொல்லத் தேவையில்லை.

ஆஸ்பத்திரிகளிலிருந்து கைவிடப்பட்ட தீராத நோய்களுக்குட்பட்ட பக்தர்கள் பலர் சுவாமிகள் கையால் மருந்து வாங்கிப் பயன் அடைந்து பரவசப்பட்டிருக்கிறார்கள். உலக வாழ்க்கையில் துன்பங்களுக்கும் இன்னல்களுக்கும் உட்பட்ட பல பக்தர்களும் சுவாமிகளின் ஆசிகளினால் நிவாரணம் அடைந்திருக்கிறார்கள். இந்த விஷயங்களை அறிந்திராத இளைஞர்களுக்காக அறியத்தருகிறேன்.

## நற்சிந்தனைப் பாடல்கள்

இந்த மாமுனிவர் சீவன் முத்தராக வாழ்ந்து மனித குலம் உய்யும் பொருட்டு நற்சிந்தனை என்னும் தெய்வீகப்பாடல்களை எங்களுக்குப் பரம்பரைச் சொத்தாகத் தந்திருக்கிறார். இப் பாடல்கள், சாதாரண புலவர்கள் வித்துவான்கள் பலதரம் எழுதித் திருத்தி அச்சில் வந்தவை போலல்ல. சுவாமிகள்



தியானத்தில் இருந்தபடியே பாடும் போது பக்தர்கள் கேட்டிருந்து எழுதியவையே பெரும்பாலான பாடல்கள். ஆகவேதான் இவை தெய்வீகப் பாடல்கள், சக்தி வாய்ந்தவை. பாராயணம் பண்ணப் பண்ண பாவங்கள் விட்டோடும்.

இப்பாடல்கள் இனிய தமிழில் உள்ளன. சாதாரண மக்களுக்கு இலகுவில் விளங்கக் கூடியவை. அழகான தமிழ். இனிமையான சங்கீத ராகங்கள். நாளாந்தம் சாதாரண மனிதர் பேசும் தமிழில் பொதிக்கப்பட்ட ஞானக்களஞ்சியம். அருளமுதம். படிக்கப் படிக்கத் தெவிட்டாத தெள்ளமுது. இந்த அரும் பெரும் பொக்கிஷத்திற்கு நாங்கள் ஆளாய் உள்ளதை நினைத்து நாம் பெருமைப்பட வேண்டியதே! பயன் அடைய வேண்டியதே!

நற்சிந்தனைப் புத்தகத்தில் முதலில் இருப்பது சுவாமிகளின் கையால் எழுதப்பட்ட வாசகத்தின் புகைப்படம் (photo copy)

நீ உடம்பன்று. மனமன்று. புத்தியன்று சித்தமன்று. நீ ஆத்மா. ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது மனதில் பதியக் கடவது. ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு அதாவது தருமநெறியிற் பிசகாதே. எவ்வுயிரும்

பெருமான் திருமுன்னிலை என்று
சாதனை செய். கடவுள் உள்ளும்
புறம்பும் உள்ளவர்
இப்படிக்கு
அவனேநானே

நற்சிந்தனைப் பாடல்களில் சுவாமிகள் அறிவுறுத்துவது சீவன் சிவன். சிவன் சீவன். உள்ளமே கோயில். உயிரே விளக்கு. உயிரே சிவலிங்கம். தெய்வத்திற்கு தெய்வம் சிந்தையில் தானிருக்க வையகத்தில் அலையாதே.

சேண் பொலியுந் திருவடியே சித்தத்தில் எப்போதுமுண்டு. வேதாந்தம் பேசி வீண்காலம் போக்காதே. தத்துவப்பேயோடு தான் தழுவிக் கொள்ளாமல் சுத்த பரிபூரணத்தில் சுகித்து நீ வாழ்ந்திடுவாய் என்பதே.

ஆன்மாவை அறிந்து விட்டால் உனக்கு வேறொன்றும் தேவையில்லை. ஆன்மாவை அறிவதற்கு

அவனே நான்

அவனே நானென்று
சொல்லித் தியானஞ் செய்வாய்
தினமும்
ஆசையெல்லாம் ஒழியும். ஈசனருள்
பொழியும்
அஞ்சாதே அஞ்சாதே பஞ்சாய்ப்
பறக்கும் பாவம்
பஞ்சாட்சரத்தை நெஞ்சில்
துஞ்சாமலே செபி
கொஞ்சம் கொஞ்சமாய் மனத்தை
கூடுமட்டு மடக்கு
குருநாதன் திருவடியைக் கும்பிட்டு
நீ தொடங்கு

ஒருவன் எப்படிப் பாவனை செய்கிறானோ அவன் அப்படி ஆகிறான். நானே அவனே என்று (சீவன் என்று ஆன்மா என்று) தியானஞ் செய்தால் கடவுள் தன்மை வந்து விடுகிறது (அகம்பிரம்மாஸ்மி-நானே

பிரமன் தத்துவமசி-அது நீயாவாய்) ஆன்மாவின் உண்மைச் சொரூபத்தை மறைத்திருக்கும் அஞ்ஞானத்திரை-ஆணவம், கன்மம், மாயை-ஆகிய மலங்கள் ஞானத்தீயினால் செயலிழந்து ஆன்மா பிரகாசிக்கத் தொடங்கும்.

இம் மலங்களின் திரையானது பல தடிப்பில் உள்ளது. சிலருக்கு புளி போன்ற பொருள்களால் போக்கக்கூடிய செழும்பு போல் தடிப்பு. சிலரின் தடிப்பு உளியினால் செருக்கி அகற்றக்கூடியது. சிலரின் தடிப்பு வெடிமருந்து வைத்துக் கிளப்பும் கற்பாறை போன்றது என்று சில ஞானிகள் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

அஞ்ஞான இருளைப் போக்க பஞ்சாட்சரத்தை நெஞ்சிலே அஞ்சாமலே செபி என்பது எங்கள் மாமுனிவரின் உபதேசம்

சிவ சிவ என்னச் சிவகதியாகும்
ஓம் சிவாய நமவெனத் துதிப்போம்
நாம் சிவ நெஞ்சில் பதிப்போம்
அஞ்செழுத்தாலே அரனடி
காணலாம்
அஞ்செழுத்தாலே அகிலத்தை
ஆளலாம்
அஞ்செழுத்தாலே அனைத்தும்
உதித்தன
அஞ்செழுத்தாலே அனைத்தும்
நிலைத்தன
அஞ்செழுத் ததிசியம் ஆரறிவாரே

என்று நற்சிந்தனையில் சுவாமிகள் பாடுகிறார். இது தொடர்பில் அஞ்செழுத்தின் மகிமைபற்றி பின்வரும் தேவாரங்களின் அடிகளை அன்பர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

வேதம் நான்கினும் மெய்ப்
பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே
—சம்பந்தர் தேவாரம்

கொல்ல நமன் தமர் கொண்டு
போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செழு
த்துமே
—சம்பந்தர் தேவாரம்

கற்றுணைப் பூட்டியோர் கடலிற்
பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே
—அப்பர் தேவாரம்

பண்ணிய உலகினிற் பயின்ற
பாவத்தை
நண்ணி நின்று அறுப்பது நமச்சி
வாயவே
—அப்பர் தேவாரம்

**உலகை வெறுக்காதே**

கடவுளைக் காண்பதற்கு காவி யுடுத்தும் தாழ்சடை வைத்தும் காய்கனி துய்த்தும் காயமொறுத்தும் காட்டுக்குப் போக வேண்டாம். கடும் விரதமிருந்து உடம்பை வருத்த வேண்டாம். யாத்திரைகள் செய்து தீர்த்தங்கள் ஆடத்தேவையில்லை. உலகை வெறுக்காதே. ( no need to renounce the world)

வையகத்தில் வாழ் என்றான் எங்கள்
குருநாதன்
வாடாமல் வழி படென்றான் எங்கள்
குருநாதன்
இகலோகம் பரலோகம் இங்கேதான்
கண்டு கொள்வாய் தம்பி

வையகத்தில் வாழ்ந்து கொண்டு சாதாரணஉலக வாழ்க்கையில் இருந்தபடியே உன்கடமையைச் செய்து கொண்டு தியானமூலம் கடவுளைக் காண். அகம் பிரம்மாஸ்மிஎன்னும் அரிய திருமந்திரத்தை அகத்திலேசெபித்து அண்ட சராசரமெல்லாம் அகத்திலே கண்டு கடைத்தேறு என்பது எங்கள் குருபரன் போதனை.

சித்தமிசை நித்தம் திகழொளியைக்
கண்டுருகி முத்தனென வாழ முயல்
முயன்றாலே போதும் என்கிறார்.

சாதி, சமயம் என்னும் சங்கடத்துக் குள்ளாகாதே.

கருமத்தைக் கையை வைத்து கடமையைப் பயமின்றி ஆக்கு.

கருமத்தைப் பற்றாதே. பலனைக் கருதாதே. உடல், பொருள், ஆவி உன் அடைக்கலம் என்றே திடமுடன் ஒப்புக் கொடுத்து இறைவனைக் காண்.

## போதனா நெறிகள்

சாதாரண உலக வாழ்க்கையில் நடந்து கொள்வதற்கு சுவாமிகளின் சில வாசகங்களை தருகிறேன். இவை நற்சிந்தனைப் புத்தகத்தில் உரை நடைப்பகுதியில் இருந்து எடுக்கப்பட்டன.

அஞ்சாதே கெஞ்சாதே ஓடி
ஒழிக்காதே
உறுதியுடன் சிங்கம் கானகத்தில்
திரிவதுபோல் உலக கானகத்தில்
திரி
வெளிமாதிரி ஒன்றும் செய்யாதே
உனக்குள் நீ பெலத்துக்கொள்
ஒன்றுக்கும் பயப்படாதே
உற்சாகத்தோடு முன்னேறிச் செல்
வெற்றி உன் சொந்தம்
விதியை மதியால் வென்றிடலாம்
எதை நீ பாவனை செய்கிறாயோ
அது நீ ஆவாய்
ஆசையை ஒழி. அதுவே பூசை

எக்கருமத்தைச் செய்யும் பொழுதும் ஊக்கத்தோடும் சிரத்தையோடும் மன மகிழ்ச்சியோடும் செய்து பழகுதல் வேண்டும். அப்படிச் செய்து பழகி வந்தால் மன உறுதி உண்டாகும். அஃதாவது மனம் ஏகாக்கிர சித்தத்தைப் பொருந்தும். பொருந்தவே ஆன்ம சக்தி அதிகரிக்கும். நினைத்த காரியம் நினைத்த மாத்திரத்திலே உண்டாகும்.

பாடுபட அஞ்சினவனுக்கு ஒரு பிரயோசனமும் உண்டாகாது. பாடின்றி பட்டம் கிடையாதென்பது உலக வழக்கு.

***(பச்சைத் தண்ணீரிலே பலகாரம் சுடமுடியாது என்பதை சாதாரண பேச்சுவழக்கில் கேட்டிருக்கிறோம்.)***

யாதும் நமது ஊர். யாவரும் நமது கேளிர். நன்மை தீமை நாம் தருவன. பிறாலன்று.

*(இது புலம்பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் மக்களுக்கு நல்ல புத்திமதி)*

எல்லா இடத்திலும் எல்லாரிடத்திலும் ஈசனைக் காண்.

கடவுளைக் கும்பிடுவதே வாழ்வில் இலக்காக வைத்துக்கொள்.

ஈற்றில் எல்லாம் அவனாகவே காணப்படும்.

## இளமையில் ஆத்மீக வாழ்க்கை

சுவாமிகள் 1872ம் ஆண்டு வைகாசி மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் மாவிட்டபுரத்தில் அம்பலவாணருக்கும் சின்னாச்சி அம்மையாருக்கும் புத்திரனாகப் பிறந்து கொழும்புத்துறையில் வசித்த சிறியதகப்பனார் கிறிஸ்தவரான சின்னையா யோசப் என்பவருடன் வளர்ந்து வந்தார். யோகநாதன் என்ற பெயருடன் சம்பத்திரிசியார் (St Patricks College) கல்லூரியில் ஆங்கிலம் படித்து இரணைமடுவில் உள்ள நீர்ப்பாசன இலாகாவில் களஞ்சியப் பொறுப்பாளராக (Store-Keeper) உத்தியோகம் பார்த்தார். இளம் வயதிலேயே கடவுள் வழிபாடு, தியானம் போன்ற ஆத்மீக வாழ்வில் ஈடுபட்டிருந்தார். கிறிஸ்தவ சூழலில் இருந்தபடியினால் இவரை யோன்சுவாமி என்றும் பின்னர் யோகசுவாமி என்றும் அழைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இவர் உத்தியோகத்தில் நேர்மையும் திறமையும் உள்ளவராக ஆங்கிலேய மேலதிகாரிகளினால் பெரிய மதிப்புப் பெற்றவராக இருந்தார். சிலகாலத்தின் பின் உத்தியோகத்தை விட்டெறிந்து, முழுமையாக ஆத்மீக வாழ்விலே ஈடுபட்டார்.

### குருவைத் தேடல்

குருவருள் இன்றித் திருவருள் இல்லை. குருவைத்தேடி அலைந்து நல்லூர் தேரடியில் பலர் பித்தனென்றும், சிலர் சித்தன் என்றும் சொல்லும் செல்லப்பாச் சுவாமியை வந்தடைந்தார். செல்லப்பாச் சுவாமிகள், யோகநாதரை பல சோதனைக்குள்ளாக்கியே சீடனாக ஏற்றார். "அன்னை ஒத்த அன்புடையான் அன்பிலாதவன் போல் துன்புறுத்தி நிற்பான்" என்று சொல்லுகிறார்.

பலர் பைத்தியக்காரன் என்று பரிகாசஞ் செய்யும் செல்லப்பனை, யோகநாதன், "நல்ல மருந்தொரு குரு மருந்தை, ஞானதேசிகனை, நல்லூரில் கண்டேனே. சொல்லச் சொல்லச் சுவைக்கும் செல்லப்பன் திருநாமம். ஒப்பு உவமை இல்லாத அப்பனே செல்லப்பன். சற்குருவாக வந்து சந்தேகம் தீர்த்தாண்டான். நல்லூர்த்தேரடியில் நாங்கண்ட சிவயோகம் சொல்லமுடியாத சுகத்தினைக் காட்டியது" என்று நற்சிந்தனைப்பாட்டுகளில் பாடுகிறார்.

### சற்குரு தீட்சை

ஒரு நாள் நல்லூர்க் கந்தன் திருமுன்றில் யாரடா நீ என்று அதட்டினான். அன்றே யான் பெற்றேனருள். அருள் ஒளிக்குள்ளே புகுந்து சென்றேன் யான். மலைத்து நின்ற என்னை உற்று நோக்கி, பயம் தீரும் வண்ணம் ஒரு பொல்லாப்பும் இல்லை என்று ஓதினான். அப்படியே உள்ளது காண். ஆரறிவார் என்றான் ஒப்பிலா மாதவத்தோன். தன்னொப்பார் இல்லாத் தலைவன் திருவருளால் என்னொப்பாரின்றியிருந்தேன் என்று உருக்கமாகவும் அழகாகவும் தான் சற்குருவிடம் தீட்சை பெற்றது பற்றி, நற்சிந்தனையில் ஆசானைக் கண்டேன் என்னும் தலைப்பில் பாடுகிறார். ஆசான் அருளால் ஆசானாயினார்.

### சீடன் சுப்பிரமுனியா

யோகசுவாமிகள் குருவைத்தேடி அலைந்து செல்லப்பாச் சுவாமியை அடைந்தது போல் 1947ம் ஆண்டில் 20 வயதுள்ள ஆத்மீகத்தில் ஈடுபட்ட ஓர் அமெரிக்க இளைஞன் சற்குருவைத்தேடி சான்பிரான்சிஸ்கோவிலிருந்து கப்பல் மார்க்கமாக பம்பாய் வந்து இந்தியா முழுதும் தேடி அலைந்து கடைசியாக யாழ்ப்பாணத்தில் சிவயோக சுவாமிகளை வந்தடைந்தார். சுவாமிகள் இவருக்கு ஓம் நமசிவாய என்னும் மூல மந்திரம் உபதேசித்து சுப்பிரமுனியா என்னும் நாமம் சூட்டினார். சிலகாலம் சென்றபின் 1949ம் ஆண்டு வைகாசி விசாகம் பூரணை தினத்தன்று சந்நியாசதீட்சை கொடுத்து சுப்பரமுனியா என்னும் தீட்சா நாமத்தோடு *கடையிற் சுவாமி, செல்லப்பாச் சுவாமி, யோகசுவாமி குருபரம்பரையில் சேர்த்தார்.

மேற்கு நாடுகளில் போய் சனாதன தர்மத்தை போதிக்கும்படி முதுகில் ஓங்கி அடித்துப் பணித்தார். இந்த அருள் பணிப்பை சிரமேற் கொண்டு குருதேவர் என்று பலரால் அன்பாக அழைக்கப்படும் சிவாய சுப்பிரமுனியா பசுபிக் மகா சமுத்திரத்தில் இருக்கும் ஹாவாய் (Hawaii) என்னும் தீவில் சிவன் கோயில் அமைத்து இந்து தர்மத்தையும் சைவ வழிபாட்டையும் வளர்த்தும் பரப்பியும் வருகிறார். **Sanatana Dharma in Sanmarga Temple.** இவர் தனது பிரசுரங்களில் தன்னுடைய சற்குருயோகசுவாமிகள் பெரும் சித்தர் என்றும் கடவுளை அறிந்தவர் என்றும் அவர் கூறிய வாக்கியங்களுக்கும் போதனைகளுக்கும் விளக்கங்கள் கொடுத்து வருகிறார். இவர் நடாத்தும் **Hinduism Today** என்னும் ஆங்கிலச் சஞ்சிகை பலவேறு உலக நாடுகள் சென்று இந்து சமயத்தையும் இந்து கலாசாரத்தையும் பரப்பி வருகிறது.

சிவாய சுப்பிரமுனியா தனது தியான தரிசனத்தில் சிவபெருமான் தான்தோன்றிச் சிவலிங்கத்துடன் காட்சி அளித்த இடத்திலேயே இச்சிவத்தலத்தை ஸ்தாபித்திருக்கிறார். இத்தலம் 51 ஏக்கர் விஸ்தீரணம் உள்ளது. இது பல உலக நாடுகளின் யாத்திரிகர்களின் புகழ் பெற்ற தலமாகி உள்ளது. **(Ref. Know Thyself. Himalayan academy Publication)**

**[*கடையிற் சுவாமி 1860. செல்லப்பாச்சுவாமி 1840-1895. யோகசுவாமிகள் 1872-1964]**

**சிவதொண்டன் சபை**

எங்கள் குருபரன் விட்டுச் சென்ற அரும்பெரும் பொக்கிஷமாகிய நற்சிந்தனைப் பாடல்களை தொகுத்து புத்தகவடிவில் வழங்கிய யாழ்ப்பாணம் சிவதொண்டன் சபையாருக்கு சைவ உலகம் பெரும் கடமைப்பட்டிருக்கிறது. உலகத்திலுள்ள பல மொழியினரும் பயன் அடையும் பொருட்டு ஆங்கில மொழி
பெயர்ப்பு 1974ம் ஆண்டு இச்சபையினால் அருமையான முன்னுரையுடன் வெளியிடப்பட்டது. மொழிபெயர்ப்பும் முன்னுரையும் பெரும்பாலானவை இலங்கையின் முதல் மகாதேசாதிபதி சோல்பரி பிரபுவின் மகன் ராம்ஸ்போதம் **(Ramsbotham)** அவர்களினால் ஆக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. ராம்ஸ்போதம் அவர்கள் சுவாமிகளின் சீடனாக யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்திலும் செங்கலடியிலும் தொண்டாற்றி வந்திருக்கிறார். சாந்த சுவாமி என்னும் நாமம் இவருக்கு சுவாமிகளால் சூட்டப்பட்டது.
இலங்கை மகாதேசாதிபதியின் மகனான ராம்ஸ்போதம் M.A. பட்டதாரி. பெரும் செல்வத்துக்கு உரியவர். வேட்டி உடுத்து வெறும் காலுடன் யாழ்ப்பாண வீதிகளில் சந்நியாசியாகத் திரிவதாக அக்காலத்து லண்டன் ஆங்கிலப் பத்திரிகைகள் நகைத்தன.

சாந்த சுவாமி, ராம்ஸ்போதம் பிரபு என்ற முறையில் பிரித்தானிய பாராளுமன்ற பிரபுக்கள் சபையில் அங்கம் வகிக்கும் உரிமையை விட்டு தனிமையான ஆத்மீக வாழ்க்கையில் தனது சற்குருவின் போதனைக்கமைய இங்கிலாந்தில் வாழ்ந்து வருகிறார். தமிழில் உள்ள சில சமய நூல்களின் மொழி பெயர்ப்பிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருப்பதாக அறியவருகிறது.

**மகா வாக்கியங்கள்**

சுவாமிகள் பின்வரும் வாக்கியங்களை அதிகமாகச் சொல்லுவதாக அறிகிறோம். இவை சுவாமிகளின் மகாவாக்கியங்கள் எனப் பெயர் பெற்றுள்ளன.

ஒரு பொல்லாப்பும் இல்லை
நாம் அறியோம்
எப்பவோ முடிந்த காரியம்
முழுதும் உண்மை

இவ் வாக்கியங்களின் தத்துவங்களையும் கருத்துக்களையும் நீங்களே அறிய முயலுங்கள்.
அடியேன் இக்கட்டுரையை எழுதி இந்தப் பிரசித்தி பெற்ற பாரிஸ் மாநகரில் உங்கள் முன் வாசிப்பது எங்கள் சற்குரு சிவயோக சுவாமிகளின் பேரருள் என்றே கருதுகிறேன். சுவாமிகளின் போதனைகள், சிறப்பாகத் தற்பொழுது புலம் பெயர்ந்து ஐரோப்பாவில் வாழும் தமிழ் மக்கள், ஆடம்பரமற்ற நன்னெறி வாழ்க்கை **(unostentatious ethical life)** வாழ்வதற்கு வழிகாட்டியாக இருக்கும் என்பது அடியேனது கருத்து.

நான் இந்தக் கட்டுரைமுயற்சியை சுவாமி களின் திருவடித் தொண்டாகவே கருதுகிறேன். சுவாமிகளின் திவ்விய தரிசனத்தையும் ஆசிகளையும் காத்திராப் பிரகாரமாக 1962ம் ஆண்டில் அடியேன் பெற்றதை இங்கே கூற விரும்புகிறேன். உலகத்தைத் திருத்தாதே. உன்னையே திருத்திக்கொள் என்பது சுவாமிகளின் போதனை. அதற்கு ஏற்ப இந்தக் கட்டுரையை ஒருவரையும் திருத்தும் முயற்சியில் நான் எழுதவில்லை. சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களில் உள்ள சில போதனைகளை எனது சிற்றறிவுக்கு எட்டியவாறு உங்கள் கவனத்துக்கு தாழ்மையுடன் முன் வைப்பது எனது கடமை.


சுவாமிகள் காட்டிய வழியைச் சாதனை செய்து பலர் பயன் அடைய வேணும் என்பது எனது வேண்டுகோள். இக்கட்டுரை உங்கள் சிந்தனையைக் கவர்ந்து, நற்சிந்தனைப் பாடல்களைப் படிக்கவோ ஆராயவோ தூண்டி, சுவாமிகள் காட்டிய அவனே நான் என்னும் தியானத்தில் ஈடுபடவைத்தால் அது உலக சைவப் பேரவையின் ஓர் சிறந்த சாதனையாகும் என்று கருதுவேன்.

நற்சிந்தனைப் பாடல்களில் உள்ள அரும் பெரும் ஞானக் களஞ்சியத்தை அறிந்து வழி நடப்பதற்கு இங்குள்ள எங்கள் இளம் சந்ததியினருக்குப் போதிய தமிழ்க் கல்வி புகட்டுவது எங்கள் தலையாய கடமை என்பதை நாம் மறந்து விடக்கூடாது. புலம் பெயர்ந்து ஐரோப்பாவில் வாழும் மக்கள் தங்கள் மொழியையும் கலாச்சாரத்தையும் பின்பற்றி வாழ்வதற்கு உதவி அளிக்கத் தாராள மனப்பான்மையுள்ள ஜனநாயக முற்போக்கு நாடுகளான பிரான்ஸ், பிரிட்டன் போன்ற நாடுகள் முன் வந்துள்ளன. இந்த உதவியைப் பயன்படுத்தி எங்கள் கலாசாரத்திலும் பண்பாட்டிலும் வாழ்ந்து புகலிடம் தந்த நாட்டு மக்களின் மதிப்பையும் அன்பையும் பெற்று வாழ்வோமாக.


இக் கட்டுரையை பல அறிஞர்களுக்கு முன் வாசிக்கச் சந்தர்ப்பம் அளித்த உலக சைவ பேரவை அமைப்பாளர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

**ஓம் நமச்சிவாய**
**அன்பே சிவம்**
**வாழ்க சற்குரு திருவடி வணக்கம்**
**(இக் கட்டுரை பாரிசில் நடைபெற்ற சைவ மகா நாட்டில் வாசிக்கப்பட்டது)**

## பக்தி, சாதனை



தியானத்தைக் காட்டிலும் பகவந்நாம சங்கீர்த்தனமே சிறந்தது. எந்த மதத்துக்கும் விரோதமில்லாத ஒரு வழி உண்டென்றால் அது பகவந்நாம ஜெபந்தான்இ மேகம் இடிப்பதைப்போல ஹரிநாமத்தைச் சொல்லி, மழை பொழிவதைப் போலக் கண்ணீர் வடித்து, மின்னலைப்போல நர்த்தனமாட வேண்டும்.
அமைதி தருவது ஞானம். ஆனந்தம் தருவது பக்தி. ஸ்படிக மணிமாலை போன்றது ஞானம். நவரத்தின மாலை போன்றது பக்தி.



தேரேறி வருகின்ற திருமுருகா - உன்
திருவருளை வேண்டிநாம் நிற்கின்றோம்

# VANEE AGENCY

நாங்கள்
MAGNA SOUND
ஸ்தாபன
த்தாரின்
சீடி,
ஓடியோ
க்களுக்கு
ஏக
விநியோக
ஸ்தர்கள்

எங்களிடம்
அழகான
காஞ்சிபுரம்
மற்றும்
பட்டுப்புட
வைகள்
சாமிப்பட்டு
ஆகியனவும்
உள்ளன

**317 HIGH STREET NORTH**
**MANOR PARK**
**LONDON E12 6SL**
**TEL : 081 471 8366**

எம்மிடம்
கோயிற் தேவைகளுக்கான சகல பொருட்களும்
இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சகலவித உணவுப் பொருட்களும்
பட்டுவேட்டி, சால்வை மற்றும் திருமணத்திற்குத் தேவையான பொருட்களும்
நடனம் பயில்பவர்களுக்குத் தேவையான பொருட்களும்
யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடுகளான சைவசமயபோதினி, பாலபாடம், பாலபோதினி
கண்ணைக்கவரும் வண்ணச் சித்திரக் கதைகள்
ஆகியன நியாயமான விலையில்
நிறைந்த தரத்தோடு உங்களுக்காகக் காத்திருக்கின்றன.

**காலந்தாழ்த்தாது விரைந்து வாருங்கள்!!**

2nd Floor
194 High Street North
East Ham E6 2JA
Tel : 081- 548 0919
(Next door to East Ham Tube Station)

# SMACS TAILORS

**MENS WEAR**
**WEDDING**
**DRESS**
**& CHILDREN**
**WEAR**
**SPECIALISTS**

யாழ்ப்பாணத்தில்
ஆண்-பெண் இருபாலரர்
உடுப்புகள் தைப்பதில்
பிரசித்தி பெற்றவர்கள்

உங்களு
க்குத்
தேவையான
ரவுசர்கள்
சேட்டுகள்
பெண்களு
க்கான
சாறி பிளவுசுகள்
மற்றும் வகை
வகையான
நாகரீக
உடுப்புகள்
அழகாகவும்
கச்சிதமா
கவும்
தைத்துக்
கொடுக்க
ப்படும்

உடனே விரையுங்கள் காலதாமதம் செய்யாதீர்கள்!!

# மனிதனைத் தெய்வமாக்கவல்ல ஸ்ரீகாயத்திரி மந்திரம்

**ஓம் பூர் புவ ஸ்வ**
**தத் ஸவிதுர் வரேண்யம்**
**பர்கோ தேவஸ்ய தீமஹிநி**
**தியோ யோ நஃ ப்ரசோதயாத்**

பொழிப்புரை–
பிரமம் எங்கும் நிறைந்தது. எல்லா வற்றையும் பாதுகாத்துத் தானே தானாகி விளங்குகின்றது. அது உயிருக்கு உயிராகி சத்தியமாய் சுயஞ் சோதியாய் இன்னல் யாவற்றையும் களையவல்லதாய் பரிபூரணானந்தமாகி ஆதியும் அந்தமும் கடந்த நித்தியானந்த சோதியாய் விளங்கு கின்றது. அப்பரம்பொருள் பாவங்களை நாசம் செய்கிறது. அற்புதமும் ,ஆனந் தமும், பிரகாசமும் வெற்றியும் உடையது.

பதவுரை–
ஓம்–ஓம், பூ–பூலோகம், புவ–புவர்லோகம் ஸுவ–ஸுவர்லோகம், ய–யார்,ந–நம்மு டைய, திய–அறிவை
பிரசோதயாத்–தூண்டுகின்றாரோ, தத்–அந்த ,தேவஸ்ய–தேவனாகிய, ஸவிது–கடவு ளுடைய, வரேண்யம்–போற்றுத ற்குரிய, பர்க–ஒளியை, தீமஹிநி–தியா னிப்போமாக!

**காயத்திரி மந்திரம்**
காயத்திரி என்பது கானசொரூபமாய் உள்ளது என்னும் பொருளுடையது. காம்–இசை. இம்மந்திரம் மிகவும் சிறந்ததாதலின் அருளாளர் இதனை உயர் காயத்திரி என்று உரைப்பார். இம் மந்திரத்தை இறைவன் மும்மூர்த்திக ளுக்கும் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் உபதேசித்தருளினார் என்பது வரலாறு. இதனைப் பிரமகாயத்திரி சூரிய காயத்திரி முதலிய பெயர்களாலும் வழங்குவர். இது வேதத்தின் சாரமாக அமைந்துள்ளது. இம்மந்திரத்துக்கு தெய்வம் சூரியன். இருடி விசுவாமித்திரர்.
காயத்திரி மந்திரம் புறத்தில் இருக்கும் சூரியனை எடுத்துக்காட்டாக வைத்து அகத்தே உறையும் அந்தராமனை அணு கவும் அவன் அருள் பெற்று நல்ல வண்ணம் வாழவும் துணை புரிகின்றது. ஜீவாத்மனைப் படிக்கிரமத்தில் உயர்த்தி விடுதலைக்கு வழிகாட்டுகின்றது.
காயத்திரி மந்திரத்திர செபத்தின் பயன்
காயத்திரி மந்திர செபத்தால் மனம், புத்தி, சித்தம், முதலிய அந்தக் கரணங்கள்

திருமதி திலகவதி
யோகரட்ணம்

சுத்தியடைகின்றன. மனம் சுத்தியடைந்தால் இகவாழ்வு இனிதாகும். மனநலம், மன்னு யிர்க்கு ஆக்கம் என்றார். வள்ளுவர் பெரு மான். ஆக்கம்–பெருஞ்செல்வம், செப த்தினை "ஜப யக்ஞம்" என்று கூறுவர். யக்ஞம்–கேள்வி, காயத்திரி செபம். ஜீவாத்மனைப் பரமாத்மன்மயமாகப் பண்படுத்துகின்றது. சொல்வன்மை, நற் பண்பு, செல்வம் முதலியன சித்திரிக் கின்றன. காயத்திரி செபம் சிறந்த பிரார்த்த னையுமாகும். அது தனக்காக அன்றி பிறர்க்காகவும் பிரார்த்திப்பதற்கேற்றதாக அமைந்துள்ளது. "தீமஹி" என்ற பதம் பிரார்திப்போமாக என்ற பொருளில் பன்மையில் அமைவதும் இதனை இனிது புலப்படுத்தும்.
காயத்திரியைப் பற்றி பாரத நாட்டில் பல மொழிகளிலும் எண்ணற்ற நூல்கள் இருக் கின்றன. காயத்திரியைப் பற்றி மாபெரும் வித்துவான்கள் சாஸ்திரிகள் எல்லோரும் அதிக ஆராய்ச்சியின் பேரில் நூல்கள் எழுதியிருக்கின்றார்கள். இவைகளில் கிடைக்க முடியாத காயத்திரி பற்றிய பல இரகசிய வித்தைகளின் உண்மையை மகான்கள் பொதுமக்கள் அறியாதவாறு மறைத்து வைத்து அவர்களை அடுத்து நிற்கும் சீடர்களுக்கு மட்டும் நேர்முகமாக கற்பித்து வருகின்றனர். வேத மந்திரங்களில் காயத்திரி "நான்" என்கிறான் கீதையில் கண்ணன். காயத்திரியை விட சக்தி நிறைந்தது விலை மதிக்க முடியாத இரத்தினங்கள் போன்ற மந்திரம் மண்ணுலகிலுமில்லை, விண்ணுலகிலுமில்லை,நான்கு வேதங்களின் தாய் காயத்திரி.
" என்னால் துதிக்கப்பட்ட த்ரிஜர்களைப் பவித்திரம் செய்யவல்ல வேதத் தாயாகிய காயத்திரி ஆயுள் ,பிராமணன்,மக்கள் ,பசுக்கள், புகழ்,செல்வம், பிரம்மதேஜஸ் முதலியவைகளைக் கொடுப்பாளாக" (அதர்வவேதம்19,17,1)
காயத்திரியை ஜெபிப்பதாலேயே மனிதன் சூரியனைப் போல் பிரகாசமுடையவ னாகின்றான். காயத்திரி சூரிய சக்தி. அதுவே பிராணசக்தியும் கூட. பிராணனை ரட்ஷிப்பவன் காயத்திரி ,சப்தரிஷிகளும் காயத்திரியை உபதேசித்தே இந்திரனையே சபிக்கும் ஆற்றலைப் பெற்றதொடு பூமண்டலம் தோன்றிய நாள் முதல் இதுவரை சிரஞ்சீவிகளாய் வாழ்ந்து வருகின்றார்கள். பிரம்மஹத்தி திருடு குருபத்தினியை சேரல் போன்ற பாவ ங்களும் காயத்திரியை ஸ்மரிப்பதால் நாசமாகி விடுகின்றன. இத்தகைய சக்தி நிறைந்த ஜபித்த மாத்திரத்தில் அற்புதமான சித்திகளை அளிக்கவல்ல காயத்திரி மந்திர இரகசியங்களை குருபரம்பரையில் தொடர்பு கொண்டவர்களே அறிவார்க ளேயன்றி சாதாரணக் கல்விமான்கள், சாஸ் திரிகள். அறியமாட்டார்கள். அதனாலேயே அவ்விரகசிய வித்தைக்கு "குப்தவித்தை" மறைக்கப்பட்ட வித்தை என்று பெயர் வந்துள்ளது. உண்மையை ஏன் இப்படி மறைத்து வைக்கவேண்டும் எல்லோரும் அறியப் புத்தகங்களில் வெளியிடக்கூடாதா எனப் பக்தர்கள் கேட்கலாம். கூடாது அவ்வுண்மைகள் வெளியானால் எந்தக் கயவனும் எளிதில் சில சக்திகளை பெற்றுவிடமுடியும் . அதைக்கொண்டு அவன் மனித இனத்திற்கு சொல்லொணாத் துன்பங்களை செய்ய முடியும்.இதனால் உலக பரிமாணமே பாதிக்கப்படலாம். இதனால் தான் இவ்வுண்மைகளைப் பக்குவமறிந்து தீய வழிகளில் உபயோகிக்கமாட்டானென்று தெரிந்த வர்களுக்கு மட்டும் வெளியிட்டு வருகின்றார்கள் குப்தவித்தையின் அதிகா ரிகள்..

தமிழ் நாட்டில் நெடுங்காலமாக சில தவறான நம்பிக்கைகள் மக்கள் மனதில் அகல முடியாதபடி வேரூன்றி விட்டிருக்கின்றன. நந்தன், சபரி,கண்ணப்ப நாயனார்,இன்னும் எத்தனையோ நாயன்மார்கள் ஆழ்வார்கள் பக்தர்கள் யோகிகள்,பிராமணர்களாய் இல்லாமல் இருந்தும் பிராமணர்களைவிட சிறந்த தெய்வப்பேற்றைப் பெறவில்லையா? உண்மை என்னவென்றால் ஜன்மனா ஜாய தே ஸுத்ர கர்மணா ஜாய தே த்விஜ: என்ற கீதாவாக்கியம் தான் சரியானது. பிறப்பில் எல்லோரும் சூத்திரர்கள் ஆகத்தான் பிறக்கிறார்கள். பிறகு கர்ம சமஸ்காரங்களால் தான் த்விஜர்களா கிறார்கள். த்விஜ என்ற சொல்லுக்கு இரண்டாவது தடவை பிறத்தல் என்று பொருள் இதையே வள்ளுவர்-

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்.**


எனக் கூறியுள்ளார். த்விஜத்வம் யாருக்கும் பிறப்பில் உண்டாவதில்லை. தகுந்த சம்ஸ்காரத்தைப் பெறும்போது தான் உண்டாகின்றது. இதையாரும் பெறலாம் ஏனெனில் பிறப்பில் எல்லோரும் சூத்திரர்தானே!

பெண்கள் காயத்திரி சாதனைகளைச் செய்யலாமா? ஏனிந்த சந்தேகம். பெண்களின் உடலில் அறியாமை சூழ்ந்த ஆன்மா இல்லையா? அது நற்கதி பெற வேண்டாமா அதற்கு பதி சேவையே போதும் என்கிறீரா? கேளுங்கள்-கார்கீ, மைத்ரேயி , அனுஷ்யா, அருந்ததி, தேவயானி, அகல்யா, குந்தி, ப்ருந்தா, முண்டோதரி, தமயந்தி, ஸாவித்ரீ, லோபாமுத்ரா,சர்மிஸ்டா, சீதா, பார்வதி, சத்யவதி, சுகன்யா முதலான பதிவிருதைகள் காயத்திரி சாதனையாலேயே அறிய சித்திகளைப் பெற்றார்கள் என ஆதாரங்களிருக்கின்றன. சந்தேகமே படாதீர். பெண்களும் காயத்திரி சாதனை பயிலலாம்.

**சிவச் சின்னங்கள்**

சைவ சமயத்தின் முக்கியமான சின்னங்கள் மூன்று.
அவை
திரு நீறு
உருத்திராட்சம்
பஞ்சாட்சரம் என்பன.

## லிங்க வழிபாட்டின் தத்துவ விளக்கம்



சிற்ப சாஸ்திர ஆகம விதிப்படி லிங்க அமைப்பு இதுவாகும்.

லிங்கம் மூன்று பகுதிகள் கொண்டது.

அடிப்பாகம் - பிரும்மபாகம் (உயிர்ப் பாகம்)

மனிதனின் உயிர் , மூச்சு இரண்டுக்கும் உரிய இது உயிர்ப்பாகம் எனப்படும். எனவே இது பிரும்ம பாகம்.

நடுப்பாகம்- விஷ்ணுபாகம்( பெண் பாகம்)

இது மனிதனின் தசை, ரத்தம் இவற்றிற்குரிய பாதுகாப்பான விஷ்ணு பாகம் எனப்படும்.

மேல் பாகம்- சிவன்பாகம் (ஆண் பாகம்) இது மனிதனின் எலும்பு நரம்பு இவற்றைக் குறிக்கும். எனவே இது சிவன் பாகம்.

ஒரு லிங்கத்தை மட்டுமே வணங்கும் பட்சத்தில் மும்மூர்த்திகளையும் பூசிக்கும் பலன் நமக்குக் கிட்டுகிறது. பிரும்ம பாகம், விஸ்ணுபாகம் , சிவன் பாகம் மூன்று பாகங்களும் சம அளவில் அமைந்திருப்பின் -அது-சுவாமி அமர்ந்த திருக்கோலம்.

சிவன் பாகம் மற்ற இரண்டையும் விட அளவில் (உயரம்) குறைந்திருப்பின்

நாதன்ஸ்
NATHANS
இலங்கையிலிருந்தும்
இந்தியாவிலிருந்தும்
வருவிக்கப்பட்ட
சகலவிதமான
உணவுப் பொருட்கள்,
பத்திரிகைகள், சஞ்சிகைகள்,
வீடியோ,ஓடியோக்கள் யாவும்
எம்மிடம் கிடைக்கும்
கதிரை வாடகைக்கு விடப்படும்
249, ILFORD LANE
ILFORD
ESSEX IG1 2SB
TEL: 081 514 1744

வளம் நலம் தந்திடவே
வணங்குகிறோம்
வடிவேலனை
VINNEY VIGNES
Certified Accountants &
Registered Auditors
84 ILFORD LANE
ILFORD
ESSEX IG1 2LA
TEL : 081 553 5876
0956 277112
FAX : 081 553 3721

# குறளோசை

உமா



இறைவனை அடைய பல வழிகள் உண்டு ஆனாலும் ஒருவன் எந்த ஒரு வழியைப் பின்பற்றினாலும் அவன் உலகியல் பந்தபாசங்களில் நின்று மெல்ல மெல்ல விடுபட்டு துறவற நெறியில் தலைப்பட்டே இறைவனை அடைவான். அந்த வகையில் செல்லும் ஒருவன் மீண்டும் பூவுலகில் பிறந்து துன்பத்தை அனுபவிக்க தன்னை ஒருபோதும் தயார்ப்படுத்தமாட்டான். இத்தகு நிலைதனை வள்ளுவர் எவ்வாறு விளம்புகின்றார் என்பதை சற்று நோக்குவோம்.


" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவார்
மற்றீண்டு வாரா நெறி "


இக்குறளின் பொருள் யாதெனில் ஞானநூல்களைக் கற்று மெய்ப்பொருளின் சிறப்பினை அறிந்தவர்களை மீண்டும் இந்த உலகின் கண்ணே வந்து பிறவாதிருப்பதற்கான நெறியையே மேற்கொள்வார்கள். அதாவது அறிவூட்டும் ஞான நூல்களைக் கற்று மெய்ப்பொருளான இறைவன் சிறப்பினை நன்கு அறிந்தவர்கள் திரும்பத் திரும்ப இந்தப் பூவுலகிலே பிறந்து மாயை வழி கட்டுப்பட்டு துன்பச்சுமைகளைச் தாங்கும் வண்ணம் தம் மனிதப்பிறைவியை மாசுபடுத்தமாட்டார்கள். அதற்கு மாறாக ஆன்மீக நெறியில் நின்று இறைவனை அடைய முயற்சி செய்வார்கள். இத்தகைய நிலையை பூசலார் என்னும் சிவனடியார் கதைமூலம் காண்போம்.

இந்தியாவில் எப்பொழுதும் நல்லொழுக்கம் உயர்ந்து ஓங்கும் பெருமை பெற்றது தொண்டைநாடு. அந்நாட்டில் சிறியதொரு ஓர் திருநின்றவூர். வேதியர் குலத்தில் பூசலார் என்னும் ஒருவர் இருந்தார். அவர் தன் மனம் மொழி, மெய்,மூன்றையும் சிவன் திருவடிகளில் சேரும் வண்ணம் சிவநெறி வழுவாது சிவபக்தி நெறி வளரும் வகையில் வளர்ந்தவர். உண்மைப்பொருளான பதியை அடைவதற்கு காரணமாகிய வேதம், ஆகமம், உபநிடதம் முதலாளன ஞான நூல்களைக் கற்றுணர்ந்தவர். சிவனுக்கும் சிவனடியார்க்கும் பணி செய்து பரவுவதையே மனிதப்பிறவியின் நோக்கம் என எண்ணி வாழ்ந்தவர். எவ்வகையாலும் பொருளைத்தேடி அடியவர்களுக்கு கொடுப்பவர். சிவபெருமான் எழுந்தருளியிருப்பதற்கு திருக்கோயில் ஒன்று அமைக்க பூசலார் நினைத்தார். அதற்காக வருந்தி வருந்திப் பொருட்களைத் தேடும்
முயற்சியில் சிலகாலம் போக்கினார். ஆனால் எந்தப்பொருளும் கிடைக்கவில்லை. இனி என் செய்வேன் என்று வருந்தினார். இறுதியில் ஆலோசித்தார். நான் வணங்கும் இறைவனும் இறைநெறியும் உண்மையானால் நான் கட்டப்போகும் மனக்கோயிலில் இறைவன் வந்து குடியிருப்பான் என்று கற்பனையில் மனக்கோயில் கட்டினார். கட்டிடவேலைக்கு வேண்டிய திரவியங்களைத் தேடி நல்லதொரு நாளில் சிவாகம முறைப்படி அடிகோலினார். அன்பின் நிறைவினாலும் ஆசையினாலும் இரவிலும் கண்துயிலாமல் மனக்கோயில் ஒன்றைக் கட்டிமுடித்தார். சுதை வேலைகளை முடித்தார். விமானத்தின் முடிவில் கலசம் ஒன்றையும் வைத்தார். கோயிலைச் சுற்றி மதில் சுவர் கட்டினார். குளமும் வெட்டினார். வீதிகளையும் அமைத்தார். எல்லா வேலைகளையும் கற்பனையால் முடித்து இறுதியில் கும்பாபிஷேகம் செய்து இறைவனை எழுந்தருளச்செய்ய நல்ல நாளையும் குறித்தார்.
இது இவ்வாறு இருக்க காஞ்சிபுரத்தில் பல்லவ அரசன் கற்கோயில் ஒன்றைக் கட்டி முடித்து அதற்கு குடமுழுக்கு செய்து இறைவனை எழுந்தருளச் செய்ய நாள் குறித்திருந்தான். பூசலார் எடுத்த நாளும் பல்லவ அரசன் எடுத்த நாளும் ஒரே நாளாக இருந்தது.

சிவபெருமான் பல்லவ அரசன் கனவில் சென்று திருநின்ற ஊரில் பூசல் என்ற அன்பன் நீண்ட நாள் நினைத்து எழுப்பிய மனக்கோயிலில் நாம் புகுவோம். ஆதலின் நீ உனது ஆலயப் பிரதிஷ்டை நாளை ஒத்திவைப்பாயாக என்று கூறி பூசலார் கட்டிய மனக்கோயிலில் குடிபுகுந்தார். பல்லவ அரசன் கண்விழித்து அந்தப்பூசலாரை நான் சென்று வணங்க வேண்டும் என்று அவாவுற்றார். தன்பரிவாரங்களுட திருநின்றவூருக்குச் சென்று அங்குள்ளவர்களை வினவினான். இங்கு பூசலார் கட்டிய கோயில் எங்கு உண்டு என கேட்டார்கள். அதற்கு அவர்கள் பூசலார் கட்டிய கோயில் இங்கு ஒன்றும் இல்லையே என பதிலளித்தார்கள்.அரசன் பூசலாரை நேரடியாகச் சந்தித்து நீர் கட்டிய கோயில் எங்கு உண்டு என்று கேட்டான். அதன் பிரதிஸ்டை நாள் இன்று என்பதை சிவனலுளால் அறியப் பெற்றேன்.
இவ்வாறு மன்னன் மொழிவதை கேட்ட பூசலார் பேரானந்தம் அடைந்து தன் நிலைமையைக் கூறினார். மன்னனும் பூசலாரைப் போற்றிச் சென்றான்.

இதிலிருந்து நாம் சிவனையும் சிவனடியாரையும் போற்றித் துதித்தால் மெய்யான இறைவனை நாம் காணமுடியும் என்பதை வளடளுவப் பெருந்தகை உணர்த்துவதைக் காணக் கூடியதாகவுள்ளது.





க. உமாமகேஸ்வரன்

# மருவும் அடியார்கள் மனதில் விளையாடும் மரகதமயூரப் பெருமாளின் கருணை

எழில் குலவும் இடங்களையெல்லாம் தனதாக்கிக்கொண்டவன் முருகன். குன்றெல்லாம் எங்குண்டோ அங்கெல்லாம் தனது கோயில் இருப்பதாகக் கூறுகின்றான். பழமுதிற் சோலைகளும் குன்றுகளுமே அவன் குடியிருப்பு. குன்று தோறும் எதற்காக குமரன் கோயில் கொள்கின்றான்? குன்றின் உச்சியில் வீற்றிருக்கும் அவன் அச் செயல் மூலம் அயனெனவாகி, அரியனவாகி அரனெனவாகி, அவர் மேலானாகிய யான் குன்றாக உயர்ந்து நிற்கும் உள்ளங்களிலே தான் கோயில் கொள்வேன் என கூறாமல் கூறுகின்றான் என்பதைத் தவிர குன்றுதோறாடும் குமரன் என்பதற்கு வேறு பொருள் எது தான் இருக்க முடியும் ?

குமரன் தரும் இந்த விளக்கத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு தமது உள்ளங்களைகுன்றாக்கும் முயற்சியில் ஒரு கால் இரும்பாகவும் கல்லாகவும் மக்கள்மாற்றிவிடுவார்களோ என மகான் ஒருவர் அஞ்சுகின்றார். அங்ஙனம் மக்கள் மனசை மாற்றிவிடக்கூடாதென எச்சரிக்கை விடுக்க வேண்டுமென்றும் அவர் விரும்புகின்றார். அவருக்குத் திருமணம் ஒன்று பற்றி பேசும் வாய்ப்பு வருகின்றது. சந்தர்ப்பத்தை நழுவவிடாது பயன்படுத்தி விடுகின்றார் அவர். திருப்பரங்குன்றிலே திருமணம்.தேவசேனாதிபதியாகிய திருமுருகனுக்கும்தெய்வயானை அம்மைக்கும் தான் திருமணம் மலையடிவாரத்திலே ஒப்பனையை ஒருவாறு முடித்துக் கொண்டு ஒல்கி ஒசிந்து மலைமேல் நடைபயில்கின்றார் தெய்வயானை அம்மை. இந்தக்காட்சியை அகக்கண்களால் தரிசிக்கும் அந்த மகானின் -கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகளின் - மனச்செவியிலே திருமணத்திற்கென கூடியிருப்போரது உரையாடலும் தெளிவாகவே விழுகின்றது.

தெய்வயானை அம்மைக்கு அற்புதமாக ஒப்பனை செய்திருக்கின்றார்கள். ஆனால் ஒப்பனை சற்றே மிகை என்று தான்



தோன்றுகின்றது. இப்படி ஒரு குரல். மிகை என்று அப்படி எதைத் தான் குறிப்பிடுகின்றீர். -இது மற்றொரு குரல்.

செம்பஞ்சிக்குழம்பை அவர் பாதத்திற்கு தீட்டாமலே விட்டிருக்கலாம் ஏன் தெரியுமா? இந்தத் திருப்பரம் குன்றிலே ஏறும்போதே அம்மையாருடைய பாதங்கள் பஞ்சிதனில் மெல்லடிகள்-கன்றிச் சிவந்துவிடுமே!

இயற்கையாகவே சிவந்த அவர் பாதங்கள் மேலும் கன்றிச் சிவக்கும் வாய்ப்பிருக்கும்போது செம்பஞ்சுக்குழம்பை தீட்டி செயற்கையாகச் சிவக்கும்படி வேறு செய்யத்தான் வேண்டுமோ-இப்படி முத்தாய்ப்பு வைக்கின்றது முதற்குரல். கச்சிசயப்ப சிவாச்சாரிய சுவாமிகள் மெல்ல நகைக்கின்றார்கள்.

தெய்வயானை அம்மையின் பாதங்களை பஞ்சிதனில் மெல்லடி என்கிறார்கள். உண்மை தான். திருப்பரம் குன்று கடினமான பாறைகள் நிறைந்த மலைதான். ஆனால் தெய்வ குஞ்சரியினது பாதங்களைவிட மென்மையான பாதங்கள் இருக்கின்றனவே. இவை இந்தத் திருப்பரம் குன்றைவிட கடினமான அடுக்கலிலே -கற்பாறைகளிலே நடக்கின்றனவே. அந்த மென்மையான பாதங்கள் செஞ்சுடர் வைவேலுடைய செம்மல் ஆகிய திருமுருகனின் திருவடித் தாமரைகள். அந்த அடுக்கல் வேறு எதுவுமன்று. தீயேன் நெஞ்சக அடுக்கலே தான் அது. எனது நெஞ்சாகிய புல்லிய அடுக்கலிலும் புனிதனாகிய திருமுருகனின் திருவடித் தாமரைகள் நின்றுலவிக் கன்றுமாயின் அவனது கருணைதான் எத்தகையது.? வரையின் பால் குஞ்சரி நடந்த செயல் இதைவிடவா புதுமையானது? இவற்றையெல்லாம் இந்த உலகம் என்று தான் உணரப்போகின்றதோ? அவரது அரியதொரு பாடலாக மலர்ந்து அருள்மணம் வீசுகின்றது.

பஞ்சிதனின் மெல்லடி பனிப்ப வரையின்பால்
குஞ்சரி நடந்த செயல் கூறுபுதுமைத்தோ
செஞ்சுடர்வை வேலுடைய செம்மலடி
தீயேன்
நெஞ்சக அடுக்கலில் நின்றுலவும் என்றால்

(தெய்வயானை அம்மை திருமணப்படலம் பாடல்-231)

பஞ்சி-பஞ்சு, பனிப்ப-நடுங்க, வரை-மலை, வை-கூர்மை,அடுக்கல்-மலை.

செஞ்சுடர்வை வேலுடைய செம்மலடி கன்றாது நின்றுலவத் தக்கதாக நமது நெஞ்சக அடுக்கலை -நெஞ்சக் கனகல்லை நாம் நெகிழ்ந்துருகச் செய்ய வேண்டாமா? நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையாதொரு போதும் இருந்தறியேன் என்ற அப்பர் அடிகளின் அனுபவப் பேற்றிற்கு அருகதை உடையவராக நம்மை நாம் ஆக்கிக்கொள்ள வேண்டாமா? என்றெல்லாம் மிக்க ஆராமையோடு கேட்கின்றார் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்.அப்படி நமது உள்ளங்களை குமரன் கோயில் கொள்ளும் குன்றங்களாக ஆக்குதற்கோர் வாய்ப்பினை நல்கும் முகமாகவே மருவும் அடியார்கள் மனதில் விளையாடும் மரகதமயூரப்பெருமாள் தேர் உற்சவம் கொண்டருளி அடியவர்க்கு மூவபண்டாரம் வழங்குகின்றான். வந்து முந்துமின்.

# விக்கினம் தீர்க்கும் விநாயகர்

-வீ ஆறுமுகதாஸ்-

விநாயகர் விநாயகர் விக்கினம் தீர்க்கும் விநாயகர் (விநாயகர்)
விம்பிள்டன் பதியினிலே வீற்றிருக்கும் விநாயகர்
நம்பினோர் வாழ்வினிலே நலந்தரும் விநாயகர் (விநாயகர்)
ஆற்றல்மிக்க விநாயகர் அனைத்து நல்லோர் மனதிலும்
வீற்றிருக்கும் விநாயகர் வினைகள் தீர்க்கும் விநாயகர் (விநாயகர்)
ஆனை முகம் கொண்டவர் ஐந்து கரங்கள் உடையவர்
தேனைவிட இனியவர் தீயவற்றைத் தொலைப்பவர் (விநாயகர்)
மாதா பிதாவை வலம் வந்து மாங்கனி பெற்றுமே
மாதா பிதாவின் பெருமையை மக்கக்கு உணர்த்தினார்(விநாயகர்)
கய(ா)முகசூரனைக் களத்தில் வென்று தேவர் தம்
வியாகுலம் யாவையும் விரைவிற் தீர்த்தவிநாயகர்(விநாயகர்)
ஆறுமுகக்கடவுளுக்கு அண்ணனான விநாயகர்
கூறும் இன்பம் யாவையும் குவலயத்திற் தருபவர்(விநாயகர்)
வல்லபை அணங்கினை வதுவை செய்த விநாயகர்
வள்ளிப் பெண்ணைத் தம்பிக்கு வதுவை ஆக்க உதவினார்(விநாயகர்)
இங்கிலாந்துச் சைவருக்கும் இஷ்டதெய்வமானார்
மங்கினாலும் அவர் வாழ்வைப் பொங்கச் செய்யும் விநாயகர் (விநாயகர்.)

வியாகுலம்-கவலை, குவலயம்-உலகம், வதுவை-விவாகம்
வதுவை மனைவி)

# குறைகள் கலையும் குமரவேள்

-வீ ஆறுமுகதாஸ்-

குமரவேள் குமரவேள் குறைகள் களையும் குமரவேள்(குமரவேள்)
உயர்வாசற் குன்றினிலே உறைகின்ற குமரவேள்
உயர்வான மனத்தினர்க்கு உதவுகின்ற குமரவேள் (குமரவேள்)
ஆறுமுகமானவர் ஆறிருபுயங்களை உடையவர்
ஆறுபடை வீடுகளில் அழகுஒழுக அமர்பவர் (குமரவேள்)
சூரனைவென்றுமே சுரர்பயம் தீர்த்தவர்
மாரனை நல்லமைத்துனராய்க் கொண்டவர் (குமரவேள்)
கிரவுஞ்சரக் குன்றினைக் கிடுகிடுக்கப் பிளந்துமே
கிரவுஞ்சரத்துள்ளிருந்த கீரனுக்கு அருளினார் (குமரவேள்)
நாவிற்கனியை ஔவைக்கு நல்கிய குமரவேள்
தேவமகள் குஞ்சரியை திருமணம் செய்தவேள் (குமரவேள்)
ஆனைமுகக்கடவுளுக்கு அருமைத்தம்பியானவர்
தேனைத் தினைமாவுடன் தித்திக்க ஏற்பவர் (குமரவேள்)
வள்ளிப் பெண்ணைத் தினைப்புனத்தில் வதுவை செய்த குமரவேள்
புள்ளிமயில் மீதமர்ந்து புவியை வலம் வந்தவர் (குமரவேள்)
இங்கிலாந்துச் சைவருக்கும் இஷ்டதெய்வமானவர்
மங்கினாலும் அவர் வாழ்வைப் பொங்கச் செய்யும் குமரவேள் (குமரவேள்)
(மாரன்-மன்மதன்(திருமாலின் மைந்தன்) கீரன்-நக்கீரன் குஞ்சரி-தெய்வயானை,
வதுவை- திருமணம், புவி-உலகம்)

# SHARK LANKA COMMUNICATIONS

சார்க் லங்கா
நடமாடும் தொலைபேசி
ஸ்தாபனம்

**SPECIALISTS IN MOBILE PHONES**

AUTHORISED DEALER FOR
MERCURY - ORANGE
VODA FONE
CELLNET
PHONE INSURANCE
SERVICE & REPAIR
ACCESSORIES&
RECONNECTIONS

WE PROVIDE FRIENDLY SERVICE AND FREE ADVICE

நம்பிக்கை
நாணயம்
துரிதம்



மேர்க்குறி, ஒறேஞ் ,
வோடபோன்
செல்நெற் ஆகிய
நடமாடும்
தொலைபேசிகளுக்கு
நம்பிக்கையுடன் நீங்கள்
நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

FURTHER DETAILS CONTACT
**SURESH**
ON
TEL: 081-552 5060
FAX: 081-470 1021
MOBILE : 0956-327 320(24 Hrs)
0956-559 179(24 Hrs)

**OPEN SEVEN DAYS**

2nd floor
194, High Street North
East Ham
London E6 2JA

NEXT DOOR TO EAST HAM TUBE STATION



மால்முருகன் வருகின்றான்
மனங்களெல்லாம் நிறைந்திடுவான்!!

# 6 Kumars
## CASH & CARRY

**285-287 High Street North, Manor Park, London E12 6SL**
**Tel : 081 471 5742**

இலங்கை, இந்தியா மற்றும் ஆசிய நாடுகளில்
இருந்து பலதரப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்து மொத்த
விலையிலே விற்கும் ஒரே ஸ்தாபனம்
23~06~94 தொடங்கி 23~08~94 வரை
எங்களின் பொருட்கள் உங்களுக்கு இலவசம்

1 பெட்டி அரிசிமா எடுத்தால்
2 பக்கற் இடியப்பம் இலவசம்

ஒரே தடவையில் இலங்கை உணவுப்
பொருட்களை 25 பவுண்களுக்கு
மேல் வாங்கினால் 500 கிராம்
யாழ்ப்பாண மிளகாய்த்தூள் இலவசம்

# சைவமும் தமிழும்

எஸ். கிருஸ்ணன்
சிங்கப்பூர் இந்து சபை

கல்தோன்றி மண் தோன்றாக்காலத்தே வாலொடு முன்தோன்றி மூத்தகுடியாம் என சிறப்பிக்கப்படும் தமிழ்க்குடியின் வரலாற்றைப் படிக்கும் காலத்திலேயே சிவவழிபாடு சீரும் சிறப்பும் பெற்று இந்நாள் வரையிலும் விளங்கிவருகின்றது.

தமிழ்மொழி வளத்தின் சிறப்பின் செம்மையாய்ச் செப்பிடும் தொல்காப்பியர் இலக்கணம் "மாயோன் மேய காடுறை உலகம் " எனவும் தெய்வ வழிபாடு போற்றிப் பகர்கின்றது.

சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டில் தெய்வவழிபாடு வருகின்றது.

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் சிவபெருமானை ஏற்றிப் போற்றிப்பாடுகின்றது. "பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்" என அழகுற பொருள்படக்கூடிய பெருமை கொள்கின்றது.

என்று மனிதன் இயற்கையை வழிபட ஆரம்பித்தானோ ஒளிவழிபாடு உருக்கமான வழிபாடாக அவனுள் குடிகொண்டது. ஆரம்பத்தில் ஆதவன், அம்புலி, தீ என்று வழிபட்டான். பின்னர் அவை அளப்பரிய வளமும் எண்ணற்கரிய ஏற்றமும் யாவையும் தோன்ற தோற்றுவாயாய் இருந்து வரும் என்றும் இறவா பிறவா பெருந்துணையான தேவதேவனாய், ஒளி வடிவாய் மிளிரும் சிவபெருமானே சிவ வழிபாட்டிற்குரிய மூலமாய் என்றும் எங்கெங்கும் பரவலாயிற்று.

இவ்வழிபாடு காலங்காலமாக பரிபூரணத்தோடு இலங்குவதால் இறவா நிலையும் , பிறவா நிலையும் எய்துதற்கு ஏற்ற வழிபாடு இதுவொன்றே என்பதற்கு சிவனடியார்கள் ஒளியுள் கலந்து பேரின்ப வெள்ளத்தில் மூழ்கி அருட்பெருஞ் சோதியானார்கள் என்று காலங்காலமாக ஏற்பட்டு வரும் வரலாறுகளே தக்க சான்றுகள்.

சங்க காலத்திற்கு முன்பே தோன்றிய சிவவழிபாடு தமிழ்மொழி சிறக்க எழுத்தாளக்கிளவியாக எழுதி ஓதி வரும் வேதங்களாக குருவழி வழிபாடாய் மிளிரும் சின்முத்திரைச் சின்ன வழிபாடாக வாழவாங்கு வாழ்வதற்கு வாழ வளர மாமறையாயும் இருந்து வருகின்றது.

அன்றாலின் கீழ் அமர்ந்து தென்முகக்கடவுளாய் அறமுரைத்தான் என்பதை "கல்லாலின் கீழமர்ந்து நால்வர்க்கு அறமுரைத்தான்" எனசங்க இலக்கியங்கள் நவில்கின்றது.

"தெய்வப்புலவன் திருவள்ளுவனாரும்

"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு"

என்கிறார்.

இங்கு ஆதிபகவன் என்பது சிவ பெருமானையே குறிக்கின்றது.

இதனை உறுதிப்படுத்தவே

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தாதார் இறைவனடி சேராதார்."

என்கிறார். இங்கு பிறவிப் பெருங்கடலை நீந்திக்கடப்பதற்கு சிவவழிபாடு உகந்தது என்பது குறிப்பால் உணர்வது விருப்பாகும்.

இன்னும் சிவபெருமானையே திருத்தோணியப்பர் என தமிழ்மறைகள் ஓதுவதை ஈண்டு ஒப்பு நோக்குக

## பிற்காலத்தில் சிவவழிபாடு

சங்க காலத்திற்கு பின் முன் என்று பிரித்துக்கொண்டோமானால் பஃறுளி ஆற்று பன்மலை தொடக்கத்தில் கூட சிவவழிபாடு இருந்ததாய் சிற்றரசர்களின் செப்பேடுகள் கூறுகின்றன.

இதிகாசங்கள் இரண்டு அவை இரண்டிலும் சிவவழிபாடு பற்றி சிறப்பான செய்திகள் வலம் வருகின்றன. அர்ச்சுனன் சிவனை நோக்கி தவம் செய்வதாய் செய்தி . இராமாயணத்தில் வரும் இலங்கேஸ்வரன் இராவணன் சிவாகம பூசை செய்வதில் தேர்ச்சி பெற்றவன் . கைலாயநாதனை சாமகானத்தில் பாடிப் பரவசப்படுத்தினான். தமிழகத்தை சேரசோழ பாண்டியன் ஆகிய மூவர் தலைமுறையினர் ஆண்டுவந்த காலத்தில் சிவவழிபாடு நிறைந்திருந்தமையை இன்று நாம் காணும் சிவாலயங்களே பறை சாற்றுகின்றன.

வடநாட்டில் சோமேசுவரர் ஆலயத்தை குறிப்பிடலாம். மேலும் வடக்கே கைலாயம் இடப்பாகத்தில் சக்தி கொண்ட கைலாய நாதர் வாழும் இடமாய் இன்றும் விளங்குகின்றது.சிந்து சமவெளி நாகரீகத்தில் சக்தி வழிபாடுகள் சிவ வழிபாடுகள் இருந்ததாக செய்திகள் ஒளி கீற்றுக்களாக தென்படுகின்றன.

பிற்காலச் சோழக்காலத்தில் சிவாலயங்களில் முக்கால வழிபாடு தேவராட்டியர் நடனம் கலை, கூத்து முதலியவையும் இடம்பெற்றிருந்தமை காணக்கிடக்கின்றன. சிறப்பாக இராஜராஜசோழன் காலத்தில் தஞ்சை பெரிய ஆழுடையார் கோயிலைக் குறிப்பிடலாம்.

மேலும் வைணவத்தை ஆழ்வார்கள் வளர்த்தார்கள் என்ற கூற்று எப்படி மெய்யோ அப்படியே சைவத்தை நாயன்மார்கள் வளர்த்தார்கள். ஆயிரத்தெட்டு சிவாலயங்கள் ஆகம விதிப்படி பூசைகள் நிகழும் இடங்களாய் மண்ணுலகில் திகழ்கின்றன. சைவம் வளர்ந்ததோடு மட்டுமல்லாமல் தமிழும் கூடவே வளர்ந்திட நாயன்மார்கள் ஆற்றிய தொண்டுகள் இன்று பன்னிரு திருமுறைகளாக நம்முன் சைவசமய திரட்டுக்களாக போற்றப்படுகின்றன.

சேக்கிழார் தொகுத்திட்ட பெரியபுராணம் நாயன்மார்கள் திருமுறைக்கும் நாயகமாகத் திகழ்கின்றது. வேறுபாடு இன்றி வணங்கியோர் அனைவருக்கும் வரம் தரும் வள்ளல் பரம்சோதி சிவபெருமான் என்பது, உள்ளங்கை நெல்லிக்கனியாய் விளங்குகின்றது.

திருவிளையாடல் புராணம் சிவபெருமான்

மதுரையை மையமாகக் கொண்டு மலைவளர்த்த காதலி தாடகை ப்பிராட்டியாரை கைத்தலம் பற்றியது . மீனவனாய் வந்து கரம் பற்றியது. வந்திக்கு கூலியாளாய் வந்து பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படிபட்டது முதலிய நிகழ்ச்சிகளை தொகுத்களிக்கும் ஒரு நூல்.

சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்தார் என்பதை உணர்த்தவே இன்றும் மதுரை வீதிகளில் ஒன்றுக்கு "பிட்டுத்தோப்பு" என்றும் இன்றும் பெயர் வழங்கி வரு கின்றதை மதுரை சென்றவர்கள் அறிவர் என்பது திண்ணம்.

மேலும் சிவபெருமானே தன்னையே எண்ணி தினம் வணங்கி வந்த பொன்னிக்கு உதவ சித்தராய் வந்துதவிய வரலாறும் அறியத்தக்கது.

சோழமண்டலத்தில் காவிரிக் கரையில் குடிகொண்டு எழுந்திட்ட சிவாலயங்கள் ஏராளம்.

காலைக் கடம்பர், மதியம் சொக்கநாதர், அந்தி திருஈங்கோய் மலைநாதர் என்று வழக்கில் மூன்று திருத்தலங்கள் எழு ந்துள்ளன.

திருவரங்கத்திற்கு அருகில் அதற்கு முன்பதாக திருவானைக்காவல் நீர்காத்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் யானையும் சிலந்தியும் சிவனை வழிபட்டு சித்திபெற்ற திருத்தலம் அத்தலத்தின் வரலாறு கூறும் பஞ்ச பூதங்கள் இடம்பெற்றுள்ள திருத்தலங்களில் நீர்த்தத்துவமாக மிளிர் வது திருவானைக்கா.

காற்றின் தத்துவமாய் வழிபடுவது திரு க்காளத்தி . இத்தலச் சிறப்பினை நேரில் சென்று காணுதலே சிறப்பு.

அடுத்து தீயின் கூறாய் காணப்படுவது திருவண்ணாமலை. நினைக்க முந்தி திண்ணாமலை என்ற திருவாக்கை இத்தலச்சிறப்பை உணர்த்த போதுமா னதாகும்.

ஆகாய தத்துவம் சிற்றம்பலம் எனப்படும் சிதம்பரம் . ஆடியபாதமாய் ஆண்டவன் இருக்கிறார்.

தியாகேசுவாராய் ஆரூர்கொண்ட திருத்தலம் பற்றி கூறவேண்டுமானால் மாணிக்கவாசகர் நினைவே முந்திவரும்

# பஞ்சபூதங்கள்

நம் உடல் பஞ்சபூதங்களின் தத்துவமே. நம்முடலே ஆலயம். உள்ளமே பெருங்கோயில்.

சித்தர்கள் , ஞானிகள், தவசிகள் இருடிகள் முனிவர்கள் முதலியோர் பஞ்சபூதங்கள் நம்முடலோடு கூடியிருக்கும் குடி மிருக்கும் தன்மைபற்றி விளக்கியும் தெளிவாக்கியும் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று கூறியுள்ளார்கள்.

அவர்கள் செய்து வரும் வழிபாடுகள் பாடிய ஞானக்கோவைகள் சிவவழிபாடாய் வாழ்கின்றன.

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிட தீவினை மாளும்
சிவ சிவ என்றிட தேவருமாவர்
சிவ சிவ என்றிட சிவகதி தானே

என்னும் பாடலில் சிவவழிபாடு ஒன்றே சிவகதி தரும் என்பது பரம்பொருளோடு கலந்து நின்று துணை செய்யும் என்பதும் அறியத்தக்கது.

இனி சமயக்குரவர் நால்வருள் பூம் பாவையை பெண்ணுருக்கொண்டு உயிர் ப்பித்த ஞானசம்பந்தர் பாடிய தேவாரம் சிவவழிபாடு.

கோளறுபதிகம் சிவவழிபாடுடையவரை ஒன்றும் செய்யாது நன்மையே செய்யும் என்று பாடியது சிவவழிபாட்டின் ஒரு பகுதியே

ஆண்பனையை பெண்பனையாக்கிய வரலாறு

திருமறைக்காட்டில் திருமறைக்கதவுகள் திறக்கும்படியும் மூடிடும்படியும் பாடியவை சிவவழிபாட்டின் விளையேயன்றி வேறொன்றுமில்லை.

பெற்ற தாய் காவிரிக்கரையின் எதிர்க்க ரையில் இருக்க மகப்பேறு பார்க்க சிராப்பள்ளி மேவிய சிவனே தாயுமானவராய் வந்து மகப்பேறுபார்க்க வைத்தது சிவ வழிபாடு.

சிவவழிபாட்டில் ஈடுபாடு கொண்டு அருட்பெருஞ்சோதியில் கலந்தவர்கள் பத்திரகிரியார், பட்டினத்தார், மாணி க்கவாசகர்,அருட்பெருஞ்சோதி கடலூர் பெருவழி பெருந்தகை இராமலிங்க வள்ளள் முதலிய பலருமாவர்.

தொல்லையிரும் பிறவிச் சூழும் தளை நீக்கிடும் திருவாசகம் என்னும் தேன்.

பன்னிருதிருமுறைகளில் சிவபராணம் உள்ளிப்படு திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் அருளிய திருமறை தமிழ்வேதம்.

"சிவருடைபோற்றி திருவகவல்
தென்னாடுடை சிவனே போற்றி
கிறவே போற்றி சிவமே போற்றி
தோணிமுத்து சுடரே போற்றி
நீலொளியாகிய நிருத்தி போற்றி
பராசக்தி பாண்டியற் கருணை போற்றி
பரம்பரஞ்சோதிப் பரனே போற்றி எனப்

பலவாறாய் சிவவழிபாடு செய்யப்படுகின்றது.

இனி இவருடைய சிவபுராணம் ஒன்றே திருமந்திரங்களில் சிறப்புடைய ஒன்று என்று சத்திப்பூசை செய்யும் சித்தரும் சிவப்பிரியருமாகிய சித்தர் கருவூரர் சிறப்புறக் கூறுகின்றார்.

சித்தர் சிவவாக்கியரும் சிவவழிபாடு பற்றிய அதன் உயர்வு பற்றி தன்பாடல்களில் கூறிச் செல்கின்றார்.

பதினென் சித்தர்கள் சிவபெருமானையே முழுமுதற்கடவுளாய்க் கொண்டு சிவவழிபாட்டினை அமுதத்தமிழ் மொழியில் அருட்சனை செய்கின்றார்கள்.

**முடிவுரை–** இதுகாறும் கூறியவற்றில் சைவமும் தமிழும் ஒன்றை விட்டு ஒன்று பிரியமுடியாதவாறு இருப்பது விளங்கு கின்றது.

அருட்பெரும்சோதி தனிப்பெருங்கருணை தனிப்பெருங் கருணை அருட் பெருஞ்சோதியாய் திகழும் சிவவழிபாடு தமிழோடு தழைத்துச் செழித்து வளரும் ஒன்று என்பதை , மேலே கண்ட பல்வேறு காரணங்களால் நாம் அறிந்து சிறப்புறவேண்டியதாகும்.

**சிவ தொண்டன் நிலையம்**

பிரதி ஞாயிறுதோறும் தவத்திரு யோகர் சுவாமிகளின் தொண்டர்களால் கீழ்வரும் முகவரியில் பஜனை நடாத்தப்ப டுகிறது.பக்தர்களைக் கலந்து கொள்ளுமாறு அன்போடு வேண்டு கின்றோம்.

**Flat B,256 High Street North**
**Manor Park E12**
**Tel: 081 552 6381**

# சைவநெறி விளக்கம்

வினாத் தொடுப்பவர் : இ.சி.தில்லைநாதமூர்த்தி
விடை தருபவர் : தி. சா. சண்முகம்
(சென்னை ஸ்ரீ காளிகாம்பாள்)

## வினா:

வருவாய் கூடிய கோவில்களில் அருட்சனை அடிக்கடி மூலக்கிரக சந்நிதானங்களில் நடைபெறுவதில்லை. மின்சார விளக்குகளின் மத்தியில் குருக்களுக்கு கோயில் சுற்றுப்பிரகாரத்தில் இடம் வகுத்து அந்த இடங்களிலேயே மூலக்கிரகப்பக்கமாய் அருட்சனையை நடத்தும்படி விட்டிருக்கின்றார்கள். இதன் அடிப்படையை விளக்கவும். உதாரணம் திருவாரூர் கிருஷ்ணன் கோயில், திருப்பதி.

## விடை

சில கோவில்களில் ஜனநெருக்கடி காரணமாக மூலவருக்குப் பதில் உற்சவ மூர்த்திக்கு அர்ச்சனை செய்யப்படுகின்றது. இதில் தவறு ஏதும் இல்லை. உற்சவர் என்பது மூலவரின் சக்தியை நமக்கு அளிப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. எப்படி மின்சாரமானது எங்கு இருந்தாலும் ஒரு செப்புக்கம்பியின் மூலம் அனைத்து இடங்களிலும் செலுத்தப்படுகின்றதோ அதுபோல உற்சவரும் வீதிஉலா செல்லும்போது மூலவரின் சக்தியை அனைத்து மக்களுக்கும் அளிப்பதாக உலோகத்தால் செய்யப்பட்டிருக்கின்றது. ஆதலால் கூட்ட நெருக்கடியை சமாளிப்பதற்காக உற்சவர் சந்நிதியில் செய்யும் அர்ச்சனையினால் தவறேதும் இல்லை. எந்த மனிதனுக்கும் மந்திரிபதவி தந்துவிடலாம். அந்த பதவியின் மூலம் அவன் சில காரியங்களை செய்யக்கூடும். ஆனால் அவனிடமே திறமையும் இருக்குமானால் அவன் மேலும் நன்றாக செயல்படமுடியும். அதுபோல கடவுளின் சக்தியை எந்த ஒரு பொருளின் மீதும் செலுத்திவிடலாம். ஆனால் அந்த பொருளுக்கும் திறமை இருக்குமானால் நமக்கு கிடைக்கக்கூடிய பலன்கள் அதிகம். ஆதலால் கல் மற்றும் உலோகங்களினால் செய்வதன் மூலம் மந்திர சக்தியினால் மட்டுமல்லாமல் அந்த பொருளின் தன்மையினாலும் கூட நமக்கு கூடின பயன்கள் கிடைக்கின்றது.

## கேள்வி

கோவில் விக்கிரகங்களுக்கு முன் நரன் வதை அதாவது செதில் பாய்ச்சுதல் அல்லது காதுகுத்துதல், நாவில் ஊசி செலுத்துதல் போன்றவை நடைபெறுவது ஏற்கப்படுமா?

## விடை

கோவில்களில் காது குத்துதல், நாக்கில் வேல் குத்திக் கொள்ளுதல்,என்பவை பிரார்த்தனையாக செய்யப்படுகின்றது. கடவுள் உடலை வருத்திக்கொண்டு நாம் பக்தி செய்தால் தான் கடவுள் ஏற்றுக்கொள்ளுவாரா? என்ற கேள்வி நமக்கு எழலாம். ஆனால் முதலில் நாம் மனதில் ஒன்று தெரிந்து கொள்ள வேண்டும். நாம் வழிபடுவதால் தான் கடவுளுக்கு சக்தி கூடவோ குறையவோ போவதில்லை. பூசைகள் எல்லாம் நமக்காகத்தான். நமது நன்றியை கடவுளிடம் தெரிவிப்பதற்காகவே பிரார்த்தனைகள்.

இப்படி இருக்கும் போது ஒரு பக்தனானவன் தன்னுடைய நன்றிக்கடனை செலுத்துவதற்காக தன்னால் இயன்ற முறைகளை ஒழுகுகின்றான். இதில் சில முறைகளே அங்கப்பிரதட்சினம், தீ மிதித்தல், வேல்குத்திக்கொள்ளுதல் ஆகியவை. ஆனால் ஒன்று மட்டும் சத்தியம். எவன் ஒருவன் பக்தியுடனும் கடவுளிடம் முழு நம்பிக்கையுடனும் மேற்கண்டவற்றை கடைப்பிடிக்கின்றானோ அவனை எந்த வலியும் பாதிப்பதில்லை.

## கேள்வி

பலி ஈட்டிற்கு குருக்கள் தலைமை வகுக்கலாமா?

## விடை

தனக்கு ஏதாவது கஷ்டங்கள் ஏற்படும் போது மனிதனானவன் தன் கஷ்டம் முடிவடைய கடவுளிடம் பிரார்த்திக்கின்றான். சில சமயங்களில் அவன் தனது கர்மவினையால் அனுபவித்துக்கொண்டிருக்கும் துன்பங்களை தனக்கு பதில் வேறு ஏதாவது ஒரு ஜீவாத்மா அதை ஏற்கச்செய்து அவன் துன்பத்திலிருந்து விடுபடுகின்றான். இந்த காரணத்திற்காகத் தான் பலியிடுதல் என்பது தொடங்கப்பட்டிருக்க வேண்டும். பொதுவாக ஆகமப்பிரகாரம் பூசைகள் நடைபெறும் கோவில்களில் உயிர்ப்பலி என்பது நடைபெறுவதில்லை. ஆனால் கிராம வழிபாட்டில் கிராம தேவதைகளுக்கு பலி இடுதல் என்பது நடைமுறையில் உள்ளது. அந்த கோவில்களில் பூசை செய்யும் பூசாரியே அதை நடத்துகிறான் . ஆனால் ஆகமப்பிரகாரமான பூசை செய்யும் கோவில்களில் உயிர்ப்பலி நடைபெறுவதில்லை.

## கேள்வி

கருங்கல்லில் செதுக்கப்பட்ட விக்கிரகங்களை மட்டும் கோவில்களில் மூலத்தாபனம் செய்யப்பட்டிருக்கின்றன. செங்கல் கிடைப்பதில்லையா? திருவண்ணாமலைப் பாறையில் சிலைகள் செதுக்கி எடுப்பது குற்றமா? கருங்கல் விக்கிரகம் எண்ணெய் பூசுவதற்கு உகந்ததாயிருப்பது காரணமாகலாமா?

## விடை

மோதிரம் என்பது விரலுக்குப் போட்டுக்கொள்ளும் வளையம். அது தங்கம் அல்லது வெள்ளி அல்லது வேறு எந்த மிருதுவான உலோகத்தால் தான் செய்யவேண்டுமா என்ன? ஏன் கல்லினாலோ அல்லது இரும்பினாலோ செய்து

கொள்ளக்கூடாது? ஆடை என்பது நமது உடலை மறைப்பதற்குத்தானே, ஏன் கல்லினாலோ இரும்பினாலோ ஒரு கவசத்தை செய்துகொண்டு உடலை மறைத்துக் கொள்ளக்கூடாதா? ஏன் இரும்பு கிடைக்கவில்லையா என்ன? தங்களின் கேள்வியும் இப்படித்தான் உள்ளது. பிருதிவி அதாவது மண்ணே சுட்டபிறகு செங்கல்லாக கிடைக்கிறது. ஆனால் கல் ஆனது மணலே. பலகாலம் கழித்து ஜலத்தின் சம்பந்தத்தினாலும் பல இயற்கை காரணத்தினாலும் அதுவே கல்லாக மாற்றம் பெறுகிறது. ஆதலால் கல் என்பது அனுபவம் வாய்ந்த மணல். செங்கல் என்பது அனுபவம் இல்லாத மணல். ஆதலால் கல்லே சிலை செய்ய பயன்படுத்தப்படுகின்றது. இதுமட்டுமன்றி கல்லிற்குப் மந்திரத்தை அகர்ஷிக்கக்கூடிய சக்தியும் உள்ளது. எப்படி தொலைபேசியின் மூலம் தொலைவில் உள்ளவர்களிடம் பேசமுடிகின்றதோ அதுபோல கோவிலில் உள்ள கற்சிலையின் மூலம் எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த ஈஸ்வரனிடமும் தொடர்பு கொள்ளமுடியும்.

எப்படி தொலைபேசியின் கருவிக்கு உட்தன்மை முக்கியமோ அதுபோல் அந்த கற்சிலையும் மந்திரசக்தியினால் தான் வலுப்பெறுகின்றது.

தாங்கள் சொல்லியது போல அபிஷேக காரியங்களுக்கும் கற்சிலையானது மிகவும் உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது. அபிஷேகம் அந்த மூர்த்திக்கு செய்யும்போது ஒருவிதமான மின்சார அலை அதனிடமிருந்து தோன்றி பக்தர்களிடம் அருளைத் தருகின்றது. திருவண்ணாமலையில் எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானே ஜயோதிஸ்வரூபத்தில் மலையினுள் இருப்பதாக ஐதீகம் . ஆதலால் திருவண்ணாமலையில் பாறைகள் உடைக்கப்படுவதில்லை. அங்கு கிரிபிரதட்சினம் அதாவது மலையைச் சுற்றிவருதல் விசேஷம்.


# ஜெர்மனிலிருந்தொரு ஆத்மீகக்காலாண்டிதழ்




அழகான அமைப்புடன் கருத்துமிக்க ஆக்கங்களைத் தாங்கியவண்ணம் வெளிவந்துள்ளது ஞானதீபம்.
சமயச் செய்திகள், விரதங்கள் பற்றிய விளக்கங்கள் துணிச்சல் மிகுந்த விமர்சனப்பாங்கான அபிப்பிராயங்கள் மனதைக் கவர்கின்றன.
இது ஒரு உதய நிலா வெளியீடு. இதன் ஆசிரியர் ஜெயா.
இது மேலும் வளர கலசமும் கைகொடுக்கும்.
GNNATHEEPAM , Uthayanilla Publications
P.O Box 100704, 51607 Gummersbach, Germany


## குமரன் கும்மி

கும்மியடி பெண்ணே கும்மியடி—லண்டன்
குமரன் கோவிலிற் கும்மியடி!
நம்மை வருத்திடுந் தொல்லைகள் —மறையும்
நாட்டியப் பெண்ணே நீ கும்மியடி!—கு

ஆடியில் முருகன் வேலாடும் —இந்த
ஆங்கில மண்ணிலே தேரோடும்
கூடி வலம்வந்து மன்றாடும்—அன்பர்
கூட்டம் மகிழ்ந்திங்கு கொண்டாடும்! —கு

மன்னுங் கிழக்கு நகரினிலே—மயில்
வாகனன் மங்களக் காட்சியிலே
தென்னகத் தாறு திருப் படையும் —எங்கள்
திருக் கதிரையும் தோணுதடி! —கு

அண்ணன் விநாயகர் விம்பிள்டனிற்—புகழ்
ஆலயங் கொண்டு விளங்குவதால்
வண்ணத் தமிழ்வடி வேலவன்—கருணை
வாழ்த்திடும் எங்களைக் கும்மியடி!

குன்றி லுயர்மணி வாசலிலே—தலம்
கொண்டவ னெங்கள் குமரேசன்
முன்றிலில் வந்து வளைந்திடடி—நின்று
மோகனக் கும்மிகள் கொட்டிடடி! —கு

தந்தை சிவன்திருக் காட்சிகளும் —இங்கே
தந்து விளங்குந் தலம் பலவாம்!
சிந்தை மகிழுங் குழந்தையிவன்—இன்பச்
செல்வத்திற் கென்னே குறைக ளுண்டாம்! —கு

அன்னை பராசக்தி ஆனந்தி—சங்கரி
ஆலயம் எங்கும் அமைந்ததடி!
தன்னை விரும்பிடும் தாயவள்—ஆசியில்
சண்முகன் ஆள்வது திண்ணமடி! —கு

பாரத நாயகன் பார்த்திபன்— சாரதி
பாற்கடல் வாசன் திருப் பதியான்
நேரதி லெங்கும் நிறைந்தனன்—சீமையில்
நேசன் மருமகன் ஆசையினால்! —கு

ஓதிடும் உபன்னி யாசங்கள்—பஜனை
ஒலிக்கும் மண்டபக் கோவிலடி!
வீதியில் ஆண்டுகள் தோறுந்—திருவிழா
விளங்கும் பவனிக் கோட்டமடி! —கு

—கவிஞர் ஞானமணியம்—

# 21ம் நூற்றாண்டில் சைவமும் தமிழும்

க. சண்முகலிங்கம்

சைவம் என்னும் சமயம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டது. சைவம் இந்து மதத்தின் பல்வேறு பிரிவுகளில் ஒன்று. இச் சைவமும் பல உட்பிரிவுகளை உடையது. சித்தாந்த நூல்களில் பன்னிரண்டு உட்பிரிவுகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. பாசுபதம், கபாலம், பைரவம், போன்ற உட்பிரிவுகள் பற்றி தமிழக வரலாறு பற்றிக் கற்றோர் அறிவர். சைவத்தின் வரலாற்றை நான் இங்கே கூறவேண்டியதில்லை. இன்று இந்தியாவில் வழங்கும் சைவசமயப்பிரிவுகளுள் தமிழகத்தின் சித்தாந்த சைவம், கர்நாடக மாநிலத்தில் வீர சைவம் , காஷ்மீரி இந்துக்களின் காஷ்மீரி சைவம், என்று மூன்றும் முக்கியமானவை. சைவம் என்ற சொல் இம்மூன்று பிரிவினரையும் உள்ளடக்கின்றது. சைவமும் தமிழும் என்ற தொடர் இம்மூன்று பிரிவுகளில் ஒன்றாகிய சித்தாந்த சைவத்தை மட்டுமே சுட்டி நிற்கின்றது. இச்சித்தாந்த சைவம் தமிழகத்திற்கே உரியது. அதன் முக்கிய தத்துவ நூல்கள் யாவும் தமிழிலேயே உள்ளன. சைவக் கோயிற் கிரிகைகள் ஆதாரமாக அமைந்துள்ள சைவஆகமங்கள் வடமொழியில் உள்ளனவேனும் ஆகமக் கருத்துக்கள் தமிழகத்தின் சைவக்கிரிகை நெறியோடு தொடர்புபட்டனவே என்பது அறிஞர் கருத்து. தமிழகத்திலும் , இலங்கையிலும் பரவிய சித்தாந்த சைவம் இவ்விரு நாடுகளிலும் வாழ்ந்த தமிழர்கள் பிறநாடுகளிற்கும் குடி புகுந்த பின்னர் உலகம் எங்கும் பரவியது. மிக அண்மைக்காலத்தில் இத் தமிழர்களின் சிதறிய பரவல் காரணமாக உலகச் சைவர் என்று கூறக்கூடிய நிலையும் உள்ளது. சைவர்களில் ஒரு பிரிவினரும் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுடைய சமயப்பண்பாட்டின் எதிர்காலம் பற்றிய பிரச்சனைகளையே குறித்து நிற்கின்றது என்பது வெளிப்படை.

உலகெங்கும் சிதறி வாழும் தமிழரிடை சைவமும் தமிழும் அவை சார்ந்த பண்பாடும் அருகி வழக்கொழிந்து போய்விடும் ஆபத்து உண்டா என்பது சிந்தனைக்குரியன. சைவசமயப் பண்பாட்டை பேணுவதில் மொழியின் பங்கு என்ன ? சமயத்திற்கும் மொழிக்கும் இடையிலான உறவு என்ன? தமிழ்ப்பேசும் கிறிஸ்தவரும் இஸ்லாமியரும் உள்ளனரே அச்சூழ்நிலையில் சைவமும் தமிழும் என்று பேசுவது ஏன்?சமரச சன்மார்க்க நெறிக்கு முரணான குறுகிய மனப்பான்மையின் வெளிப்பாடு இது எனக் கூறலாமா?என்பன போன்ற கேள்விக்கு நாம் விடைமிறுத்தல் வேண்டும்.

சமுதாயமாற்றம் நிகழும் போது பல நிறுவனங்கள் விரைவாக மாற்றத்திற்கு உட்படுகின்றன. ஆனால் மொழி சமயம் என்னும் இரு நிறுவனங்களும் சடுதியாக மாற்றங்களை ஏற்படுத்துவதில்லை. மனித வாழவில் இவை இரண்டும் இரு கண்கள் போன்றவை. இதனால் அனைத்துச் சமுதாயங்களிடையும் மொழியும் சமயமும் நிலைபேறுடைய அம்சங்களாக விளங்குகின்றன. ஒரு குழந்தை பிறந்து வளரும் போது அது சமூகத்துடன் கொள்ளும் பிணைப்புச் செயல்முறை சமூகமயமாக்கம் (Socialisation) என்று அழைக்கப்படும். சமூக மயமாக்கம் முதனிலைச் சமூகமயமாக்கல்(Secondary Socialisation) என்று பிரித்துக் கூறப்படும். குடும்பச் சூழ்நிலையில் முதல் நிலைச் சமூக மயமாக்கம், பாடசாலை,தோழர் குழு அயல்சமூகம் என்ற விரிந்த தளத்தில் நிகழ்வது இரண்டாம் நிலைச்சமூகமயமாக்கல்.

தமிழர்களின் புலம்பெயர்வுச் சூழலில் தமிழ்க்குழந்தை ஒன்று சமூகமயமாக்கத்திற்கு உட்படும் போது தமிழ்மொழி வகிக்கும் பங்கு என்ன? சைவம் வகிக்கும் பங்கு என்ன? லண்டனிலும் பரிசிலும் பிராங்பேட்டிலும் வளரும் தமிழ்க் குழந்தையின் சமூகமயாக்கலில் சைவமும் தமிழும் பொறும் இடம் யாது என்பதே? மையப்பிரச்சனை.

புலம் பெயர்ந்த தமிழர்களிடை தமிழ்மொழி வழக்கொழிந்து போகாது நிலைப்பதற்கான சாத்தியம் உண்டா என்பது ஐயத்திற்குரியது. அடுத்த சந்ததியே தமிழ் மொழியைப் பேசத்தெரியாததாய் ஆகி விடலாம். ஆனால் சைவம் அல்லது சமயத்தின் மீதான பிடிப்பு விரைவில் அழிந்துவிடும் என்று கூறமுடியாது. புலம்பெயர்ந்தோர் செயல்முறையை ஒன்றிணைவு(assimilation) என்பர். ஆனால் பூரண ஒன்றிணைவுக்கு முக்கிய தடையாக தோலின் நிறம் இருக்கும். இதனால் பணஷ்பாட்டுக் குழுமம் என்ற முறையில் (CulturalGroup) தமிழரும் , சைவத் தமிழரும் நீண்டகாலத்திற்குத் தனித்தன்மையுடைய குழுவாக இருப்பர். தோலின் நிறம் பற்றிய இந்த உணர்வு இக்குழுவினரை பிறரில் இருந்து பிரித்துக் காட்டவும் , தமது வேர்களைத் தீவிரத்துடன் தேடவும் இவை தூண்டும். சைவத்தமிழர்களின் வேர்கள் யாவை என்று தேடல் 21ஆம் நூற்றாண்டுக்கு அப்பாலும் தொடரும் என்றே நான் கருதுகின்றேன்.

தமிழ்மொழி பற்றிய பிரச்சனையை முதலில் நோக்குவோம். ஒரு மொழி நிலைத்து வாழ்வதற்கு வேண்டிய அடிப்படையான சமூகநிலைமைகள் சில உள்ளன. இவற்றை ஆறாகப் பகுத்துக் கூறலாம். இந்த ஆறு முன்தேவைகளில் ஒன்றோ பலவோ குறைவுபடுமிடத்து பண்பாடும் மொழியும் பாதிப்பறும். இந்த நிலைமைகளாவன–

கல்வி–குழந்தை எந்த மொழியில்

கற்கின்றது. தொழிற்சந்தையில் புகும்போது எந்த மொழியின் ஆட்சித்திறனை நம்பித் தொழிற் சந்தையை ஒரு இளைஞன் எதிர்கொள்கிறான் என்பன மிக முக்கியமான விடயங்கள். புகலிடத் தமிழரிடை தமிழ்மொழி நிலைப்பதற்கான முதல் நிபந்தனையான கல்வியில் அதன் பங்கு முற்றாக இல்லை என்றே கருதலாம்.

சிவில் நிர்வாகம் – நாட்டின் நிர்வாகத்தில் தாய்மொழியாம் தமிழிற்குரிய இடம் யாது? அரச நிர்வாகத்திற்கும் மக்களிற்கு மிடையிலான ஊடகமாக தமிழ் மொழி உள்ளதா? இவ் விடயத்திலும் புலம் பெயர்ந்தோர் வாழ்வின் தமிழின் பங்கு சிறிதும் இல்லை.

நீதி நிர்வாகம்–நீதிமன்றுகளில் விசாரிக் கப்படும் பொழுது எந்தமொழி பயன்படு கின்றது.

சமூக பொருளியல் துறை– தொழில்துறை, வங்கி,வர்த்தக உறவுகள் எம்மொழியில் நிகழ்கின்றன. மேலே குறிப்பிட்ட நான்கு அம்சங்களிலும் தமிழ் மொழிக்கு எந்தவித பங்கும் புகலிடத்தில் கிடையாது என்பது வெளிப்படை. தாய்நாடுகள் என்று கூறக்கூடிய இந்தியா, இலங்கை,மலேசியா,சிங்கப்பூர்,ஆகிய நாடுகளில் கூட இந்த அடிப்படை நிபந்தனைகள் நாட்டுக்கு நாடு அளவிலும் தன்மையிலும் வேறுபடுகின்றன.

வேறு குறிப்பிட்ட நான்கைவிட வேறு இருநிபந்தனைகள் உள்ளன. அந்த இரு நிபந்தனைகளை அடுத்து நோக்குவோம். அவற்றுள் ஒன்று கலாச்சார உற்பத்தி (Cultural production) அரங்கு, சினிமா,இசை, விஞ்ஞானம் , கலைகள், ஆகியவற்றின் உற்பத்திக்கும் நுகர்விற்கும் தமிழ்மொழி ஒரு ஊடகமாக நிலைத்து நிற்குமா என்பதையே கலாசார உற்பத்தி குறித்து நிற்கின்றது.

ஆறாவதாக அமையும் விடயம் இன்று நான் பேச எடுத்துக்கொண்ட பொருளுடன் தொடர்புடைய முக்கிய விடயமாகும். ஒரு சமூகத்தின் சமயச் சிந்தனை இளம் சந்ததிக்குக் கடத்தப்படுவதற்குதிய முக்கிய ஊடகமாக அமையும். மொழி எது என்பதே ஆறாவதாகக் குறிப்பிடக்ககூடிய விடயமாகும். இசுலாம் மதத்தவர்கள் பல்வேறு மொழிகளைப் பேசுவோராக இருப்பினும் அரபுமொழிக்கும் அவர்களது சமயத்திற்கும் உள்ள உறவு அவர்களைப் பிணைக்கும் ஊடகமாக இருப்பது போல் உலகச்சைவர்களைப் பிணைக்கும் ஊடகமாக தமிழ்மொழி விளங்கும். சைவப்பண்பாட்டை பேணமுடியும். ஒவ்வொரு தாயும் தன் பிள்ளைக்கு "தோடுடைய செவியன்" "மந்திரமாவது நீறு" போன்ற பதிகங்களைச் சொல்லிக் கொடுக்கும் தேவையை உணருவாள். உலகச் சைவப் பேரவை தொடக்கியுள்ள தமிழில் அருச்சனை என்னும் இயக்கத்தின் முக்கியத்துவத்தையும் தேவையையும் புலம்பெயர்ந்தோர்கள் வாழ்வின் சூழலில் வைத்துப் புரிந்துகொள்ளுதலும் அவசியமாகும்.

21ஆம் நூற்றாண்டில் சைவமும் தமிழும் எண்ணப் பொருளில் நிலவிய கருத்துக்களை உங்கள் முன் வைத்தேன். 21ஆம் நூற்றாண்டில் தமிழ் நிலை பெறுவதற்கான நிபந்தனைகள் முன் தேவைகள் பற்றிக் குறிப்பிட்டேன். இம்முன் தேவைகளில் ஒன்றாக சமயப்பண்பாட்டின் ஊடகமாக விளங்கும் மொழியின் முதன்மை பற்றியும் குறிப்பிட்டேன்.

சைவநெறியின் ஊற்றுக்கண்ணாகத் திகழ்வது தமிழ்மொழி, சைவத்திருமுறைகளும் சித்தாந்த சாத்திர நூல்களும் ஆதாரநூல்களாகும். சைவம் வளரத் தமிழ் கல்வி அவசியம். இது போலவே தமிழின் உயர்ச்சி சைவத்தின் உயர்ச்சிக்கும் காலாகும்.

"சைவமும் தமிழும் என்ற தொடர் குறுகிய குழுவாதம் என்ற வகையில் பொருள் கொள்ளக்கூடாது

"தென்னாடு உடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!"

என்ற அடிகளில் உலகத்தவர் யாவர்க்கும் இறைவனாக உள்ளவன் தென்னாட்டிலே குடிகொண்டுள்ளான் என்று கூறப்பட்டி ருத்தல் போல் உலகத் தமிழர்களின் மொழியாகிய எமது அருந்தமிழ்மொழி சைவத்தமிழரின் மொழியாய் சிறப்புற் றுள்ளது என்றும் பெருமை கொள்ளலாம்.

## Do Other Gods Exist Apart from Siva ?

God siva is the Supreme Being, the Lord of lords. He alone prevails everywhere.Not an atom moves except by His will.Ganesa, Karttikeya, Indra, Agni and all the 330 million Gods of Hinduism are beings just as we are,created by Lord Siva and destined ti enjoy union with Him.The Gods are souls of high evolution. They are very old and mature souls of high evolution. They are very old and mature souls, mighty beings who live in the Sivaloka. Though neither male nor male.they may be popularly depicted as Gods and Goddesses. The devas are benevolent beings of light abiding in the higher Antarloka. They help guide evolution from their world between births. The asuras are demonic beings of darkness, immature souls who temporarily inhabit Naraka, the lower Antarloka. Devas and Asuras are usually subject to rebirth. We worship Siva and the Gods. We neither worships the devas nor invoke the asuras .Karttikeya, Ganesa and all the Gods, devas and asuras worship Siva. The Vedas explain, " From Him, also are born the Gods, in manifold ways, the celestrials, men , cattle, birds the in- birth and the out - breath, rice and barely, austerity, faith, truth, charity and the law". Aum Namah Sivaya.

**SHIPPING - AIR FREIGHT - TRAVEL**

UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC.

*TO* **COLOMBO** *AND OTHER WORLD DESTINATIONS*
*MAINAGENT FOR AIRLANKA*
PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE
ALL YOUR GOODS GO TO OUR BONDED WAREHOUSE IN COLOMBO
**WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME**
**ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES**
உங்கள் விமானப் பயண ஒழுங்குகளுக்கும் உங்களின் பொருட்களை
ஸ்ரீ லங்காவிற்கு அனுப்புவதற்கும் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவையினைப் பெறுதற்கும்
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்

**GLEN CARRIERS LIMITED**

14, Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ
Telephone 081 740 8379 / 081 749 0595
Fax : 081 740 4229 Telax : 929657 Glenca G
**BONDED WAREHOUSE**
LAKSIRISEVA, 253/3 Avissawella Rd, Colombo 14 Tel : 575576

# HINDU BELIEFS

1.I Believe in a one, all- pervasive Supreme Being who is both immanent and transcendent, both Creator and Unmanifest Reality.

2.I believe that the universe undergoes endless cycles of creation, preservation and dissolution.

3.I believe that all souls are evolving toward union with God and will ultimately find moksha:spirituals knowledge and liberation from the cycle of rebirth. Not a single soul will be eternally deprived of this destiny.

4.I believe in karma, the law of cause and effect by which each individual creates his own destiny by his thoughts ,words and deeds.

5.I believe that the soul reincarnates, evolving through many births until all karmas have been resolved.

6.I believe that all life is sacred, to be loved and revered, and therefore practice ahimsa, or non-violence.

# BUDDHIST BELIEFS

1.I believe that the Supreme is completely transcendent and can be described as Sunya, a void or state of nonbeing.

2.I believe in the Four Noble Truths:(1)that suffering exists (2) that desire is the cause of suffering (3) that suffering may be ended by the annihilation of desire (4) that to end desire one must follow the Eight-Fold Path.


3.I believe in the Eight-Fold Path of right belief, right aims, right speech, right actions, right occupation , right endeavour, right mindfulness and right meditation.

4.I believe that life's aim is to end suffering through the annihilation of individual existence and absorption into nirvana, the real.

5.I believe in the "Middle Path", living moderately, avoiding extremes of luxury and asceticism.

6.I believe in the sancity of the Buddha and in the sacred scriptures of Buddhism: the Tripitaka and the Mahayana Sutras.

# வாசகர் கடிதங்கள்



அன்பின் ஆசிரியருக்கு,!

தெய்வாதீனமாக கலசம் சஞ்சிகை லண்டன் ஸ்ரீமுருகன் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ் கைக்குக்கிடைக்கப்பெற்றேன். நாட்கள் பல சென்றிருந்தாலும் அதிலுள்ள ஆக்கங்கள் கருத்தார்வம் மிக்கவை. இவ்வருட முதல் மலரும் கிடைக்கப்பெற்றேன். உண்மையில் இக்கடிதம் எழுதுவதன் முக்கிய நோக்கம் என்னவெனில் உங்களது கலசத்தின் முன்னைய மலர்களை வாசித்தறிய ஆவலாயுள்ளேன். தயவு செய்து உங்களால் முடியுமாயின் எனக்கு அனுப்பிவைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இத்துடன் 3 வருடச்சந்தாப்பணமாக ஒன்பது பவுண்கள் காசோலையாக இணைத்துள்ளேன் முன்னைய மலர்களுக்குரிய பணத்தை இப்பணத்திலிருந்து எடுக்கவும்

அ. ஸ்ரீதரன். ஈஸ்ற்காம்

---

ஆசிரியர்

கலசம்

இங்கிலாந்து

ஐயா!

தங்களின் சித்திரைக் காலாண்டிதழின் (அமிர்த கலசம் முழுதும் நுகர்ந்தேன்.வாழைக்கனியும் கூழைக்குரங்கும் , முருகன் தமிழ்க்கடவுள் என்னும் இரு கனிகளும் இன்றும் இனிக்கின்றது. நெஞ்சம் நிறைகின்றது. ஆக்கியோருக்கு நன்றி!

சில கோவில்களில் இசைக்கப்படும் ஒருசில பஜனைப்பாடல்களில் கவலையின்றித் தின்னுவார் கண்ணைமூடித்தூங்குவார் எலியின் மீது ஏறியே இஷ்டம்போல சுற்றுவார். என்ற வரிகள் மனதிற்கு வேதனையளிக்கின்ற நையாண்டிப்பாடல்களாக அமைந்துள்ளது. கேட்கமுடியுதில்லை.அதற்கு வேறு தத்துவங்கள் இருப்பதாக அடியேனின் மனதிற்குப் புலப்படவில்லை. **தம்பியோ பெண்திருடி தாயாருடன் பிறந்தவம்பனோ உன் மாமன் நெய்திருடி** என்று அன்று இரட்டைப்புலவர் பாடினார் . அது இலக்கியத்தின் நகைச்சுவை தான். ஆனால் பக்தி தராது என்பது அடியேன் அபிப்பிராயம்.

இந்த வேதனையால் எழுந்த இருபாடல்களை அனுப்புகிறேன் தகுதி எனிற் தயவு செய்து பிரசுரியுங்கள்.

நன்றி

இங்ஙனம்

வீ. ஆறுமுகம் (தாஸ்)

கிறீன்போட் இலண்டன்

---

அன்புள்ளம் கொண்டு தொண்டு செய்து சைவசமய பெருமையை எங்கும் பரப்பி வரும் கலசமிதழ் தொடர்புடைய அனைவருக்கும் வணக்கம்.

இரண்டு முறைவந்த கலசமிதழ்களும் இனிய பல செய்திகளை தாங்கி வந்தது. இலங்கையில் இருக்கும் நாம் லண்டனில் நடக்கும் சைவசமய விழாக்கள் ஆலய உற்சவங்கள் அனைத்தையும் நேரில் பார்ப்பது போல் கட்டுரைகள் அமைந்துள்ளன. எத்தனையோ பெரியவர்கள் எழுதும் இதழில் சிறியேன் என்னுடைய பங்கையும் சேர்த்ததற்கு நன்றிகள் பல. இம்முறையும் புதிதாக அமைக்கப்பட்ட எமது ஆலய கட்டுரை, படங்கள் இரண்டு என்பன அனுப்புகின்றேன். ஒவ்வொரு கலசமிதழுக்கும் எனது ஏதாவது ஒரு ஆக்கம் வரும் என்பதை அறியத்தருகின்றேன். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இருக்கும் ஆலய விழாக்கள் உற்சவங்கள் என்பவற்றை லண்டன் மக்களும் அறிய ஆவலாக இருப்பார்கள் என நினைக்கின்றேன். அதற்கு பாலமாக கலசமிதழ் நமக்கு கைகொடுக்கின்றது. உங்கள் சேவை தொடர எங்கள் ஆதரவு உண்டு. எங்கு சென்றாலும் எமது சைவசமயம் ஓங்குபுகழ் பெறுக என கூறி அன்பு விடைபெறுகின்றேன்.

இங்ஙனம்

ராம். தேவலோகேஸ்வரசர்மா

(ஸ்ரீதேவி கருமாரி ஸ்ரீஐயப்ப சுவாமி திருக்கோவில் ஆலயகுரு)

கொழும்பு, இலங்கை

ஆசிரியர் அவர்கட்கு!

எல்லாம் வல்ல முருகப்பெருமான் திருவருளாலே தங்களுடைய இந்துசமயத்தொண்டு □□கலசம்□□ இதழ் மூலம் மென்மேலும் சிறப்புற்று ஓங்க உயர்வாசற் குன்று முருகன் திருவடியினை தொழுது எழுதிக்கொண்டது.

சென்ற கிழமை தங்கள் இதழின் நிர்வாக உறுப்பினரான திரு ராம் அவர்கள் இலங்கை அறநிலையத்துறை அமைச்சர் திரு தேவராஜா அவர்களுடன் தரிசனம் செய்ய வந்திருந்தார். திரு ராம் அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க **ஆன்மீகம்** என்ற தலைப்பில் ஒரு சிறிய கட்டுரை எழுதி இணைத்துள்ளோம்.

தாங்கள் பிரசுரிக்கும் ஒவ்வொரு இதழிலும் **ஆன்மீகம்** என்ற தலைப்பில் நல்லதொரு கருத்தை ஆன்மீக நாட்டம் உள்ள ஆன்றோர்களிடம் பெற்று தங்களது இதழை நறுமணமூட்டி பெருமை சேர்க்கலாம் என்பது ஓர் சிறிய அவா.

இங்ஙனம்

கல்யாணசுந்தரக்குருக்கள்

இலண்டன்

---

கலச ஆசிரியர்

பேரன்புடையீர் எமது பணிவான அன்பான வணக்கம். தங்களின் அருமையான மேன்மைகொள் சைவசமயக்கருத்துக்களைப் பொதிந்த கலசம் என்றும் சஞ்சிகை அத்துடன் கட்டுரை எழுதும்படி அன்புப் பணிப்புடைய விண்ணப்பம் அடியேனுக்கு 93 டிசம்பர் கடைசியிற் கிடைத்தது. அடியேன் சபரிமலை போகும் ஆயத்தமாக இருந்தபடியால் சபரி மலை போய் வந்து எழுதலாமென்று நினைத்து வைத்துவிட்டுப்போய்விட்டேன். குற்றாலத்தில் கடும் நோய் வாய்ப்பட்டு அவஸ்தைப்படும் போது கடவுளே! லண்டன் சைவசமயக்கலசத்திற்கு கட்டுரை எழுதி அனுப்பாமல் வந்துவிட்டேனே எழுதும் வாய்ப்புக் கிடைக்குமா என்று ஏங்கினேன். மலை ஏறமுடியாத ஆஸ்மா வருத்தமெனினும் எம்பெருமானின் அருளால் மலையேறி இவ்விடம் வந்து பல நாட்களின் பின்னரே நல்ல சுகம் கிடைத்ததும் இக்கட்டுரை எழுதினோம்.

எமது சைவம் கடல்கடந்து சென்று மக்கட்கு மிகப்பெரிய பாரிய பணியைத் தேன்சொட்டும் செந்தமிழிற் பணிசெய்வது சைவஉலகம் செய்த மாபெரும் தவமேயாகும். இன்று கொழும்பில் பொய்யான நெஞ்சுபிளக்கும் வகையில் கிறிஸ்தவ மதத்தைச் செல்லப்பா என்பவர் பரப்பி வருகின்றார். நான்கு வேத ஆகமங்களை நன்றாக கற்றுப்பயிற்சி பெற்று பல ஆதீனங்கள் ஆச்சிரமங்களில் 22 வருடம் தவவாழ்வு வாழ்ந்தவர் சாது செல்லப்பா என விமர்சன அழைப்பிதழ் அடித்து ஏமாற்றிச் சைவமக்களை அழைத்து கிறிஸ்தவமாக்குமளவு கொழும்பு வாழ் சைவர்கள் கண்மூடி ஏமாந்து வருகின்றனர். இந்த நோக்கில் தங்கள் பணி இமயத்தைவிட உயர்ந்ததாகின்றது.

இங்ஙனம்

சுவாமியம்மா சி. விசாலாட்சி

கொழும்பு, இலங்கை



**SINGAPORE ELECTRONICS**

TELEVISION
VIDEO
CAMERA

சகல விதமான
Electrical and Electronics
சாதனங்களும் திருத்திக்கொடுக்கப்படும்.
மேலும் விபரங்களுக்கு
194, High Street North
East Ham
Tel : 081- 548 0919
081- 552 1114
(Next to East Ham Station)

HI-FI
CAR RADIO
AMPS & AUDIO

# THE LOST HORIZON



It was the seventeenth day of Kurukshetra war. Everything was coming to an end. Evil looks strong and powerful in the beginning. So did the Kauravas- large in number and strong with warfare equipment. The only hope and strength of the Pandavas was Krishna-
But like an over blown ballon the Kauravas were defeated to almost nothing - starting with Bheeshma, uncle Sakuni, Dhronacharya, the great warrior Karna, the whole row of brothers and the army.

Duriyodhna was left alone - one solitary person from that big banyan tree of Kaurava Dynasty But he stood undeterred! In fact he was prepared to face the battle the next day . At this time a secret message came in the form of a letter to him.
It was from his mother Ghandari.
The letter said,

**'My dear son , Meet me tomorrow morning Positively before sunrise. You shall come fully unclothed. This is for your good.'**
**Your loving mother**

Duriyodanan was happy at the outset but later on he was confused about the latter part of the letter.
Although it was his mother who had commanded him to come unclothed his age made him hesitate. It was now he really felt the absence of his uncle Sakuni.
He had nobody to lean it. At this confused state of mind he could think of no one else than Lord Krishna.
He was confident that Krishna would solve his problem.
So he decided to meet the lord in the enemy camp.
Krishna was awake and he welcomed him.
come, my dear nephew! What has brought you to me?- asked Krishna.

Duriyodhna stood speechless at the sight of this benevolence personified! Could this stature have any any enmity towards anyone? Why then do I consider him my opponent? mused the Kaurava King.
Duriyodhna prostrated at the Lotus feet and said ' Parandama! The knower of the known,enlighten me! please save me from this embarrassment'
So saying, Duriyodhna explained his problem.
Perhaps Lord Krishna said to himself,
' my poor child! you have yourself surrendered to your end. But he lifted Duriyodhna and said! Oh great warrior ! I understand the need for implicit obedience to your great mother ! Yet you should preserve the dignity of a Kashatriya! I would suggest you wear a banana leaf around your loin and meet the Queen. By doing so you would fulfil her wish of being naked, for a banana leaf is no clothing at all.! You will also be saved from shame! The Kaurava king thanked Lord Krishna for the suggestion and left.


**************

The little bird Chirped on the widow sill announcing the birth of another day, important last day of war of Dharma.


Duriyodhna did not wake up, for he never dept. at all! He was eager to see his mother.
Gandari, the mother of the kings and wife of the blind king Dhritarashtra was equally eager to meet her, son.
Blind - folded ever since her marriage to the blind king, she was anxious to welcome her only remaining son. She heard the majestic royal, footsteps of her son and as they came nearer her heart beat fast. ' Glory be to you, Oh great Queen mother of the Kaurava Dynasty!What is the command that I must fulfil? I am awaiting your orders!- Duriyodhna saluted his mother.
Praise be to you my brave son! Today I am going to unveil the cloth that is covering my eyes. This I have not done since the time of my marriage. Today I am going to do it for your sake, and the sake of our great Kingdom. All the powers that I have gathered in the eyes all these years will be bestowed on you from head to be!'

Gandari spoke with overwhelming joy as she opened the piece of cloth covering her eyes. And lo! she saw her son nude but for the banana leaf around his loins-she stared speechless.
So was Duriyodhana- To see the sparkling eyes of his mother which until that day he had not seen.They were shut on the World before her- all the beautiful things and the joy of seeing which she had forfeited for the sake of her son. The great Pathvratha the pinnacle of sacrifice and selflessness!
My beloved son! spoke Ghandari in a shaken voice ' Did you by any chance see Lord Krishna before you come here?'
She knew that nobody else could play this trick than that mischievous one!
' Yes my mother! I did see him and sought his advice, I was confused to stand before you unclothed, though you are my mother.' replied Duriyodhna. Ghandari looked at her son.
Victory or defeat is something that is uncertain, my dear son. May you be blessed for all the good deeds.Lord Krishna has saved the situation.
Ghandari felt defeated , for she thought all the powers that she had stored in her eyes all these years could be vested from head to toe on Duriyodhana . This power would make the body absolutely resistant to any attack, she had thought her son would never die and the Kaurava dynasty would prosper! Poor Ghandari was shocked at seeing the loins covered with a banana leaf for banana leaf would act as a non conductor of rays.

Duriyodhana of course was not aware of this.



# எழுத்துலகில் இளைய நெஞ்சங்கள்




## எமது தமிழ்ப் பாடசாலை

எங்கள் தமிழ்ப்பாடசாலை புறுாட்டோப் கிராமத்தில் அமைந்துள்ளது . எமது தமிழ்ப் பாடசாலை மிகவும் பெரியது . எமது ஆசிரியையின் பெயர் சீதாலட்சுமி சுப்பிரமணியசிவம் . எமது பாடசாலையில் 20 பிள்ளைகள் படிக்கிறார்கள் அதில் ஆண் , பெண் இரு பாலாரும் படிக்கிறார்கள் . எமது மொழியான தமிழை நாங்கள் அங்கே படிக்கிறோம் . வருடம் ஒரு முறை எமது பாடசாலையில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும் . அதில் பிள்ளைகளின் பெற்றோர்களும் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். பாட்டு, நடனம், கதை, வாசிப்பு, பேச்சு ஆகியவற்றுடன் பலவகையான நாடகங்களும் இடம்பெறும் . எமது பாடசாலை ஆரம்பித்து 2 வருடங்கள் முடிவு பெறுகிறது . பாடசாலைக்கு அருகில் ஒரு அழகான சிறுவர் பூங்காவும் உண்டு . அங்கே நாங்கள் பாடசாலை முடிந்ததும் விளையாடுவோம் .

**பூபாலசிங்கம் துசியந்தினி-வயது 12 (புறுாட்டோப் தமிழ்ப்பாடசாலை) சுவிர்சிலாந்து**

## நல்லதோர் வீணை செய்தே .................



தஞ்சாவூரில் ஒரு பலாமரமாக இருந்த நான் , ஒரு இசைக்கலைஞன் கைபட்டு வீணையாகி, கடையில் வைக்கப்பட்டு , பின்னர் விற்கப்பட்டு அழகிய தீவாம் இலங்கை வந்தடைந்தேன். என்னை வாங்கி வந்த என் எஜமானி தங்கள் வீட்டுச் சுவாமி அறையில் அழகான கம்பளத்தில் என்னை வைத்துப் பட்டுப் போன்ற துணியால் எனக்கு நோகாவண்ணம் போர்வையிட்டாள் . தினசரி காலை வேளையில் குளித்து, கோலமிட்டு, கடவுளுக்குப்பூ வைத்து சுமார் ஒரு மணி நேரம் தன் விரல் கொண்டு மீட்டுவாள். அவளுடைய நளினமான விரல்களால் தினமும் புதுப்புது இராகங்களை என்னிடம் மீட்டுவதில் என் எஜமானி அலாதிப்பிரியமுள்ளவள். தன்னுடைய வீட்டுக்கு வரும் நண்பர்கட்கும் மற்றும் உறவினர்கட்கும் என்னை எடுத்து வாசித்துக் காட்டி அவர்களை இசையால் மெய்மறக்கச் செய்வாள். இப்படி என்மீது தன் உயிரையே வைத்திருந்தாள்.

ஒரு நாள் அவள் பாடசாலைக்கு சென்றிருந்த சமயம் அவர்கள் வீட்டில் ஏற்பட்ட எரிவாயு கசிவினானால் வீடு தீப்பற்றிக் கொண்டது. தீயினால் ஏற்பட்ட சூட்டினால் எனது உடல் நிலையும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. பாடசாலையிலிருந்து வீடு திரும்பிய எனது எஜமானி என் நிலை கண்டு கதறி அழுதாள், என்னை எடுத்துச் சென்று பல கலைஞர்களிடம் காட்டி என் உடலில் ஏற்பட்ட வடுக்களைத் திருத்தினாள், ஆனாலும் வெந்து போன என் இதயத்திலிருந்து இன்பகீதம் எழ மறுத்தது. ஆனாலும் என் எஜமானியின் மனதில் நான் வழங்கிய சுகமான இராகங்கள் நிறைந்திருப்பதால், அவள் என்னை இப்பொழுதும் அழகிய கண்ணாடிப் பெட்டியிற் போட்டுவைத்து வீட்டுக்கு வருபவர்களிடம் எல்லாம் என்னைப் பற்றி சொல்ல மறக்க மாட்டாள். நீங்களும் வந்தால் நிச்சயம் உங்களுக்கும் காட்டுவாள் .

**சிவஜனனி சுரேஸ் வயது 14 இந்து மகளிர் கல்லூரி (யாழ்ப்பாணம்)**

# ஆறுமுகநாவலர்

தமிழ் மக்களாகிய நாம் பல்லாயிரம் மைல் கடந்து வந்து மேற்குலக நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நம்மவரில் ஒரு சிலர், நம் ஈழமண்ணின் வாசனை தெரியாது நம் மொழியினை மறந்து அந்நிய மண்ணில் மோகம் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இது நாமாக ஏற்படுத்தியதல்ல. நாம் வாழ்கின்ற சூழ்நிலையால் ஏற்பட்டாலும் கூட, நமது மொழியினை மறந்து நமது கலை கலாசாரத்தினை மறந்து நமது மண்ணை மறந்து, நம்மால் வாழமுடியுமா? எம் ஈழ மாதா எத்தனையோ பெரியோர்களை ஈன்றெடுத்துத் தந்திருக்கின்றாள். இப்பெரியார்கள் வரிசையில் இன்று தமிழ் வளர்த்த பெரியார் சுவாமி ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களைப் பற்றி உங்கள் முன்பேசலாம் என விரும்புகின்றேன்.

நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழ் எங்கே?சுருதி எங்கே?
எவ்வெவரும் ஏத்து புராண ஆகமங்கள் எங்கே?
பல பிரசங்கம் எங்கே?
ஆத்தன் அறிவெங்கே?


என்று கற்றோராலும் மற்றோராலும் பண்டிதராலும் பாமரராலும் போற்றிப் புகழ்ந்நுரைக்கப்படுகின்ற இப்பெரியார் யாழ்பாடிப் பரிசில் பெற்ற யாழ் அன்னையின் நல்லுந்திபோல் மிளிரும் நல்லூராம் தொல்பகுதியில் கண்ணியமிக்க கந்தப்பிள்ளையும் சீலமே உருவான சிவகாமி அம்மையும் செய்து கொண்ட அருந்தவத்தின் பயனாக 1822ஆம் ஆண்டு மார்கழித்திங்கள் 22ஆம்திகதி பிறந்தார். இவருக்கு திண்ணைப்பள்ளிக்கூடம் ஆரம்ப அறிவை அள்ளிக்கொட்டியது. யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரன் கல்லூரி ஆங்கில அறிவை வாரி வழங்கியது. அறிவாற்றல் நிறைந்த ஆறுமுகனார் பலநூல்களை ஆங்கிலமொழியிலிருந்து தமிழிற்கு மொழிபெயர்த்தார். ஆலயங்கள் தோறும் சென்று பல பிரசங்கங்கள் ஆற்றினார். தனது ஆற்றலினால் மக்களுக்குச் சரியான வழிகாட்டினார். தனது நாவன்மையினால் அனைவரையும் ஈர்த்தார். அவரது நாவன்மையே அவரை நாவலர் ஆக்கியது. நாவலர் பெருமான் அவர்கள் எமக்குத்தந்த அழியாத முத்துக்களான பாலபாடம், இலக்கணவினாவிடை, சைவவினாவிடை, இலக்கணச்சுருக்கம், போன்றவை பெரியோர்க்கு மட்டுமன்றி சிறுவர்களுக்கும் பயன்படத்தக்க முறையில் அமைந்திருக்கின்றன.

இவரது சொல்லிலும் செயலிலும், சைவமும் தமிழும் தவழ்ந்தது. உணவிலும் உடையிலும் சைவமும் தமிழும் உறைந்தது. ஜீவகாருண்யத்தைச் சிவமென மதித்தவர். பிரம்மச்சரியத்தைப் பெருமையுடன் ஏற்றவர். ஒழுக்கத்தின் சிகரம். நம் மண்ணிலே பிறந்து தமிழுக்காகவே வாழ்ந்து சமயத்துறவியாகத் தன்னை அர்ப்பணித்த வெற்றிச்சின்னம் படைத்த இப்பெரியாரினை நினைவுகூர்ந்து அவர் வழி நடப்போமாக

(பாரிஸில் நடைபெற்ற உலகச் சைவத்தமிழர் மகாநாட்டில் பேச்சுப்போட்டியில் முதலாம் பிரிவில் முதற்பரிசு பெற்ற பேச்சு )

கனிமொழி பவானந்தராஜா
ஜேர்மனி

# யானையின் பக்தி




முன் ஒரு காலத்தில் கசேந்திரன் என்ற ஒரு யானை இருந்தது. அது ஒவ்வொரு நாளும் குளத்தில் சென்று நீராடும். ஒரு தாமரைப்பூவைப் பிடுங்கும். அந்தப் பூவைக் கொண்டு கோவிலுக்குப் போகும். இறைவனின் பாதத்தில் வைத்து வணங்கும். ஒரு நாள் யானை குளத்தில் நீராடும் போது முதலை அதன் காலைப் பற்றிக் கொண்டது. காலை விடுவிக்க முடியவில்லை. இறைவனை நினைத்து ஆதிமூலமே என்று கதறியது. அப்போது கிருட்ணபரமாத்மா தோற்றினார். யானையை முதலை வாயினின்றும் விடுவித்தார். என்னே பக்தியின் மகிமை! நாங்களும் இறைவனை அன்போடு வணங்குவோம். அவர் எங்களை எந்த நேரத்திலும் காப்பாற்றுவார்.

யாழினி இரகுநாதன் வயது 9
தமிழ்க் கலாசாரக் கழகம், கிங்ஸ்ரன்

# GANESHA UPROOTS KUBERA'S PRIDE





Ganesha entered the dining hall.
Servers! Bring what all you have prepared. Have you cooked enough for all?
10
Yes Sir, more than enough.
It took no time for Ganesha to consume all their preparations.
I am still hungry. Is it all you have?
Please wait. We shall cook again in no time.
Only this much? This is no match for my appetite.
12
The servers got exhausted. They brought baskets of vegetables and fruits.
13
Ganesha did not leave even the uncooked food. He ate up rice, dal and all. The whole kitchen became empty.
Oh! What great feast is this! Even half of my stomach is not full.
15
What else is left here? Only the firewood. Let me swallow that too. That is the way to teach a lesson to Kubera, who wanted to show off his greatness through wealth.
Arrange for fresh preparations.
16
Nothing remains in this city of Kubera.
Kubera humbly prostrated in front of Lord Shiva.
O Lord! My pride is totally uprooted. I wanted to show my greatness in front of you. Ganesha taught me a good lesson.
17
Go and pray to Ganesha.
Kubera went to Ganesha.
Oh Ganesha, I arranged the feast to exhibit my greatness and not out of devotion. Please forgive me.
I am satisfied with a single fruit if offered with devotion.
18
Lord Shiva came there.
Child! Enough of this; don't tease Kubera any further. Have this puffed-rice and satisfy your hunger.
19

திருமுருகன் தேரினிலே வருகின்றான்-அவன்
திருமுகத்தின் அருள்பெறவே வாருங்கள்

# Sri Kannan Stores
## EDMONTON

நயம்!

நம்பிக்கை!

நாணயம்!



உங்களுக்குத்
தேவையான
தமிழ்,ஆங்கில
சஞ்சிகைகள்
தமிழ்,ஹிந்தி,ஆங்கில
வீடியோ,ஓடியோக்கள்
மற்றும்
இலங்கையிலிருந்து
தருவிக்கப்பட்ட
உணவுப்
பண்டங்கள்
உடன் மரக்கறி வகைகள்
ஆகியவற்றை
மலிவு விலையில்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
கொள்வனவு
செய்வதற்கு
நம்பிக்கையோடு
அணுகவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

## ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸ்

249 Fore Street
Edmonton
London
N18 2TY
TEL/FAX 081 884 4979,081 345 6317

25 புது கடை
பலாலி வீதி
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
இலங்கை

திருமுருகன் பவனிவரும் திருநாளதனில்
ஒருதரம் நீர் எமதுகடை வந்தெமது
பொருளதனைப் பாரீர் முருகன்
திருவருளைத் தருவான் நாளும்.

## நம்பிக்கைக்கும் நாணயத்துக்கும் தரத்துக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

# சீலன்ஸ்

எம்மிடம் தரமான
உணவுப்பண்டங்கள், உடன் மரக்கறிவகைகள்
பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஓடியோ, வீடியோ, சீடி
ஆகியவற்றுடன்
மின்குமிழ் இணைக்கப்பட்ட கண்ணைக் கவரும்
கடவுட்திருவுருவப் படங்கள் மலிவு விலையில்
தரத்தோடு கிடைக்கும்

# SEELANS

**332A High Street North**
**Manor Park , London E12 6PH**
**TEL: 081 472 2942, FAX: 470 7284**

# Singham

## graphics

தரத்தில் தன்னிகரற்ற சிறந்த
வர்ணத் தமிழ் ஆங்கில
அச்சுவடிவமைப்புக்கும்

நீண்டகால அனுபவம் பெற்ற
தரமான சொற்கொல்லர்களினால்
உங்கள் விருப்பத்திற்கும்,
கணணியமைப்புக்கும் உகந்த
அச்சுக்கலையின் புத்தம் புதிய
கணணித் தமிழ் எழுத்துக்களுக்கும்

உங்கள் கணணிகளில்
வடிவமைக்கப்பட்ட வேலைகளைத்
தரமான முறையில் பலவர்ணப்
புகைப்படங்களை உள்ளடக்கி
அச்சமைப்புக்கு உகந்த
படச்சுருள்களை குறுகிய
நேரத்தில் செய்துகொள்வதற்கும்

**0181-478 6766**

24 மணி நேரமும் சேவையில்

தேர் ஏறிப் பவனிவரும் திருமுருகா
உன் பாதம் சரணம் ஐயா!



## Studio

**Black & White/Colour**
**Passport Photos**
**(Sri Lankan Embassy Specification)**

**Studio Portrait**
**&**
**Wedding Photography**

உங்கள் மங்கள வைபவங்களை
மங்காத நிழற்படமாகக் காலம்
காலமாகப் பார்த்து மகிழச்
சிறந்த புகைப்படங்களுக்கு
நாடவேண்டிய ஒரே ஒரு இடம்

**Photographic Studio**
**346 High Street North,**
**Manor Park, London E12**
**Tel: 0181-552 9419**

ஐரோப்பாவில் தரமான அச்சுவேலைகளுக்கு

## செல்வம் அச்சகம்

ஆஸ்திரேலியாவில் சிட்னி மாநகரில்
சிறந்த வீடியோ, புகைப்படத் தேவைகளுக்கு
**SVC PRODUCTIONS**
பாலா 02 - 626 3985, சத்தி 02 - 809 0120

திருமுருகன் வீதியிலே வருகிறான்! - அவன்
திருவருளை நாமெல்லாம் பெற்றிடுவோமே!

VARSHI'S FOOD STORE

நியூமோல்டனில் ஒரு தமிழ்க் களஞ்சியம்



இலங்கையிலிருந்தும்
இந்தியாவிலிருந்தும்
இறக்குமதி செய்யப்பட்ட

அனைத்து உணவுப்பண்டங்கள்
உடன் மரக்கறிவகைகள்
பத்திரிகைகள் சஞ்சிகைகள்
ஓடியோ, வீடியோ, சீடி
ஆகியவற்றுக்கு
நாடவேண்டிய தரமான
நம்பிக்கையான ஸ்தாபனம்

VARSHI'S FOOD STORE

Tel: 081- 336 0061

103 Burlington Road, New Malden, Surrey KT3 4LR
(Near Burlington Junior School)

சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் அச்சமைப்பும் வடிவமைப்பும் செய்யப்பட்டு, ஐரோப்பாவில் தரமான செல்வம் அச்சகத்தினரால் இலண்டனில் அச்சிடப்பட்டு சைவ முன்னேற்ற சங்கத்தால் 7.8.1994 அன்று வெளியிடப்பட்டது.